



கனவுகளை நனவாக்குகின்றோம் ...

**அரச ஈட்டு முதலீட்டு வங்கி**

வருடாந்த அறிக்கை 2012

# பொருளடக்கம்


| | |
|---|---|
| நோக்கு, பணி, நிருவன விழுமியங்கள் | 02 |
| நிதிசார் முக்கிய குறிப்புகள் | 03 |
| தலைவரின் செய்தி | 06 |
| பொது முகாமையாளரின் மீளாய்வு | 08 |
| பணிப்பாளர் சபை | 10 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 12 |
| நிதியியல் மீளாய்வு | 14 |
| உற்பத்திகளும் சேவைகளும் | 16 |
| மனித மூல வளங்கள் | 17 |
| இடர் முகாமைத்துவம் | 20 |
| நிருவன ஆளுமை | 27 |
| வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பில் பணிப்பாளரின் அறிக்கை | 55 |
| வங்கியின் உள்ளக கட்டுப்பாடு மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை | 57 |
| நிருவன சமூக பொறுப்புணர்வு | 60 |
| பணிப்பாளர் அறிக்கை | 62 |
| சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை | 64 |
| சபையின் கணக்காய்வு குழு அறிக்கை | 65 |
| பணிப்பாளர்களின் பொறுப்புகளின் கூற்று | 67 |
| கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை | 68 |
| நிதி நிலமையின் கூற்று | 72 |
| வருமான கூற்று | 73 |
| பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று | 74 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 75 |
| கணக்கீட்டு கொள்கைகள் | 76 |
| நிதியில் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 87 |
| மூலதன போதுமை | 113 |
| வருமானத்தின் மூலங்களும் பயன்பாடும் | 114 |
| பத்து வருட சுருக்கம் | 115 |
| பெறுமதி கூட்டப்பட்ட கூற்றுகள் | 116 |
| நிருவன தகவல்கள் | பின் புறஅட்டையின் உட்பக்கத்தில் |

# க ன வு க ளை  ந ன வா க் கு கி ன் றோ ம். . .

நாட்டிற்கான 80 வருட சேவையில் ... உங்கள் கனவுகளை நனவாக்கும் விதத்தில் ... எமது மக்களுக்கு வீடுகளை வழங்கும் முன்னணி பங்கேற்பாளர்களாக ... எமது வங்கியின் பலம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

அசுமுவ இலாபத் தன்மையை எய்துவதற்கு நீண்ட தூர, கடினமான பாதையில் பயணித்து வந்துள்ள அதே நேரம், இலங்கை பிரஜைகளாகிய எமது வாடிக்கையாளர்களுக்கு, அவர்களுக்கே உரிய சொந்த கிடைக்கக் கூடியதான வீடுகளை நிர்மாணித்துக் கொள்ளும் கனவையும் வழங்கியுள்ளது.

எமது நாட்டிற்கு குடியிருப்புகளை வழங்கும், எமது முக்கிய தொழிலுக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவளிக்கும் அதே நேரம் எதிர்வரும் ஆண்டுகளில், உட்கட்டமைப்புகளை முன்னேற்றும் அரசாங்கத்தின் தேசிய திட்டத்திற்கு துணையாக இருக்கும் வகையில் எமது நோக்கெல்லையை விஸ்தரிப்பதாலும் ஈடுபடுவோம். அதற்கென நாங்கள் எமது விரிவடைந்து வரும் வாடிக்கையாளர் தளத்தை அணுகுவதற்காக எமது வலையமைப்பையும் விரிவாக்குவோம். எமக்கென பொருத்தமாக தயாரிக்கப்பட்ட நிதியில் உற்பத்திகளையும்/தீர்வுகளையும் இதற்கு பயன்படுத்துவோம்.

சிறு நிதியிடல்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்கள், விவசாயத் துறைகள் என்பவற்றின் நிலையான வளர்ச்சிக்கும், விரிவாக்கத்திற்கும் உதவும் வகையில், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பொது கூட்டாளியாக இருக்கும் எமது பணியில், இத்துறைகளின் நிலையான வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு தேவைப்படக் கூடிய மூலதன செலவுகளை வழங்குவதற்கு, எமது விரிவாகிவரும் கிளைவலையமைப்பு தயாராகவுள்ளது.



# நோக்கு

இலங்கையில் வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி நிதியிடலின் முன்னோடியாக இருப்பது.

# பணி

முதன்மை வீடமைப்பு நிதி நிறுவனமாக எமது நிலைமையை பலப்படுத்தி, எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அவர்களது நிதிசார் தேவைகளுக்கு ஏற்றவாறு சிறந்த நிதிசார் தீர்வுகளை வழங்குவதற்கும் எமது வைப்பாளர்களுக்கு சிறந்த பாதுகாப்பு மற்றும் நெகிழ்ச்சித்தன்மையுடன் கவர்ச்சிகரமான வருமானங்களை வழங்குவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். எமது ஊழியர்களுக்கு வியக்கத்தக்க தொழில் வாய்ப்புக்களையும் வெகுமதிகளையும் வழங்குவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். எமது பங்குதாரர்களுக்கு நாம் சிறந்த வருவாய்களை அளிக்க முயற்சிக்கின்றோம். சமூகத்திற்கு அவர்களது வாழ்வுடன் நெருக்கமான பொறுப்புள்ள கூட்டாண்மை பிரஜையாக இருப்பதோடு அரச ஒழுங்குறுத்துகையாளர்களுக்கு தேசிய அபிவிருத்தியில் நாம் ஒரு பங்காளராகவும் கடமையாற்றுகின்றோம்.

# நிருவன விழுமியங்கள்

எமது வியாபாரத்தை மேற்கொள்வதில் நாங்கள் உடனடியாக ஈடுபடுவதும், படைப்பாற்றலுடன் செயற்படுவதும் ஆகியவை தொடர்பில் அர்ப்பணிப்புடையவர்களாக தொழிலாற்றுவதும்.

நம்பிக்கை/நேர்மை/பொறுப்பேற்றல்/தொழில்திறன்/நம்பகத்தன்மை/போட்டி/வினைத்திறன் மற்றும் சமூகப் பொறுப்புடமையுடன் செயலாற்றுவதும்.



# நிதிசார் முக்கிய குறிப்புகள்

| | 2012 | 2011 | மாற்றம் |
|---|---|---|---|
| | ரூ. மில். | ரூ. மில். | % |
| வட்டி வருமானம் | 2,931 | 2,611 | 12.26 |
| வட்டிச் செலவினம் | 1,725 | 1,214 | 42.12 |
| தேறிய வட்டி வருமானம் | 1,206 | 1,397 | (13.68) |
| வரிக்கு முந்திய இலாபம் | 430 | 689 | (37.51) |
| வரிவிதிப்புக்கள் | 158 | 178 | (11.50) |
| வரிக்குப்பின் இலாபம் | 272 | 510 | (46.60) |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | 297 | 92 | 221.29 |
| கடன்களும் முற்பணங்களும் | 18,454 | 16,309 | 13.15 |
| மொத்தச் சொத்துக்கள் | 22,358 | 20,509 | 9.02 |
| வாடிக்கையாளர் வைப்புக்கள் | 17,237 | 15,088 | 14.24 |
| கடன் பெறுகைகள் | 734 | 668 | 9.83 |
| பங்குதாரர்களின் நிதி | 3,810 | 3,643 | 4.57 |
| **விகிதப் பகுப்பாய்வு** | | | |
| **இலாபத்தன்மை பகுப்பாய்வு** | % | % | |
| தேறிய வட்டி எல்லை | 5.39 | 7.26 | (25.70) |
| பங்கு மூலதனம் மீதான வருவாய் | 7.31 | 14.67 | (50.16) |
| சராசரி சொத்துகள் மீதான வருவாய் | 2.01 | 3.58 | (43.89) |
| **மூலதன போதுமை** | | | |
| பங்கு மூலதனம் / மொத்தச் சொத்துகள் | 17.04 | 17.76 | (4.08) |
| பங்கு மூலதனம் / மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 20.66 | 22.34 | (7.58) |
| அடுக்கு 1 | 33.22 | 39.94 | (16.82) |
| அடுக்கு 11 | 33.22 | 39.94 | (16.82) |
| **திரவத் தன்மை** | | | |
| திரவ சொத்து விகிதம் | 21.98 | 20.04 | 9.68 |
| வைப்பு/மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 93.40 | 92.51 | 0.96 |
| கடன் பெறுகைகள்/மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 3.98 | 4.10 | (2.94) |
| **தரப்புடுத்தல்** | | | |
| **சொத்துத் தரம்** | A(lka) | A(lka) | |
| செயற்படாத கடன்களும்/மொத்த கடன்களும் முற்பணங்களும் | 37.42 | 36.79 | 1.69 |
| மொத்த சொத்துகளுக்கு கடன்களும் முற்பணங்களும் | 82.54 | 79.52 | 3.79 |

கடன் பகிர்வுகள்

# ரூ.4.9 பில்லியன்

# முகாமைத்துவ

## தகவல்கள்

கடந்த ஆண்டு அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்கு அனேக சவால்களை கொண்டு வந்த ஒரு ஆண்டாக அமைந்தது. எனினும் வங்கி ஒவ்வொரு ஆண்டிலும் செயலாற்றல்களை அடைவதில் அதன் அர்ப்பணிப்பு மற்றும் கடப்பாடுகளினூடாக வெற்றிகரமாக மீண்டெழுந்து வந்துள்ளது. எமது குழுவும் தொடர்ந்து வலுவடைந்து வருகின்றது. ஊக்கமுள்ள முகாமைத்துவத்தின் ஊடாக இலங்கையில் அதிகமானோரால் தேர்ந்தெடுக்கப்படும் வீடமைப்பு கடன் வழங்குனர் என்கின்ற எமது நோக்கத்தை அடைவதிலும் தற்போது நெருங்கி வந்திருக்கின்றோம்.



# தலைவரின் செய்தி



"எமது வாடிக்கையாளர்களின் மனதில் வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி நிதி வழங்கும் முக்கிய சேவை வழங்குனராக எம்மை மீளமைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எமக்கு 2012 ஆம் ஆண்டு மாற்றங்களின் ஆண்டாக இருந்தது."

## தலைவரின் செய்தி தொடர்ச்சி

வீடமைப்பு மற்றும் ஆதன ஈட்டுத் துறையில் 80 ஆண்டுகளாக பாராட்டும்படியான சாதனையை ஏற்படுத்தியுள்ள பழமையான வங்கிகளில் ஒன்றாக உங்கள் வங்கியுள்ளது. பேரண்ட பொருளாதார சுற்றாடலின் சவால்களுக்கு எதிராகவும், 2012 ஆம் ஆண்டின் போது நிலவிய இறுக்கமான நாணய கொள்கைக்கு மத்தியிலும், நிலையானதும், புத்துயிர் பெறுவதுமான வளர்ச்சியை அது காட்சிப்படுத்தியது.

2010 இலும் 2011 இலும் 8%மா நிலவிய செழிப்பான வளர்ச்சி வீதத்தின் பின்னர், உலக அளவிலும் உள்ளூர் சந்தையிலும் நிலவிய நிச்சயமின்மையின் காரணமாக, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 6.4% மாக கீழ் நோக்கி இழுக்கப்பட்டது. ஐரோப்பிய யூனியன் ஆட்சி உரிமை நெருக்கடிகளும், உதயமாகிவரும் பொருளாதாரத்தின் குறைவான வளர்ச்சியின் காரணமாகவும் 2012 இல் 3.8% இலிருந்து 3.3% மாக உலகப் பொருளாதாரத்தின் தரப்படுத்தல் கீழ் நோக்கியமைந்தது. இது நாட்டின் வளர்ச்சி வீதத்தை மந்தமாக்கும் தரப்படுத்தல் இடருக்கு முக்கிய காரணமாக அமைந்தது. நடப்புக் கணக்கின் பற்றாக்குறையை அகன்றதாக்குவதாக ஐரோப்பிய யூனியனுக்கான ஏற்றுமதி 9.2% இனாலும் ஐஅநா வின் ஏற்றுமதி 4% இனாலும் வீழ்ச்சியடைந்தது இதற்கான சான்றாகும். ஏற்றுமதி வருமானத்தின் மந்தமான மீட்சி, இறக்குமதிகளின் உயர் அழுத்தம் என்பவற்றின் காரணமாக மோட்டார் வாகனங்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களின் தீர்வைகளில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்புகள் ஏற்படாததை அவதானிக்க முடிந்தது. செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கும் திறமையான அபிவிருத்தி கொள்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும், உலக பொருளாதாரத்தில் நிலவும் நிச்சயமின்மைகளின் எதிர்மறையான தாக்கத்தை இலகுவாக்கியிருப்பதற்கும், கௌரவ ஜனாதிபதி அவர்களின் தலைமைத்துவத்திற்கு நன்றி கூற வேண்டும்.

நிச்சயமற்ற சந்தை நிலைமைகளிலும் நாட்டின் நிதிச் சந்தையில் மூலதனம் மற்றும் திரவத்தன்மை நீண்ட/நடுத்தர வளர்ச்சியை காண்பித்துள்ளது. முன்னைய ஆண்டின் ரூபா 4.2 டிரிலியனுடன் ஒப்பிடும் போது துறையின் மொத்த சொத்துகள் 20% இனால் அதிகரித்து ரூபா 05 டிரிலியனை எய்தியுள்ளது. கடன் வீதங்களின் மேல்நோக்கிய அழுத்தங்களுக்கு மாறாக. கடன்களும் முற்பணங்களும் 17% இனால் அதிகரித்தன. 2012 ஆம் ஆண்டின் போது நிலவிய 20% மான வளர்ச்சி வைப்புகளுக்கு இருந்த வீக்க நிலை அழுத்தங்கள் மற்றும் பாரிய போட்டிகள் என்பவற்றிற்கு சான்றாகவுள்ளன.

வைப்புகளின் மேல் நோக்கிய அழுத்தம் தேறிய வட்டி எல்லையை கீழ் நோக்கி இழுத்துள்ளது. இது வங்கியின் இலாபத்தன்மையின் மந்தகதியான வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது. வரிக்கு பிந்திய இலாபமாக வங்கி ரூபா 272 மில்லியனை எய்தியுள்ளது. உள்ளீடுகை சட்டத்தினால் நிறைவேற்றப்பட்ட நோக்கெல்லையின் மட்டத்தைவிட ரூபா 20.5 பில்லியனிலிருந்து 22.3 பில்லியனாக 9% இனால் வங்கியின் மொத்த சொத்துத் தளம் அதிகரித்துள்ளது. கடன்களும் முற்பணங்களும் இன் தேறிய அதிகரிப்பு 2.15 பில்லியனாக 13% வளர்ச்சியை அடையாளமிட்டது. ஏனைய பிரிவுகளுக்கு சேவையை விஸ்தரிப்பதற்கு நாங்கள் துறைகளை பண்முகப்படுத்தியதுடன், சமூகத்தின் மதிப்பு மிக்க கூட்டாளிகளுக்கு புதிய உற்பத்திகளின் கவர்ச்சிகரமான அம்சங்களை அறிமுகப்படுத்தவதிலும் உறுதியாக இருக்கின்றோம். உதாரணமாக வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதற்கும், புதுப்பிக்கக்கூடிய சக்தி பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கும் என வங்கி, சூரிய சக்தியில் இயங்கும் மின்சார உற்பத்தியை நிறுவுவதற்கான, மூலதன செலவுகளுக்கு நிதியிடும் புதிய கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் வளர்ச்சி உபாயங்கள் என்பவற்றுடன் எதிர்வரும் ஆண்டுகளில் ஒரே வரிசையில் ஒத்ததாக, உயர்ந்த வீதங்களில், சிறிய நிதி, சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை, மற்றும் விவசாயம் போன்றவை இடையறாது வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது, இந்தத் துறைகளின் நிலையான வளர்ச்சியை துரிதமாக்குவதற்கு தேவையான மூலதன செலவை சமாளிப்பதற்கு நிதித்துறையில் மேலதிகமான பொறுப்புகளை பெற்றுத் தந்தது. ஒரு அரச வங்கி என்ற வகையிலும் தேசத்தின் மீதான அக்கறையில் மதிப்பு மிக்க பங்காளிகள் என்ற வகையிலும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்கள் மற்றும் ஏனைய துறைகளின் நிதியியல் தேவைகளின் வளர்ச்சிக்கும் பொருத்தமாக தயாரிக்கப்பட்ட நிதியியல் தீர்வுகளுடன். எமது கிளை வலயமைப்பை விரிவாக்கும் ஆரம்ப முயற்சிகளையும் வங்கி ஏற்கனவே எடுத்துள்ளது.

சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, நிதியில் உதவிகளை வழங்குவதனூடாக. நாட்டின் வீடமைப்பிற்கான வங்கி எனும் உண்மையான கருப்பொருளுடன், ஒரு அரச வங்கி என்ற வகையில் எமது சேவைகளை வழங்கும் கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்றோம். நாட்டின் ஈடுபாடுகளில் செல்வாக்கு மிக்க பங்காளிகளாக நாங்கள் தொடர்ந்து சேவையாற்றுவதில் உறுதியாக இருக்கின்றோம். வங்கி அனேக சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நாட்டின் சேரி வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும், பாரிய கருத்திட்டங்களில் சிலவும் அவற்றில் உள்ளடங்கும்.

### நன்றியுரை

வங்கியின் தலைவர் என்ற வகையில் எனது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஆதரவளித்த அதி மேதகு ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான கௌரவ மகிந்த ராஜபக்ச, பிரதி நிதி அமைச்சர், திறைசேரி செயலாளர். இலங்கை மத்திய வங்கியின் ஆளுணர், மற்றும் அஈமுவ யின் பணிப்பாளர் சபை, பொது முகாமையாளர்/பிநிஅ மற்றும் அஈமுவ யின் பணியாட் தொகுதியினர் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**ஜகத் வெள்ளவத்த**
தலைவர்

# பொது முகாமையாளரின் மீளாய்வு



“LSB துறையினதும், வங்கித் தொழில் துறையினதும் வைப்பின் வளர்ச்சி முறையே 10% ஆகவும் 17% ஆகவும் இருந்ததற்கு எதிராக 2012 ஆம் ஆண்டின் வைப்புக்களின் வளர்ச்சி 14% மாக இருந்தது, வங்கியின் மாபெரும் சாதனையாகும்”

## பொது முகாமையாளரின் மீளாய்வு தொடர்ச்சி

2012 அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்கு மற்றுமொரு சவாலான ஆண்டாக இருந்தது. உச்ச மட்டம், அடிமட்டம் இரண்டிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை வைப்புகளின் மீதான உயர் வட்டி வீதங்கள் காண்பித்தன. எவ்வாறாயினும், முக்கியமாக எமது மதிப்பிற்குரிய வாடிக்கையாளரின் வீடுகளுக்கான கனவை உண்மையாக்குவதற்கு நிதி உதவிகளை வழங்குவதற்காக எமது வளர்ச்சியை நாங்கள் தொடர்ந்தும் நிலையானதாக விருத்தி செய்து கொண்ட அதே நேரம், ஏனைய பாரிய வரியிறுப்பாளர்களுடன் ஒப்பிடக் கூடியதாக நாட்டின் பொருளாதாரத்திற்கும் எமது பங்களிப்பை வழங்கினோம். வைப்புகளைத் திரட்டும் நோக்கத்துடன், வாடிக்கையாளர்களை அணுகுவதை பலப்படுத்தவதற்காகவும், கடன் உற்பத்திகளை மேம்படுத்தவதற்காகவும், முக்கியமாக அறவீட்டு நடைமுறைகளை முடுக்கி விடுவதற்காகவும், கிளை வலையமைப்பை விரிவுபடுத்தினோம். அவ்வாறே நாங்கள் மனித மூல வளம் மற்றும் திறமைகளை அபிவிருத்தி செய்வது என்பவற்றில் நிலவிய இடைவெளிகளை நிரப்புவதிலும் அதிக கவனம் செலுத்தினோம். அதனூடாக போட்டித்தன்மையான வாய்ப்புகளை இனங்கண்டு திறமைகளை சீரமைப்பதனூடாக மேலும் சிறந்ததும், தரமானதுமான சேவைகளை வழங்கினோம்.

2012 இல், வங்கித் தொழில் சராசரியான 38% இற்கும், எல்எஸ்பி துறை செயற்பாடான 18% இற்கும் எதிராக, சந்தையில் உருவாகிய மிக உயர்ந்த வீதங்களினால் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, வங்கியின் வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள, முதலீடுகள் மீதான வட்டியும், சிறு வர்த்தக கடன்கள் மீதான வட்டியும் ரூபா 320 மில்லியனாக அதிகரித்து 12.3% வளர்ச்சி வீதத்தைக் காண்பித்தன.

சந்தையில் நிலவிய மிக உயர்ந்த வட்டி வீதங்களினால் திரவ சொத்து விகிதத்தை பேணுகின்ற வங்கியின் முயற்சிகளின் பெறுபேறாக தேறிய வட்டி வருமானத்தின் மீது தாக்கம் ஏற்பட்டது. இதன் விளைவாக, சந்தையில் உருவான போட்டிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்த அதே நேரத்தில் வைப்பு வாடிக்கையாளர்களை கவருவதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்கும், வங்கி உயர்ந்த வட்டிகளை கொடுக்க நேர்ந்தது. மறுபக்கத்தில் ஒப்பீட்டளவில், கடன் வீதங்களை நாங்கள் அதிகரிக்கவுமில்லை. கடன்களும் முற்பணங்களுக்கும் என வாடிக்கையாளர்களை அதிகரிக்கும் உபாயத்தை நாங்கள் பின்பற்றவும் இல்லை. எவ்வாறாயினும், ஈடு மற்றும் ஊசேநி கடன்களும் முற்பணங்களும் என்பவற்றின் அளவு எதிர்பார்க்கப்பட்டளவு அதிகரிக்கவுமில்லை. மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது நிலவிய கொள்கைக் கட்டுப்பாடுகள், மற்றும் ஏனைய சூழ்நிலைகளின் கீழ், அவர்களுக்கு கடன்கள் கிடைத்த போது, மிதமான இடருடன் கூடிய வீடமைப்புத் தேவைகளுக்கான சுயதேவைக் கடன்களை வழங்குவதனூடாக, சமூகத்திற்கு சேவையாற்ற வங்கியினால் இயலுமாயிருந்தது.

2011 ஆம் ஆண்டின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டில் வட்டிச் செலவின் அதிகரிப்பு ரூபா 511 மில்லியனாக இருந்தது. இது 2012 இல் இலாப வளைவு வரை கோடு கீழ் நோக்கி செல்லும் திருப்பு முனையாக அமைந்தது. 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தேறிய வட்டி வருமானம் ரூபா 191 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது. இது 14% வளர்ச்சிக்கு சமனானது என்பதுடன் தேறிய வட்டி எல்லையை, 2011 இன் 7.3% துடன் ஒப்பிட 5.4% மாக்கியது.

வங்கியின் தேறிய வட்டி எல்லை மீது தாக்கத்தை ஏற்படுத்திய கடுமையான சந்தை அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்த நிலையில் 2012 இன் இறுதியில், ரூபா 17,236 மில்லியன் பெறுமதியான வைப்புகளை வங்கியினால் பதிவு செய்ய முடிந்தது. எல்எஸ்பி துறையினதும், வங்கித் தொழில் துறையினதும் வைப்பின் வளர்ச்சி முறையே 10% மாகவும் 17% மாகவும் இருந்ததற்கு எதிராக 2012 அம் ஆண்டில் வைப்புகளின் வளர்ச்சி 14% மாக இருந்தது வங்கியின் மாபெரும் சாதனையாகும்.

ஏனைய வங்கிகள் வட்டி வீதங்களை அளிக்கும் போது வைப்புகளை அதிகரிப்பதற்காகவும் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்வதற்காகவும். உயர்ந்த வட்டி வீதங்களை வங்கி கொடுக்க வேண்டியுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைவாக 1 ஜனவரி 2012 இலிருந்து நடைமுறைக்கு வந்த பதவியின் செலவுகளின் அதிகரிப்பும் செலவுகளை உயர்த்திய மற்றுமொரு காரணமாகும்.

2011 இன் 45% இலிருந்து 63% மாக 2012 ஆம் ஆண்டில் வங்கியின் வருமான விகித கிரயம் அதிகரித்தது. எவ்வாறாயினும், 2012 இல் வரிகளாக தேசிய வருமானத்திற்கு ரூபா 429 மில்லியனை வங்கி பங்களிப்பு செய்தது. முறையே 20% மாகவும் 10% மாகவும் இருந்த வங்கித் தொழில் மற்றும் எல்எஸ்பி துறை வளர்ச்சிக்கு எதிராக 2012 இல் வங்கியின் சொத்துத் துறை 9% இனால் வளர்ச்சியடைந்து, ரூபா 22,359 மில்லியன் எய்தியது.

2012 ஆம் ஆண்டின் போது சிறு வர்த்தக கடன்கள் ரூபா 18,453 மில்லியனாக அதிகரித்து 13% வளர்ச்சியை பிரதிநிதித்துவப்படுத்தியது. விவசாயத்துறைக்கு ரூபா 458 மில்லியனும், சுற்றுலாதுறைக்கு ரூபா 49 மில்லியனும் வீடமைப்புத் தேவைகளுக்கென ரூபா 17,946 மில்லியனும் வங்கியினால் கடன்களாக வழங்கப்பட்டுள்ளன. வீடமைப்பு நோக்கங்களுக்கான கடன்கள் 3 பாரிய வகைப்படுத்தல்களின் கீழ் வழங்கப்படுகின்றன. ஈடு, ஊ.சே.நி. மற்றும் வழங்கப்படும் பிணையங்களின் அடிப்படையிலான சுய தேவைக்கடன்கள் என இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஸ்திரமான கடன் மதிப்பீட்டு நடைமுறைப்படுத்தலின் மத்தியிலும். வங்கியின் செயற்படாத கடன்களின் விகிதம் தொடர்ந்தும் உயர்வானதாகவே காணப்பட்டது.

முறையே 5% மாகவும் 10% மாகவும் இருக்க வேண்டும் எனும் மிகக்குறைந்த ஒழுங்கமைப்பு தேவைப்பாட்டிற்கும் அதிகமாக வங்கியின் அடுக்கு 1 மற்றும் அடுக்கு 11 மூலதனம் இருக்கின்றது. திரவ சொத்து விகிதமும் மிகக் குறைந்த நியம தேவைப்பாட்டை சந்திக்கக் கூடியதாக 20% இல் இருந்தது. ஏனைய வங்கிகளுக்கு இணையாக 01 ஜனவரி 2012 இலிருந்த நடைமுறைக்கு வருமாறு, இலங்கை நிதியியல் அறிக்கையிடும் நியமத்தையும், கணக்கீட்டு நியமத்தையும் வங்கி கைகொண்டது. ஓய்வூதிய நன்மைக்காக கணக்கீட்டு மதிப்பீட்டு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. 31 டிசம்பர் 2012 அன்றுள்ளவாறான நிதியியல் கூற்றுகளில் அவசியமான சீராக்கங்களும்/வெளிப்படுத்தல்களும் செய்யப்பட்டுள்ளன.



**செல்வீ டப்ளியு. ஜே. கே. கீகனகே**
பதில் பொது முகாமையாளர்

# பணிப்பாளர் சபை



7 4 5 1

**1. திரு. ஜகத் வெள்ளவத்த**
*தலைவர்*

திரு. ஜகத் வெள்ளவத்த மே மாதம் 2010ல் அ.ஈ.மு. வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்டார். 2013ல் அ.ஈ.மு. வங்கியின் தலைவராக மீள் நியமிக்கப்பட்டார். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவராகவும், இலங்கையின் வெளிநாட்டு தொழில் பணியகத்தின் தலைவராகவும் அவர் கடமையாற்றியதிலிருந்து கிடைத்த அனுபவத்தை அவர் அ.ஈ.மு. வங்கிக்கு கொண்டு வந்துள்ளார். திரு. வெள்ளவத்த கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து சமூக விஞ்ஞான துறையில் முதுகலைமாணி மற்றும் கௌரவ பட்டங்களை பெற்றிருக்கின்றார். இவர் தற்போது சமூக விஞ்ஞான துறையில் கலாநிதி பட்டம் பெறுவதற்கு படிக்கின்றார். கொழும்பு பல்கலைக்கழக்கத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் இருக்கின்றார்.

**2. திரு. டி. வீரசேகர**
*பணிப்பாளர்*

திரு. வீரசேகர 2006 லிருந்து அ.ஈ.மு. வங்கியன் பணிப்பாளராக இருக்கின்றார்.. 2009, 2010 மற்றும் 2013ம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக பணிப்பாளாராக மீள்நியமதிக்கப்பட்டார். இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக அனுபவம் உள்ளவர். திரு. வீரசேகர பிரதேச கல்வி பணிப்பாளராகவும் தற்போது சேவையாற்றுகின்றார்.

**3. திரு. வி. எஸ். பண்டார**
*பணிப்பாளர்*

திரு. பண்டார சட்டத்தரணி, பொது நொத்தாரிசு மற்றும் சத்தியப்பிரமான ஆணையாளர் ஆகிய பதவிகளில் இருக்கின்றார். 2010ல் அ.ஈ.மு. வங்கியின் பணிப்பாளராக நியமனம் பெற்றார். 2013ல் சபைக்கு மீள் நியமிக்கப்பட்டார். குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதிச் சட்ட துறையில் B.A. கௌரவ பட்டம் பெற்றுள்ளார். பீபில்ஸ் லீசிங் கம்பனியின் பணிப்பாளராக பணியாற்றிய போது கிடைத்துள்ள முகாமைத்துவ திறமைகளையும் அனுபவங்களையும் திரு. பண்டார பெற்றிக்கின்றார்.

**4. திரு. எம். வை. எம். ஷாம்ராஸ் யெஹியா**
*பணிப்பாளர்*

திரு. யெஹியா 17 மே 2010ல் அ.ஈ.மு. வங்கியின் முதலீட்டு சபைக்கு நியமிக்கப்பட்டார். 2013ல் சபைக்கு மீள் நியமனம் பெற்றார். 12 ஆண்டுகளுக்கும் அதிகமாக தனியார் துறையில் ஈடுபட்டுள்ளார். செலிங்கோ ஸ்டொக் புரோகர்ஸ் மற்றும் கொண்டனன்டல் பிஸ்னஸ் எக்ஸ்சேஞ் ஆகியவற்றில் தற்பொழுது பணிப்பாளராக இருக்கின்றார்.



3 8 2 6

**5. திரு. வி. எம். அமீன்**
*பணிப்பாளர்*

திரு. வி. எம். அமீன், இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் துணை அங்கத்தினராகவும் முகாமைத்துவ பட்டய கணக்காளர் (ஐ.இ) நிருவனத்தின் அங்கத்தவராகவும் இருக்கின்றார். வர்த்தக பட்டப்பின்படிப்பை பெற்றிருக்கின்றார். திரு. அமீன் அரசாங்க சேவையில் 2 தசாப்தங்களுக்கும் அதிகமான அனுபவத்தையும் பெற்றிருக்கின்றார். மேலும் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தில் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் சேவையாற்றுகின்றார்.

**6. திரு. சரக் ஹேசிந்த்**
*பணிப்பாளர்*

திரு. ஹேசின்த், 14 ஒக்டோபர் 2011 அ.ஈ.மு. வங்கியின் பணிப்பாளர் சபையில் நியமிக்கப்பட்டார். முகாமைத்துவ துறையில் உயர் தேசிய டிப்ளோமா பெற்றுள்ளார். இலங்கை கணக்கீட்டு தொழில் நுட்டபவியலாளர்கள் நிறுவனத்தின் அங்கத்தினராகவும் இலங்கை பொது நிதி மற்றும் அபிவிருத்தி கணக்கீடு நிறுவனத்தின் அங்கத்தினராகவும் இருக்கின்றார். திரு. ஹேசின்த் தற்போது கால்நடை. மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி சபையின் பிரதம கணக்காளராகவும் இருக்கின்றார்.

**7. திரு. எஸ். எல் ஜி. பந்துசிறி**
*பணிப்பாளர்*

திரு. பந்துசிறி, பிஎஸ்சி பட்டம் பெற்றவர். தற்போது விவசாய அமைச்சில் பிரதம கணக்காளராக பணியாற்றுகின்றார். 21 ஜூன் 2012ல் அ.ஈ.மு. வங்கியில் நியமிக்கப்பட்டார்.

**8. திரு. பி. எஸ் எல் டப். பெரேரா**
*பணிப்பாளர்*

திரு. பெரேரா சமூகவியலில் முதுகலைமாணி பட்டம் பெற்றிருக்கின்றார் அ.ஈ.மு. வங்கியில் சேவையாற்றும் அதேநேரம் கட்டிட நிர்மானம் பொறியியற் துறை சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றுகின்றார்.

# சிரேஷ்ட முகாமைத்துவம்



**திருமதி. டி.கே. ஹெடெல்லே ஆராச்சி**
*உ.பொ.மு. (கடன்)*

**திரு. ஏ.டி.என். தர்மரத்ன**
*உ.பொ.மு. (மதிப்பீடு)*

**திருமதி. எஸ்.வி.பி. கூரே**
*பிரதம முகாமையாளர் (சட்டம்)*

**திரு. ஈ.எம்.ஆர்.எல். முனவீர**
*உ.பொ.மு. (நிதி)*

**திரு. கே.எல்.என்.ஏ. பெரேரா**
*பதில் பிரதம உள்ளக கணக்காளர்*

**திரு. கே.எம்.ஜே.எஸ். கருணாதிலக்க**
*உ.பொ.மு. (மனு & லொஜிஸ்டிக்)*

**திரு. டி.எம்.ஜே. விக்ரமசேகர**
*உ.பொ.மு. (கடன்)*

**செல்வி. டப்.ஜே.கே. கீகனகே**
*பதில் பொது முகாமையாளர்*



**திருமதி. கே.பி.கே.எச்.டி. பெரேரா**
*பிரதம முகாமையாளர் (அறவீடுகள்)*

**திரு. எஸ்.எஜ் விஜேடோரு**
*பிரதம முகாமையாளர்*
*(மனிதவளம் லொஜிஸ்டிக்)*

**திரு. ஆர்.பி.யு. பதிரன**
*உ.பொ.மு (அறவீடுகள்)*

**திரு. எஸ் விஜேதுங்க**
*உ.பொ.மு.(IT)*

**திரு. ஐ.என். பெர்னான்டோ**
*பிரதம முகாமையாளர் (மதிப்பீடு)*

**திருமதி. ஜே.ஐ. சேனாநாயக்க**
*உ.பொ.மு.*
*(இடர் முகாமைத்துவம்)*

**திருமதி. பி.ஏ.சி.கே. அமரசிங்க**
*உ.பொ.மு. (சட்டம்)*

**திருமதி. எஸ். ஆர். டி. சில்வா**
*பிரதம முகாமையாளர்*
*(சட்டம்)*

**படத்தில் இல்லாதவர்கள்**

1. **திரு. டப். எம். தயாசிங்க**
   *பொது முகாமையாளர்*

2. **திரு. ஐ. கே. காமினி**
   *பிரதம முகாமையாளர் (கடன்)*

# நிதியியல் மீளாய்வு

சந்தையில் நிலவிய வட்டி வீதங்களின் அதிகரிப்பின் மத்தியிலும் 2012 ஆம் ஆண்டின் போது அரச ஈட்டு முதலீட்டு வங்கி அதன் அதிமுக்கிய வளர்ச்சியை தொடர்ந்து எய்தியது. வலுவான சொத்து முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் திறமையான சந்தை அடிப்படையிலான உத்திகள் என்பவையூடாக, நிதிச் சந்தையின் சவால்களை வங்கி வெற்றிகரமாக சந்தித்தது.

இலங்கை கணக்கீடு நியமத்திலிருந்து இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் மாற்றமடைந்ததால், அறிக்கையிடல் அமைப்பில் ஏற்படுத்திய சில மாற்றங்கள் வங்கித் தொழிலை பாதித்தன. நிதியியல் அறிக்கையிடல் நியமம் ஆட்சியின் கீழ் வெளியிடப்படும் முதலாவது நிதியியல் மீளாய்வாக இருப்பதினால் தொடர்ச்சியை பேணுவதற்காக இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமத்தின் கீழ் 2011 இன் நிதியியல் கூற்றுகளை சீராக்குவதற்கு ஒப்பீடுகளை மேற்கொள்வதற்கென விளக்கங்களும், பகுப்பாய்வுகளும் வழங்கப்பட்டுள்ளன.

### இலாபத் தன்மை

முன்னைய ஆண்டிலும் குறைவாக, 2012 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு பின்னரான இலாபமாக ரூபா 275 மில்லியனை அரச ஈட்டு முதலீட்டு வங்கி பதிவு செய்தது. எவ்வாறாயினும், சந்தையில் நிலவிய வட்டி வீதங்களின் அதிகரிப்பினால் ஏற்பட்ட உயர்ந்த வட்டிச் செலவுகள் இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணமாயமைந்தன.

### வட்டி வருமானம்

சந்தையில் நிலவிய வட்டி வீதங்களின் வளர்ச்சி மற்றும் வங்கியின் கடன்துறையில் ஏற்பட்ட விரிவாக்கம் என்பவற்றைப் பக்கபலமாகக் கொண்டு, 2012 இன்போது 12.3% மாக வட்டி வீதம் அதிகரித்தது. முதலீட்டுச் சந்தையில் நிலவிய வாய்ப்பான வீதங்களின் அளவை பயன்படுத்திக் கொண்டு, முன்னைய ஆண்டுடன் ஒப்பிட வட்டி வருமானத்தில் 60% இற்கும் அதிகமான வளர்ச்சியை முதலீட்டுத்துறை ஈட்டியது.

### வட்டி வருமான தொகுப்பு

| | 2012 ரூபா. மில். | 2011 ரூபா. மில். |
|---|---|---|
| கடன்களும் முற்பனங்களிலிருந்து வருமானம் | 2,458.41 | 2314.90 |
| முதலீடுகளிலிருந்து வட்டி வருமானம் | 472.90 | 296.31 |
| மொத்த வட்டி வருமானம் | 2,931.31 | 2611.21 |

### வட்டி செலவு

சந்தையில் நிலவிய உயர்ந்த வட்டி வீதங்களின் காரணமாக 2012 இல், வங்கியின் வட்டி செலவினம் குறிப்பிடத்தக்கவகையில் அதிகரித்தது. 2011 உடன் ஒப்பிடும் போது, வட்டிச் செலவினம் 42% மாக அதிகரித்தது. இதற்கு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட போட்டித் தன்மையான வைப்பு வீதங்கள் முக்கிய காரணமாயிருந்தது.

### வட்டி செலவுகளின் தொகுப்பு

| | 2012 ரூபா. மில். | 2011 ரூபா. மில். |
|---|---|---|
| வைப்புகள் | 1,710.63 | 1,201.63 |
| குறுங்கால கடன் பெறுகைகள் | 3.17 | 0.85 |
| நீண்டகால கடன் பெறுகைகள் | 11.40 | 11.45 |
| **மொத்தம்** | 1,725.20 | 1,213.93 |

### வருவாய், செலவினங்கள் மற்றும் இலாப ஒதுக்கீடு




### செயற்பாட்டு செலவுகள்

சம்பள உயர்வுகள் காரணமாக அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் ஆளணிச் செலவுகள் 33 இனால் அதிகரித்தன. அதே நேரம் 3.6% மான மிகக் குறைவான அதிகரிப்பை மட்டுமே ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் காண்பித்தன.

### கடன்களுக்கும் ஏனைய நட்டங்களுக்குமான, ஊறு விதிப்புகள்

முன்னைய கணக்கீட்டு நியமங்களின் கீழ் நிலவிய கடன் நட்டங்களுக்கான ஏற்பாடுகளை ஊறுகளுக்கான விதிப்பனவுகள் மாற்றீடு செய்தன. 2011 இன் ரூபா 16,492,209 இன் விதிப்பனவுகளுடன் ஒப்பிடும் போது ஊறுகளின் மீள் நிதியம் ரூபா 116,716 2012 இல் கணக்கிடப்பட்டது.

குறித்தொதுக்கப்பட்டதும் கூட்டு முறையிலுமான ஊறு விதிப்புகளிலும், மற்றும் பொருளாதார காரணிகளின் சீராக்கல்கள் என்பவற்றினுள்ளும் ஊறுகளும் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

# நிதியியல் மீளாய்வு தொடர்ச்சி

### கடன்களும் முற்பணங்களும் துறைசார்ந்த வளர்ச்சி

2011 உடன் ஒப்பிடும் போது வங்கியின் கடன்துறை 13% னால் அதிகரித்திருப்பதை வங்கி பதிவு செய்தது. ஆண்டின் போது பரவலான வாடிக்கையாளர் தளத்தை கவர்ந்த சுயதேவை மற்றும் வாகனக் கடன்களின் அறிமுகம் இந்த வளர்ச்சிக்கான பிரதான காரணமாயிருந்ததெனலாம். அஈமுவ அதன் கடன்துறையின் தரத்தை முன்னேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட அதே நேரம் அதன் அளவை அதிகரிப்பதிலும் ஈடுபட்டது.

| | 2012 ரூபா. மில். | 2011 ரூபா. மில். |
|---|---|---|
| ஈட்டுக் கடன்கள் | 6,520.66 | 5,738.30 |
| ஊ.சே.நி. கடன்கள் | 9,345.49 | 8,589.78 |
| வாகன கடன்கள் | 48.72 | - |
| சுயதேவைக் கடன்கள் | 637.91 | - |
| ஏனைய கடன்கள் | 1,900.98 | 1,980.85 |
| **மொத்தம்** | **18,453.76** | **16,308.93** |

### வைப்புகள்

2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, ரூபா 15,088.05 மில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 17,236.56 மில்லியனாக வங்கியின் வாடிக்கையாளர் வைப்புகள் 14% குறிப்பிடத்தக்க வளர்ச்சி எய்தின. ஆண்டின் போது, நிறுவனத்திலான வைப்புகள் 14% அதிகரிப்பையும் சிறு வர்த்தக வைப்பு 3% அதிகரிப்பையும் காண்பித்தன.

### செலுத்தும் தரம்

அஈமுவ ஒரே நேரத்தில் தனது கடன் அளவை அதிகரித்ததுடன், கடன் தரத்தையும் பேணியதனூடாக, 2012 இல் அஈமுவ தனது விவேகமான கடன் முகாமைத்துவ கொள்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடித்தது. 2011 இன் 36.79% உடன் ஒப்பிடும் போது, வங்கியின் செயற்படாத கடன்களின் விகிதம் 37.42% மாகவிருந்தது. எவ்வாறாயினும், அண்மைக் காலங்களின் போது, செயற்படாத கடன்களின் விகிதம் குறைவடைந்து காணப்படுகின்றது.

### தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பு

அஈமுவ, பொறுப்புள்ள ஒரு நிறுவன பிரஜையாக 2012 இன் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை தொடர்ந்தும் செய்தது. 2011 இன் ரூபா 501.41 மில். உடன் ஒப்பிட 2012 இல் நாட்டின் பொருளாதாரத்தற்கு, அரசாங்கத்திற்கான வரிகளாக பங்களிப்பு செய்யப்பட்ட தொகை ரூபா 331.35 மில். ஆகும்.

| | 2012 ரூபா. மில். | 2011 ரூபா. மில். |
|---|---|---|
| வற் | 92.17 | 146.55 |
| நிருவன வரியும் அறுதியிட்ட பங்களிப்பு வரியும் | 237.05 | 354.80 |
| முதலீட்டு நிதி | 25 | - |
| | **354.23** | **501.35** |

### வைப்புகளின் தொகுப்பு






# உற்பத்திகளும் சேவைகளும்

**எமது உற்பத்திகளும், சேவைகளும்**

01 ஜனவரி 1979, இலங்கையின் வங்கித்துறையில் சிவப்பு எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நாள். அன்றைய தினம் வீடமைப்பு நிதித்துறையின் இரண்டு ஜம்பவான்கள் நாட்டின் வீடமைப்பு வங்கியாக ஒன்றினைந்தன.

இலங்கை அரச ஈட்டு வங்கி மற்றும் விவசாயம். கைத்தொழில் கூட்டுத்தாபனம் ஒன்றினைந்ததன் விளைவாக அரச ஈட்டு முதலீட்டு வங்கி உருவானது. இவ்விரு, பலம்வாய்ந்த நிதியியல் நிருவனங்களின் கூட்டினால் வீடமைப்பு, விவசாயம், கைத்தொழில் மற்றும் சுற்றுலா துறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய தனித்துவமான நிருவனம் ஒன்று உருவானது.

எந்தவொரு நாட்டினதும் அபிவிருத்தி செயன்முறையில் அதன் சேவைகள் திறமையும் பயனும் உடைய ஏற்பாடுகள் மட்டும் கொண்டிராமல் அதன் விளைவுகள் பௌதீக நன்மைகளை கொண்ட உற்பத்திகளையும் கொண்டிருக்க வேண்டும். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று ஒத்திருக்கவும் வேண்டும்.

இம் முயற்சிகளுக்கு அதரவு வழங்கும் ஒரு நிருவனமாக அரச ஈட்டு முதலீட்டு வங்கி இருக்கின்றது. பங்குரிமையாளர்கள் அனைவருக்கும் மக்களுக்கும் செழிப்பை வழங்கும் முன்னோடியாகவும் இது செயற்படுகின்றது. ஒரு அரச வங்கி என்ற வகையில் அரசாங்கம் அதன் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான முயற்சிகளுக்கு நாங்கள் எப்போதும் ஆதரவு அளிக்கின்றோம்.

8 தசாப்த கால அனுபவத்துடன் இலங்கையர்களுக்கு அனேக தலைமுறைகளாக ஒரு நிருவனம் என்ற வகையில் சேவையாற்றுவதற்கு மக்களின் தேவைகளை அ.ஈ.மு. வங்கி நன்கு அறிந்துள்ளது. இத்தகைய உயர்வான அனுபவங்களை எதிர்வரும் தலைமுறைகள் மக்களின் தேவைகளை இனங்கண்டுகொள்வதை இலகுவாக்குகின்றது.

பொறுப்பும், நன்மதிப்பும் உள்ள நிருவனம் என்ற வகையில் அ.ஈ.மு. வங்கி இப்போதும், அடுத்த தலைமுறைக்கான நிதியியல் உற்பத்திகளையும் சேவைகளையும் திட்டமிட்டு வருகின்றது.

# மனித மூல வளங்கள்

அடுத்துவரும் ஆண்டுகளின் போது வங்கியின் செயலாற்றலில் தாக்கத்ததை ஏற்படுத்தக்கூடியதாக எமது பணியாளர்களின் தகைமைகளை முன்னேற்றும் வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்கும் அதே நேரம் நாங்கள் அனேக மனித வள அபிவிருத்தி தலையீடுகளையும் ஆரம்பித்தோம்

### பணியாட் தொகுதியினரின் வலு

### பணியாளர்களின் அந்தஸ்து

ஆண்டின் இறுதியில் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 322 ஆக இருந்தது. இவ் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவானதாக இருப்பினும், வங்கியின் செயற்பாட்டிற்கு அவர்கள் அளித்த பங்களிப்பு பாரியதாகவிருந்தது. இருபது (20) பணியாட் தொகுதியினர் வங்கியிலிருந்து விலகினர். இவர்களில் 17 அங்கத்தினர்கள் வங்கிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றனர். ஏனைய மூவர் பல்வேறு காரணங்களுக்காக வங்கி சேவையிலிருந்து இராஜினாமா (01) பதவி நீக்கம் (01) மரணம் (1) செய்தனர். சேர்மான வீதம் 6.4% மாக கணக்கிடப்பட்டது. இது முன்னைய ஆண்டைவிட உயர்வானதாகும். ஆண்டின்போது, குறிப்பிடத்தக்க விகித்தில் சேர்மானம் நிகழவில்லை.

### புதிய ஆட்சேர்ப்புகள்

பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆண்டின்போது, 14 முகாமைத்துவ பயிற்சியாளர் உள்ளடங்களாக 40 பணியாட் தொகுதியினர் புதிதாக நியமனம் பெற்றனர். அவர்களுக்கு செறிவான விதிமுறை பயிற்சிகள் தரப்பட்டதுடன், தொழிலில் அவர்களின் தன்னம்பிக்கையை கட்டியெழுப்பும் நோக்கத்துடன் வங்கித் தொழிலின் முக்கிய அம்சங்கள் குறித்த விழிப்புணர்வும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.



### பணியாளர் அந்தஸ்து

| முகாமைத்துவ மட்டம் | ஆண்டு இறுதி 2011 | ஆண்டு இறுதி 2012 |
|---|---|---|
| நிறுவனமும் சிரேஷ்ட முகாமைத்துவமும் | 18 | 19 |
| நிறைவேற்று முகாமைத்துவம் | 31 | 28 |
| நிறைவேற்றுனர் | 114 | 117 |
| நிறைவேற்றுனர் அல்லாதவர்கள் | 139 | 158 |
| **மொத்தம்** | **302** | **322** |

### பதவியின் வேறுபாடுகள்

| முகாமைத்துவ மட்டம் | வேறுபாடுகள் | | |
|---|---|---|---|
| | ஓய்வு பெற்றவர் | பதவி விலகியவர் | ஆட் சேர்ப்புகள் |
| நிறுவனமும் சிரேஷ்ட முகாமைத்துவமும் | 1 | 1 | 3 |
| நிறைவேற்று முகாமைத்துவம் | 4 | 3 | 1 |
| நிறைவேற்றுனர் | 6 | 0 | 14 |
| நிறைவேற்றுனர் அல்லாதவர்கள் | 4 | 1 | 22 |
| **மொத்தம்** | **15** | **5** | **40** |

### அடுக்குரீதியாக பணியாளர் வலு

| முகாமைத்துவ மட்டம் | பணியாளர் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| நிறுவனமும் சிரேஷ்ட முகாமைத்துவமும் | 19 | 6 |
| நிறைவேற்று முகாமைத்துவம் | 28 | 9 |
| நிறைவேற்றுனர் | 117 | 36 |
| நிறைவேற்றுனர் அல்லாதவர்கள் | 158 | 49 |
| **மொத்தம்** | **322** | **100** |

### பணியாளர் விபரத்திரட்டு

### இன ரீதியான (ஆண்/பெண்) விபரத்திரட்டு

சமனான தொழில் வழங்குனர் என்ற வகையில், வங்கி சமனான முறையில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் தொழில்களை வழங்கியது. வங்கியின் இனரீதியான விபரத்திரட்டில், ஆண்கள் 52% மாகவும் பெண்கள் 48% மாகவும் கணக்கிடப்பட்டனர். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது, இவ்வாண்டில் ஆண்களின் அளவு அதிகரித்துள்ளது. (முன்னைய ஆண்டில் இது முறையே 49% மாகவும் 51% மாகவும் இருந்தது.)

# மனித மூல வளங்கள் தொடர்ச்சி

### வயது விபரத்திரட்டு

வங்கியின் முக்கிய பதவிகளில், மிகுந்த அனுபவம் மற்றும் சிரேஷ்ட பணியாளர்கள் ஆகியோரை வங்கி கொண்டிருப்பது அதற்குள்ள தனிச்சிறப்பாகவிருக்கின்றது. 40 வருடங்களுக்கு அதிகமாக அனுபவம் கொண்ட பணியாளர்கள் குறிப்பிடத்தக்க அளவில் காணப்பட்ட அதே நேரம் முதிர்ச்சியடைந்த பணியாளர்கள் 62% மாக கணக்கிடப்பட்டனர்.

### பணியாளரின் வயது விபத்திரட்டு

| வயது வகைப்படுத்தல் | பணியாளரின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| 50 அல்லது அதற்கு மேல் | 117 | 36 |
| 40 - 49 | 85 | 26 |
| 30 - 39 | 73 | 23 |
| 29 அல்லது அதற்கு கீழ் | 47 | 15 |
| **மொத்தம்** | **322** | **100** |

### பணியாளரை தக்கவைத்துக்கொள்ளும் உத்தி

வங்கிக்கு 25 வருட அர்ப்பணிப்புள்ள சேவையை பூர்த்தி செய்த பணியாளர்களை இனங்காண வேண்டியிருந்துது. தங்க நாணய விருது பெறுவதற்கு 29 தகுதிவாய்ந்த பணியார்கள் காணப்பட்டனர்



### பணியாளர் சேவை விபரத்திரட்டு

| சேவை வகைப்படுத்தல் (ஆண்டுகள்) | பணியாளர் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| 0-4 | 59 | 18 |
| 5-9 | 52 | 16 |
| 10-14 | 52 | 16 |
| 15-19 | 38 | 12 |
| 20-24 | 33 | 10 |
| 25-29 | 47 | 15 |
| 30-34 | 37 | 11 |
| 35-40 | 4 | 1 |
| **மொத்தம்** | **322** | **100** |



66% மான பணியாட் தொகுதியினர், வங்கியில் 10 ஆண்டுகளுக்கும் அதிகமான சேவையை பூர்த்தி செய்துள்ளனர். இது அவர்கள் திருப்தியடைந்துள்ள மட்டத்தை பிரதிபலிக்கின்றது. கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக ஏனைய அரசாங்க வங்கிகளுக்கு நிகராக சம்பளங்கள் மற்றும் சம்பளமல்லாத நன்மைகள் என்பவற்றை வங்கியினால் பேண முடிகின்றது. பணியாளர்களின் மொத்த சம்பளத்திலிருந்து 13-21% வரையான சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு ஆண்டின்போது இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துடன் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கான கூட்டு ஒப்பந்தமொன்றில் வங்கி கைச்சாத்திட்டது. நிரந்தர பதவியிருக்கும் பணியாளர்கள் அனைவரும் சலுகை வட்டி வீதங்களில் தரப்படும் வீடமைப்பு மற்றும் ஏனைய கடன்களினால் நன்மையடைந்தனர்.

அஈமுவ தொடர் அமர்வாளர்களின் திட்டமிடல் கொள்கையொன்றை அறிமுகப்படுத்தியது. அத்துடன், வங்கிக்குள், முக்கிய பதவிகளில் ஏற்படக்கூடிய எதிர்கால வெற்றிடங்களை நிரப்புவதற்கான சாத்தியங்களை காண்பிக்கும் பணியாளர்களை தக்கவைத்துக் கொள்வதற்கு வங்கிக்கு உதவக்கூடிய நடவடிக்கைகளையும் செயற்படுத்தியது.

### பயிற்சியும் அபிவிருத்தியும்

பணியாளர்களுக்கு போதுமான பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்காக, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி திட்டமொன்றையும் வங்கி அபிவிருத்தி செய்தது. வங்கியினால் நடத்தப்பட்ட, பயிற்சிகளுக்கான தேவை பகுப்பாய்வின் ஊடாக பணியாளர் பயிற்சி அபிவிருத்திக்கு முறைப்படுத்தப்பட்ட அணுகுமுறையை கடைப்பிடிப்பதற்கு, ஏற்றவாறு தொடர்புடைய அனைத்து துறைகளையும் உள்ளடக்கியதாக இது செயன்முறைப் படுத்தப்பட்டது. பணியாளர்கள் ஒவ்வொருவரும் தமது தொழிலுடன் தொடர்புடைய திறமைகளையும் கருத்துகளையும் அபிவிருத்தி செய்து கொள்வதற்கு சமனான வாய்ப்புகளை அளிப்பதற்காக அவ்வப்போதய தருணத்திற்கான பயிற்சி தேவைகளையும் வங்கி ஏற்றுக் கொண்டது. இவற்றில் சில பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நிறுவனத்தினுள் ஒழுங்கு செய்யப்பட்டன. வேறு சில நிகழ்ச்சித் திட்டங்கள், பொருத்தமான பதவியினருக்கு அவர்களுக்கு ஏற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் அவர்களை நியமித்து தொழில்சார்ந்த பயிற்சி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

## மனித மூல வளங்கள் தொடர்ச்சி

வங்கியியல், நிதி மற்றும் முகாமைத்துவ துறைகளை உள்ளடக்கியதாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்களின் துணையுடன், செறிவான ஆறுமாதகால பயிற்சிகள், பதினான்கு முகாமைத்துவப் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

வங்கியினால் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில், பணியாட் தொகுதியினர் ஐவருக்கு வெளிநாட்டு பயிற்சிகளும் கொடுக்கப்பட்டன.

ஆண்டின்போது, 1652 மனித வேலை நாட்களையும், ரூபா 5.55 மில்லியன் செலவையும் ஏற்படுத்திய 50 பயற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பணியாட்கள் பங்கேற்றனர். இது ஆண்டின் போது, நிலவிய மொத்த வேலை நாட்களில் பணியாளர் ஒருவருக்கு சராசரியாக ஐந்து மணித்தியால வேலை நாட்கள் செலவிடப்பட்டதை புலப்படுத்தியது. பெரும்பாலான நிகழ்ச்சித் திட்டங்கள், கடன் இடர் முகாமைத்துவம், நிதியும் சொத்துகள்/பொறுப்புகள் முகாமைத்துவம், மனித மூலவள முகாமைத்துவம் மற்றும் உற்பத்தி, உளநல அபிவிருத்தியும் ஊக்குவிப்பும், தகவல் தொழில்நுட்பம், சந்தைப்படுத்தலும் வர்த்தக அபிவிருத்தியும், சட்டம் ஆகிய துறைகளின் கீழ்வரும் விடயங்களுடன் தொடர்புடையவையாக இருந்தன.

### ஒழுங்கமைப்பு மாற்றம்

வாடிக்கையாளர் சேவையை சிறப்பாக வழங்குவதற்காக, சில விடயங்களின் தேவைக்காக, ஒழுங்கமைப்பு கட்டமைப்பில் குறிப்பிடப்பட்ட சில திருத்தங்கள் செய்யப்பட்டன. கடன் மதிப்பீடு/பகிர்வு, கடன் நிர்வாகம், கடன் அறவீடு, சட்டம் மற்றும் பெறுமதியிடல் நடைமுறைகள் போன்ற தொடர்புடைய சகல நடவடிக்கைகளையும் ஒன்றிணைத்த யுனிட் ஏ, மற்றும் யுனிட் பி என அழைக்கப்படும் இரண்டு கடன் பிரிவுகளை நிறுவுவதற்கும் முடிந்தது.

தொழில்நுட்ப பிரயோககங்கள் மற்றும், ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளைக் கடைப்பிடித்தல், என்பவை ஊடாக, இந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக, வங்கியின் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளை வழிப்படுத்த சில விடயங்களில், வங்கியின் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பிலும் குறிப்பிட்ட திருத்தங்கள் செய்யப்பட்டன.





# இடர் முகாமைத்துவம்

### இடர் முகாமைத்துவ கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

துரிதமாக மாற்றமடைந்தவரும் நிதியியல் சுற்றாடல்கள், பல்வேறு வகையான இடர்களுக்கு வங்கிகளை பாதுகாப்பற்றதாக்குகின்றன. நடவடிக்கை அல்லது நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி நிருவனமொன்றில் ஏற்படக்கூடிய நிதியியல் இடர்களில் பாதகமான தாக்கங்களைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகளுள்ளன. அத்தகைய விளைவுகளின் காரணமாக வருவாய் ஈட்டல்கள்/மூலதனங்கள் என்பவற்றில் நேரடியான நட்டங்களை உருவாக்கலாம் அல்லது, வங்கியின் வர்த்தக நோக்கங்களை சந்திப்பதற்கு அதற்குள்ள தகுதியில் கட்டுப்பாடுகளை விதிப்பதாக அமையலாம்.

உறுதியான வளர்ச்சியைக் கொண்ட உபாயமொன்றை ஆதரிப்பதற்கு சுறுசுறுப்பான இடர் முகாமைத்துவ கட்டமைப்பு ஒன்று அத்தியாவசியமானது என்பதை அஈமுவ நிச்சயமாக நம்புகின்றது. வங்கியின் இடர் விபரத் திரட்டும் முகாமைத்துவமும் முக்கிய இடர் வகைப்படுத்தல்களான கடன் இடர், சந்தைப்படுத்தல் இடர், திரவ இடர், செயற்பாட்டு இடர், சட்ட இடர் மற்றும் மூலோபாய இடர் என்பவற்றில் கவனம் செலுத்துகின்றது.

பணிப்பாளர் சபையினால் தாபிக்கப்பட்ட மட்டங்களுக்குள், வங்கியின் இடர் வெளிப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, மேலே குறிப்பிடப்பட்ட துறைகளுடன் வங்கியின் வளர்ச்சியடைந்துவரும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளில் இடர்களை அடையாளம் காணுவது, அளவிடுவது, கண்காணிப்பது மற்றும் கட்டுப்படுத்துவது என்பவை உட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், வங்கியின் வர்த்தக உத்திகள் மற்றும் நோக்கங்களுடன் ஒத்ததாக, இடர்களை மேற்கொள்ளும் தீர்மானங்களும் இருந்தன. இடர்களை எடுக்கும் அல்லது முகாமைத்துவம் செய்யும் ஊழியர்கள், இடரை மிகவும் தெளிவாக புரிந்து கொள்ளும் கலாச்சாரம் ஒன்றை வங்கி உருவாக்கியுள்ளதுடன், இடர்களைக் குறித்து எடுக்கும் தீர்மானங்கள் வெளிப்படையானதாகவும், தெளிவானவையாகவும் இருக்கின்றன. இடர்களை எடுப்பதற்கு தாங்கும் அரணாக போதுமான மூலதனத்தை வங்கி பேணுகின்றதுடன், எடுக்கப்படும் இடர்களுக்கான இழப்பீடுகளை செய்யும் கொடுப்பனவு தீர்வுகளாகவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### வங்கியின் இடர் முகாமைத்துவ சட்டகம்

அ.ஈ.மு.வ. யின் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு வியாபார செயற்பாடு, ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவம், மற்றும் கணக்காய்வு / இணங்குவிப்பு ஆகிய மூன்று வகைப்படுத்தல்களை உள்ளடக்குகின்றது. வங்கியின் ஏற்றுக் கொள்ள முடியாத இடர் வெளிப்பாடுகளுக்கு எதிராக வங்கியை பாதுகாப்பதற்கு பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டலின் கீழ் இந்த மூன்று வரிசைகளும் செயற்படுகின்றன. இப் பொறிமுறையின் முக்கிய நடவடிக்கையாளராக பணிப்பாளர்கள் உள்ளனர். இடர் முகாமைத்துவத்தை வரையறுக்கும் கொள்கைகளையும் நடைமுறைகளையும், சிரேஷ்ட முகாமைத்துவம் மேற்பார்வை செய்கின்றது. இடர் அளவீடுகள், கண்காணிப்பு கட்டுப்பாடுகள் மற்றும் சுயாதீனமான கணக்கு ஆகியவை மூன்றாவது வரிசை பாதுகாப்பாக உள்ளன.

வங்கி சிந்திக்கும் கடன், சந்தை மற்றும் செயற்பாட்டு இடர்கள் தொடர்பாக, அ.ஈ.மு.வ. யிடம் வரையறுக்கப்பட்ட கொள்கைகளும் நடைமுறைகளும் காணப்படுகின்றன. இணங்குவிப்பை உறுதிப்படுத்தவதற்காக இந்த கொள்கைகளும், முறைமைகளும் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படுகின்றன. இடர்களை எடுப்பது மற்றும் நடவடிக்கைகளை நிர்வகிப்பது என்பவற்றில் ஈடுபடும் தனிப்பட்டவர்களின் பங்களிப்புகளையும் பொறுப்புகளையும் வங்கியின் நிருவனக் கட்டமைப்பு தெளிவாக வரையறை செய்கின்றது. தகைமைகளை கட்டியெழுப்புவது மற்றும் பொறிமுறைகளை மீளாய்வு செய்வது என்பவற்றினூடாக, இடர் முகாமைத்துவ எண்ணக் கருவை உள்ளகப்படுத்தும் முயற்சிகளில் வங்கி ஈடுபட்டது.

### அ.ஈ.மு. வங்கியின் இடர் முகாமைத்துவத்திற்கான ஆளுமை கட்டமைப்பு

அ.ஈ.மு.வ. யின் இடர் முகாமைத்துவத்திற்கான கூட்டாண்மைக் கட்டமைப்புக்கள் பல்வேறுபட்ட இடர்களின் நிகழ்வினால் இடரினை அதிகரிக்கின்ற அல்லது குறைக்கின்ற நிகழ்வுகள் இடம் பெறலாம். சகல வியாபார பரப்புக்களிலும் இடர்களின் இடையூறு தடையினை ஏற்படுத்துகின்றமை தவிர்க்க முடியாதது என வங்கியின் இடர் முகாமைத்துவ செயன்முறை ஏற்றுக் கொள்கின்றது. நிருவனத்தின் தொழிற்பாடுகளின் ஊடாக இடர்களின் உள்ளகத் தொடர்புகளை ஆராய்ந்து பார்ப்பதற்காக பின்வரும் கட்டமைப்பான செயன்முறையினை வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ தொழிற்பாடு, நிருவனம் முழுவதும் ஈடுபடுத்தியுள்ளது.



## இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

**பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் மேற்பார்வை**

வங்கியின் ஒட்டு மொத்த இடர் முகாமைத்துவ பொறுப்புக்கள் பணிப்பாளர் சபையினால் கையாளப்படுகின்றன. இடர் அவாவையும், இடர் தாங்கும் மட்டங்களையும் வெளிப்படுத்துவதற்காக, சபை தர அளவீடுகளையும் ஏற்படுத்தியுள்ளது. கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் வடிவமைப்பில் பணிப்பாளர் சபையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள உபாய வழிகாட்டல்களை பரிமாறுவது மற்றும் அக் கொள்கைகளை அமுல்படுத்துவது மற்றும் நிறைவேற்றுவது தொடர்பாக திறமையுள்ள நிறைவேற்றுதரம் ஒன்றை உருவாக்குவதும் உயர் முகாமைத்துவத்தின் கடமையாக இருக்கின்றது.

இக் கொள்கையானது உரிய முறையில் உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை தொடர்பாடல் செய்யப்பட்டுள்ளமையையும் நிருவனக் கலாச்சாரத்துடன் பதியமிடப்பட்டு உள்ளமையையும் வங்கியின் உயர் மட்ட முகாமைத்துவம் உறுதிப்படுத்தல் வேண்டும். கணக்கிடக் கூடிய அபாயங்கள் தொடர்பான இடர்களும் வரையறையாக அல்லது வங்கி சார்பாக ஏற்றுக் கொள்ளத்தக்க அவ்வாறான இடர்களுக்கான வரையறைகள் அல்லது உப வரையறைகள் பொதுவாக தொடர்பாடல் செய்யப்பட்டுள்ளன. பண்பு ரீதியான இடர் முன்னெடுப்புக்கள் வழிகாட்டல்களாகவும் முகாமைத்துவத்தின் வியாபாரத் தீர்மானங்களாகவும் மறைமுகமாக தொடர்பாடல் செய்யப்பட்டுள்ளன.

உயர் மட்ட முகாமைத்துவம் / பணிப்பாளர் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட வரையறையினுள் இடர்களுக்கு முகங்கொடுத்தல் தொடர்பான செயற்பாடுகளை வியாபார நிரல் முகாமையாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அபாய முகாமைக் கொள்கைகள் மற்றும் நிலைமைகள் தொடர்பாக ஏதேனும் முக்கியமான மற்றும் அசாதரணமான விடயங்கள் உயர் முகாமைத்துவத்திற்கு / பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்படல் வேண்டியதுடன் அதன்படி பொருத்துமான சீர் செய்தல் நடவடிக்கைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படல் அவசியமாகும். இடர் முகாமைத்துவம் தொடர்பான பொருத்தமான முறைமை மற்றும் ஒழுங்குவிதிகளை நியாயப்படுத்திக் கொள்வதற்கானதொரு உள்ளீடாக இந்த அசாதாரண விடயங்கள் செயற்படுகின்றன.

உள்ளக மற்றும் வெளியக சூழலின் முக்கியமான மாற்றங்களுக்கு ஏற்ப இந்தக் கொள்கைகளை பேணிக் கொள்வதற்கு, கிரமமாக இந்தக் கொள்கைகளை பணிப்பாளர் சபை மீளாய்வு செய்வதுடன் தேவையெனக் கருதும் சந்தர்ப்பத்தில் பொருத்தமான மாற்றங்களை செய்கின்றது.

கடன், சந்தை, தொழிற்பாட்டு மூலதனம் மற்றும் ஏனைய சில இடர்களில், முகாமைத்துவத்தின் போது பயன்படுத்திய முக்கியமான கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் உள்ளடங்கலாக, வங்கியின் இடர் முகாமைத்துவ வேலைச் சட்டக மேற்பார்வையினை பூர்த்தி செய்வதில் பணிப்பாளர் சபைக்கு உதவி புரிவதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவை சபை நியமித்துள்ளது.

தொழிற்பாட்டுக் கட்டுப்பாடுகள் உரிய விதத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளன என்றும் அக் கொள்கைகள் உரிய கொள்கைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு ஏற்ப நிறைவேற்றப்படுகின்றன என்றும் சபை கணக்காய்வுக் குழு உறுதிப்படுத்துகின்றது. குறிப்பாக, தற்பொழுது அமுலில் உள்ள தொழிற்பாட்டுக் கட்டுப்பாட்டுகளுக்கு இணைவாக கடன் கணக்காய்வினை அமுல்படுத்துகின்றது.

சபைக் குழுக்களுக்கு புறம்பாக, வினைத்திறனான இடர் வேலைச் சட்டகம் ஒன்றின் வடிவமைப்பு, அமுல்படுத்தல் பராமரிப்பு மற்றும் பல்வேறுபட்ட இடர் பிரதேசங்களின் கலாச்சாரம் தொடர்பிலான மேற்பார்வை கண்ணோட்டம் தொடர்பாக முகாமைத்துவக் குழு பொறுப்பாக உள்ளது. வியாபார முகாமையாளர்கள் பொறுப்பாக உள்ள பிரதேசங்களில் அவர்கள் இடர் முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக உள்ளனர்.

**அ.ஈ.மு.வ.யின் விருத்தியடையும் இடர் முகாமைத்துவ நடவடிக்கை**

2012 இல் வங்கியின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ பிரிவு நிறுவப்பட்டது. வங்கியின் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை நிறுவுவதற்காக நிதி ஆண்டின் போது பின்வரும் முக்கிய முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டன.

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, ஒருங்கிணைந்த நிறைவேற்று இடர் முகாமைத்துவக் குழு மற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் உப குழுக்களான கடன் மற்றும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன். ஒவ்வொரு குழுவிற்கும் பொருத்தமான விதிமுறைகளும் பூரணமடைந்துள்ளன. கடன், திரவத்தன்மை, மற்றும் அவதானிப்பு இடர்களின் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய மட்டங்களில், இடர் முகாமைத்துவ குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு குழுவிற்கும் பொருத்தமான விதிமுறைகளும் பூரணமடைந்துள்ளன.

இடர் முகாமைத்துவ கொள்கை. கடன் இடர், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவ கொள்கை, திரவ முகாமைத்துவ கொள்கை மற்றும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை என்பவை அறிமுகப்படுத்தப்பட்டன.

வங்கியின் கடன் கையேடு மீள் மதிப்பிடப்பட்டதுடன். கடன் செயன்முறை நடவடிக்கையில் ஈடுபடும் செயற்பாட்டு அதிகாரிகளை நெறிப்படுத்தவதற்காக முழுமையான கையேடு உள்ளகத்திற்கு அளிக்கப்பட்டது.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் அங்கீகாரத்திற்கு முன்னர், குறிப்பிடத்தக்க வழியமைப்பு ஒன்றினூடாக கடன் இடர் வெளிப்படுத்தல் சுதந்திரமாக மீளாய்வு செய்யப்பட்டது.

வாடிக்கையாளர்களின் இடர் வியாபரத்திரட்டின் அடிப்படையில் வசதிகளை வகைப்படுத்துவதற்கு இடர் தரப்படுத்தல் மாதிரி ஒன்று உள்ளகத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், செயற்பட்டுக் கொண்டிருக்கும் தெரிவு செய்யப்பட்ட சில மாதிரிகளில் இது மீளாய்வும் செய்யப்படுகின்றது.

கடன் பிரச்சினைகளையும், ஆரம்பத்திலேயே எச்சரிக்கைகளை அடையாளம் காணவும், கடன் மீளாய்வு பொறிமுறையின் மீள் மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செயற்பாட்டு இடர் நிகழ்வுகளை அறிக்கையிடுவது மீதான ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ பிரிவுடன் ஒவ்வொரு வர்த்தக அலகிலிருந்தும் நியமிக்கப்பட்ட அதிகாரிகளினால் செயற்பாட்டு இடர் முகாமைத்துவ செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
பல்வேறு நிகழ்வுகளின் கீழ் வங்கியின் மூலதனம் மற்றும் திரவ

# இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

நிலைமைகளை மதிப்பிடுவதற்கு அழுத்த பரிசோதனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

### மூலதன போதுமை நிலைமை

கடன் மற்றும் சந்தைப்படுத்தல் இடரின் நியம தரப்படுத்தல் அணுகுமுறையை பயன்படுத்தி. ஒழுங்கமைப்பு பணிப்புரைக்கு அமைவாக இடர் அளவீடுகளின் மூலதன போதுமையை அஈமுவ கணக்கிடுகின்றது. அதே போல அடிப்படை குறிகாட்டி அணுகு முறையூடாக செயற்பாட்டு இடரை கணக்கிடுகின்றது. 31.12.2012 அன்றுள்ளவாறு அஈமுவயின் அடுக்கு 1 மூலதன விகிதம் 28.92% மாகவும் மொத்த மூலதன விகிதம் 28.92% மாகவும் இருந்தது. இந்த வீதங்கள் வங்கித் தொழிலின் சராசரிக்கு அதிகமானதாகவும், இடர் உறிஞ்சுதலின் வலுவான திறமையையும் சுட்டிக்காட்டுகின்றது.

2013 இன் முதலாவது காலாண்டிலிருந்து செயற்பாட்டு இடருக்கான நியம தரப்படுத்தல் அணுகுமுறை ஊடாக வழிநடத்தப்பட்ட மூலதன வீதங்களின் கணக்கிடல்களை நோக்கி வங்கி அசைவுறுகின்றது.

### முக்கிய இடர்களை முகாமைத்துவம் செய்வது

#### கடன் இடர்

வங்கியின் கடன் பெறுநர் ஒருவர் அல்லது எதிர்தரப்பினர், ஒப்புக்கொண்ட விதிமுறைகளுக்கு அமைவாக தனது கடப்பாடுகளை சந்திக்க தவறும் போது உருவாகும் சாத்தியமுள்ள இடர், கடன் இடர் என எளிமையாக வரையறுக்கப்படுகின்றது. அஈமுவயின் கடன் இடருக்கு முக்கியமான மூலகத்தை இது உருவாக்குகின்றதுடன், பல்வேறு உற்பத்திகளுக்கென எதிர்தரப்பினருக்கு வழங்கப்படும் கடன்களும் முற்பணங்களுமாகும். கடன் பெறுபவர்களுக்கும் எதிர் தரப்பினர்களுக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கடன் நியமங்களை ஏற்படுத்தவது, உறுதியான இடர் முகாமைத்துவ துறை, வங்கி ஒன்றின் எதிர்தரப்பினருக்கான கடன் நிலைப்பாடு சீரழிவிற்கு வழியமைக்கக் கூடியதான பொருளாதாரம் அல்லது ஏனைய சூழ்நிலைகளின் தொடர்சியான மாற்றல்கள் எனும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளில், வங்கி அவதானிப்பை செலுத்துகின்றது.

சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் அவா மட்டங்களுக்குள், வாடிக்கையாளர் தெரிவு, முன்னெச்சரிக்கை இடர் தாங்குதல், மீளாய்வு மற்றும் அறவீட்டு நடைமுறைகள், துறைகளை கண்காணிப்பது மற்றும் முகாமைத்துவம் செய்வது என்பவை குறித்து வங்கி கடன் கொள்கை ஒன்றையும் கடன் கையேடு ஒன்றையும் விருத்தி செய்துள்ளது. பொருத்தமான கடன் இடர் சுற்றாடல் ஒன்றை ஸ்தாபிப்பதன் ஊடாக, கடன் இடரின் அளவை அடையாளம் காணுவது, கண்காணிப்பது மற்றும் கட்டுப்படுத்துவது என்பவற்றிற்கு இந்த ஆவணங்கள் வழிகாட்டியாக இருக்கும். அத்துடன் உறுதியான கடன் வழங்கும் செயன்முறை ஒன்றின்கீழ் செயற்படுவது, பொருத்தமான கடன் நிர்வாகத்தைப் பேணுவது, அளவிடுதலும், கண்காணித்தலும் செயன்முறை மற்றும் கடன் இடர்மீது போதுமான கட்டுப்பாடுகள் இருப்பதை உறுதிப்படுத்துவது என்பவையும் இவற்றிலடங்கும்.

வங்கியின் இடர் அவா மற்றும் வர்த்தக உபாயம் என்பவற்றின் தொடர்சியை உறுதிப்படுத்துவதாக பணிப்பாளர் சபையினால் கடன் கொள்கையும் கையேடும் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படும்..

### கடன் இடர் முகாமைத்துவம்

கடன் இடரை முகாமைத்துவம் செய்யும் போது பின்வரும் கையேட்டு மாதிரிகளில் அஈமுவ அவதானிப்பை செலுத்துகின்றது.

கடன் கையேட்டினால் வழிநடத்தப்படும் தரப்படுத்தல்களுக்கு அமைவாக, கடன்பெறுபவர் குறித்த பூர்வாங்க ஆய்வும், இடர் உரிமையாளரினால் நடத்தப்படும் கடன் மதிப்பீடும் இடம் பெறும்.

கால அடிப்படையில், கடன் பெறுனரின் கடப்பாடுகளின் தகமைகள் இருப்பதை கடன் மதிப்பீடு உறுதி செய்யும். பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ள இடர் அவாவுடன் இணங்கி, கடன் மதிப்பீட்டு செயன்முறைகள் பேணப்படுவதற்கான கல்வி, கடன் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் இணைப்பிணையங்கள் மற்றும் உத்தரவாதங்களை பிணையங்களாக பெறுவதனூடாக கடன் இடர் குறைக்கப்படும் என்பதுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட அலகுகள் கொள்கைகளினால் நியமிக்கப்படும். ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளுக்கு அமைவாக, இணைப் பிணையத்தின் உண்மை பெறுமதி காலந்தோறும் பெறுமதியிடப்பட்டு மதிப்பிடப்படுகின்றது. அத்துடன் தேவைப்படும் போது முக்கியமாக அறவீட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவும் இருக்கின்றது.

வங்கியின் இடர் முகாமைத்துவ பிரிவினால் உள்ளக இடர் தரப்படுத்தல் மாதிரி ஒன்று அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் பரீட்சிக்கப்பட்டும் வருகின்றது. பல்வேறு உத்தேச மதிப்பீட்டு அலகுகளின் அடிப்படையில் வாடிக்கையாளர்களை தரப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு தரப்படுத்தல் மாதிரி பிரயோகிக்கப்படும். இடர் மதிப்பிடுதல், கடனை தீர்மானிக்கும் செயன்முறைகள் மற்றும் இடர் அடிப்படையிலான விலையிடலுக்கு ஒரு கருவியாக பயன்படுத்த உதவும் ஒரு மாதிரியாக தரப்படுத்தல் மாதிரி இருக்கும்.

வாடிக்கையாளர்களின் இடர் விபரத்திரட்டின் சுதந்திரமான உத்தேச மதிப்பீடுகள், இடர் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுகின்றதுடன், இடர் உரிமையாளர்களினால் வாடிக்கையாளர்களுக்கு இடர் தரப்படுத்தல் வழங்கப்படுகின்றது.

கடன் அங்கீகரித்தல் கட்டமைப்பிற்கு. வங்கியில் தெளிவான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அங்கீகரிப்பு செயன்முறையின் வெவ்வேறு மட்டங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டும் உள்ளது. எந்தவொரு தனிநபரும் கடன் ஒன்றை உருவாக்கி அங்கீகாரம் வழங்க முடியாது. இடர் முகாமைத்துவ பிரிவில் இணைக்கப்பட்டுள்ள இடர் அதிகாரிகளினால் கடன் வசதிகள் நிர்ணயிக்கப்பட்ட பின்னர், சுதந்திரமான உத்தேச மதிப்பீடு செய்யப்படும். அத்துடன் அத்தகைய வசதிகளை அங்கீகரிக்கும் போது கருத்துகளும் வழங்கப்படும்.

திறமையுடன் செயற்படும் பிந்திய அனுமதியை வழங்கும் செயன்முறையை உறுதிப்படுத்துவதற்கும் வங்கியின் வழிகாட்டல்களுடன் இணங்கியதாக கடன் விடுவிக்கப்படுவதை உறுதி செய்வதற்காகவும் கடன் நிர்வாகப் பிரிவு ஒன்றை தாபிக்கும் செயன்முறையிலும் வங்கி ஈடுபட்டுள்ளது.

நட்டங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளுக்கு எதிராக, வங்கியை பாதுகாப்பதற்கென, பிரச்சினைக்குரிய கடன்களை ஆரம்பத்திலேயே அடையாளம் காணுவதை உறுதி செய்வதற்கு வங்கியின் இடர் முகாமைத்துவ பிரிவினால் கடன் மீளாய்வு பொறிமுறை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. ஆரம்பத்திலேயே

## இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

எச்சரிக்கை சமிஞ்சைகளை அடையாளம் காணுவதற்கும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கும், வங்கியினால் ஏற்படுத்தப்பட்டுள்ள கடன் இடர் குறிகாட்டிகள் அடிக்கடி கண்காணிக்கப்படுகின்றன. கடன் பிரிவும் அறவீட்டு பிரிவும் பிரச்சினைக்குரிய கடன்கள் மற்றும் செயற்படாத முற்பணங்கள் என்பவற்றை அறவிடுதலுக்குப் பொறுப்பாக உள்ளன. ஆரம்ப கட்டத்தில், கடன் அதிகாரிகள், முற்பணங்களின் அறவீட்டில் கவனம் செலுத்துவார்கள். கடன் செயற்படாதவை என கருதப்படும்போது அறவீட்டு பிரிவிற்கு மாற்றம் செய்யப்படும். அறவீட்டு விடயங்கள் முடிவிற்கு வரும்வரை அறவீட்டு செயன்முறைகளை இந்தக் கூறு செயற்படுத்தும். அதே நேரம் இணைப் பிணையங்களின் பெறுமதியையும் கண்காணிக்கும். பயனாளிக்கும் தொடர் நடவடிக்கைகளுக்காகவும் மாற்றங்களை அறிவதற்காகவும் அறவீட்டுப் பிரிவு, கடன் இடர் முகாமைத்துவத்துடன் இணைப்பிலிருப்பதை உறுதி செய்யும். இறுதி தேர்வாக சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக அறவிட முடியாத முற்பணங்கள் சட்டப் பிரிவிற்கு மாற்றம் செய்யப்படும்.

### கடன் இடர் குவிப்பு

எதிர் தரப்பு ஒன்றிற்கு அல்லது எதிர்தரப்பு பிரிவு ஒன்றிற்கு மிகையான வெளிப்படுத்தல் செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட நட்டத்தை இந்த இடர் குறிக்கும். கைத்தொழில் வெளிப்படைத்தன்மை, உற்பத்தி வெளிப்படைத் தன்மை, மற்றும் புவியியல் வெளிப்படைத் தன்மை என்பவற்றின் கீழ் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதற்கு அமைவாக கடன் குவிப்பு இடரை வங்கி அளவிடுகின்றது.

### துறைசார்ந்த வெளிப்படுத்தல்கள்

| கைத்தொழில் | தொகை (ரூபா.) |
|---|---|
| விடுகள் நிர்மாணித்தல் | 7,772,323,302 |
| வீடு சீரமைப்புகள் | 5,263,923,586 |
| நிர்மாண காணி கொள்வனவு | 125,755,775 |
| வீடுகள் கொள்வனவு | 3,016,895,582 |
| விவசாயம் | 395,968,955 |
| சுயதேவைக் கடன்கள் | 672,455,624 |
| விவசாய வாகன கொள்வனவு | 61,730,180 |
| ஏனையவை | 1,144,707,278 |
| **மொத்தம்** | **18,453,760,281** |

### புவியியல் அவதானிப்பு

| மாகாணம் | தொகை (ரூபா.) |
|---|---|
| மேல் | 11,446,238,113 |
| தென் | 1,598,667,844 |
| வடக்கு | 119,581,619 |
| மத்திய | 2,633,303,601 |
| ஊவா | 262,062,679 |
| கிழக்கு | 60,296,568 |
| சப்ரகமுவ | 457,585,605 |
| வட மேற்கு | 1,559,223,927 |
| வட மத்திய | 316,800,324 |
| **மொத்தம்** | **18,453,760,280** |

### புவியியல் அவதானிப்பு




### துறைசார்ந்த வெளிப்படுத்தல்



## இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

| உற்பத்தி | தொகை ரூபா |
|---|---|
| ஈட்டு கடன்கள் | 6,520,663,314 |
| உசேநி கடன்கள் | 9,345,488,107 |
| வாகனக் கடன்கள் | 48,719,545 |
| பணியாளர் கடன்கள் | 419,864,101 |
| சுய தேவைக் கடன்கள் | 637,909,931 |
| ஏனையவை | 1,481,115,283 |
| **மொத்தம்** | **18,453,760,281** |

### உற்பத்தி அவதானிப்பு




### 2008-2012 வரை செயற்படாத முற்பணங்கள்

| ஆண்டு | மொத்த செயற்படாத முற்பணம் | தேறிய செயற்படாத முற்பணம் |
|---|---|---|
| 2008 | 31.84 | 31.88 |
| 2009 | 41.28 | 41.42 |
| 2010 | 37.11 | 37.22 |
| 2011 | 34.06 | 34.07 |
| 2012 | 37.42 | 36.94 |




### சந்தை இடர்

சந்தை வீதங்களின் அல்லது விலைகளின் அசைவுகளினால் ஏற்படும் பாதகமான தாக்கங்களினால் ஐந்தொகைக்குள்ளும் வெளியிலும் ஏற்படும் பெறுமதியினால் உருவாகும் இடர்.

வங்கியை பொறுத்தவரை. சந்தை இடர் என்பது வட்டி வீதங்கள் மற்றும் திரவ இடர்களை பெரும்பாலும் குறிப்பிடுகின்றது. பொதுவாக நிதி சந்தைகளின் தளம்பல்களிலிருந்து ஏற்படக்கூடிய உத்தேச தாக்கங்களுக்கு முக்கியமாக வீடமைப்பு நிதி சந்தைகளுக்கு வங்கி குறிப்பிடத்தக்க மேலதிக கவனத்தை செலுத்துகின்றது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவக் குழு (ALCO) சந்தை இடரின் மேற்பார்வைக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பேற்பதுடன், வங்கியின் திரவ இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகவுள்ளது.

வங்கியின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் கட்டமைப்பு/ தொகுப்பு என்பவற்றை கண்காணிப்பதற்கும், கடன்களும் முற்பணங்களின் உற்பத்தி விலைகளை தீர்மானிப்பதற்கும் அசுமுவ. யின் அல்கொ பொறுப்பேற்கின்றது. தேவைப்படும் முதிர்ச்சி விபரத்திரட்டையும், அதிகரிக்கும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அலகையையும் குழு தீர்மானிக்கின்றது.

வங்கியின் தெளிவான வட்டி வீதமும் எதிர்கால வர்த்தக உபாயங்களை தீர்மானிப்பதும், மீளாய்வதும் தெளிவான நிதிக் கொள்கைகளும் தற்போது குழுவினால் மேற்கொள்ளப்படும் சில நடவடிக்கைகளாகும். அசுமுவயிடம் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சொத்துகள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவ கொள்கையும், மற்றும், திரவ விடயங்களை நிர்வகிப்பதற்காக அவசர தேவைக்கான நிதி திட்டங்களையம் வைத்துள்ளது.

### வட்டி வீத இடர்

குறிப்பிட்ட கால எல்லைக்குள் வட்டி வீத திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய நிலைமைகளுக்கிடையில் ஒரு பொருத்தப்பாடு இன்மை காணப்படும் போது வட்டி வீத இடர் ஏற்படுகின்றது. வங்கியின் கடன் வழங்கல், நிதியளிப்பு மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகள் போன்றவை வட்டி வீத இடர்களுக்கு வழி வகை செய்கின்றன.

வைப்புக்களின் ஊடாக பிரதான நிதியளிப்புச் செய்யப்படுகின்ற மையால் இது வங்கியின் சந்தை இடரின் பாரியதொரு பகுதியாக காணப்படுகின்றது. சேமிப்புகள் குறுகிய காலம் முதல் நடுத்தர காலத்தை கொண்டிருக்கின்றது. ஆயினும் வங்கியின் முக்கிய வர்த்தகமான வீடமைப்பு நிதியிடல் பொதுவாக நீண்ட கால கடன் வழங்கல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. வங்கியின் பெரும்பாலான பொறுப்புகள் அடிக்கடி மீள்விலையிடல்களுக்கு உள்ளாகும் அதேநேரம் அதன் கடன் வழங்கும் வீதம் நிலையான வீதத்தில் இருக்கின்றது.

ஆண்டின் போது அதிகரித்த வட்டி, கிரய எல்லையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் வங்கி, இந்த சமமின்மையை சந்திப்பதற்கு உபாயங்களையும் ஆராய்ந்து வருகின்றது.

## இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

சமமின்மைகளை சமப்படுத்துவதற்கும் வாடிக்கையாளர் தேவைகளையும், சந்தை நிலைமைகளையும் சமப்படுத்துவதற்கும் ஆண்டின்போது அனேக புதிய சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

2013 இல், அஈமுவ நீண்டகால மிதக்கும் வட்டி வீதங்களை அறிமுகப்படுத்தியது.

பொதுவாக, தேறிய வட்டி வருமானம் தொடர்பான எந்தவொரு எதிர் தாக்கத்தையும் நிர்வகிக்கும் பொருட்டு சந்தை வீத தளம்பல் மற்றும் உழைப்பு வளைய மாற்றங்களின் முக்கியமான தாக்கத்தை சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான குழு முகாமைத்துவம் செய்கின்றது.

### திரவத்தன்மை இடர்

நிறுவனமொன்று அதன் கடப்பாடுகளை சந்திப்பதில் இயலாமை ஏற்படும் போது உருவாகும் உத்தேச நட்டம் அல்லது, சொத்துக்கள் தொடர்பான நிதி அதிகரிப்பினால் அல்லது வங்கி தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் இயலாமை போன்றவற்றின் ஊடாக நிறுவனத்திற்கான நட்டத்தினை ஏற்படுத்துவதற்கான முக்கிய காரணியாக திரவ இடர் காணப்படுகின்றது. திரவ இடரினை தனிப்படுத்த முடியாது, காரணம், சந்தை இடர் மற்றும் கடன் இடர் போன்ற ஏனைய நிதி ரீதியான இடர்களின் விளைவாக இது அடிக்கடி ஏற்படுகின்றது.

வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் விபரத்திரட்டின் தன்மையின் காரணமாக அஈமுவ தொடர்பாக திரவத் தன்மை முகாமைத்துவம் மிக முக்கிய விடயமாகக் காணப்படுகின்றது. கடன் வகைகளின் தரத்தினை மேம்படுத்துவது தொடர்பாக வங்கி அதிக கவனம் செலுத்தும் அதே வேளை சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் தொகுப்பு, பொறுப்புகளின் பன்முகப்படுத்தும் நிலைபாடு மற்றும் ஸ்திரத்தன்மை போன்றவை தொடர்பாகவும் கண்காணிப்புச் செய்கின்றது.

வைப்புக்கள் தொடர்பாக வழங்கப்படுகின்ற வட்டி வீதங்களின் போட்டித் தன்மை மற்றும் நியாயமான வீதம் போன்றவற்றின் ஊடாக வங்கி வைப்பாளர்களின் நம்பிக்கையினைப் பெற்றுள்ளது மற்றும் அதிகரிக்கப்பட்டுள்ள கிளை வலையமைப்பின் ஊடாக சிறுவர்த்தக வைப்பாளர்கள் தொடர்பான பிரவேசமும் அதிகரித்துள்ளது.

எனவே, மொத்த விற்பனை வைப்புகளில் தங்கியிருப்பது குறைந்துள்ளது. சொத்து புத்தகத்தில் முதிர்வு சமமின்மைகளின் விளைவான, பெற்றுக் கொள்ளக் கூடிய கிரயங்களிலான நீண்டகால கடன் பெறுகை பத்திரங்கள் குறைவடைந்துள்ளன. முதிர்ச்சி சமமின்மைகளை குறைப்பதற்கு புத்தாக்கமுள்ள உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் ஆய்வுகளில் வங்கி ஈடுபட்டுள்ளது.

அல்கோவினாலும், சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினாலும் கலந்துரையாடப்படும். இமவ யின் இடர் பணிப்புரைகளுக்கு அமைவாக, திரவ விகிதங்கள் பலவற்றை வங்கி கண்காணிக்கின்றது.

கிரமமான காசுப் பாய்ச்சல் எதிர்வு கூறல்கள், திரவத் தன்மை விகிதங்கள் மற்றும் முதிர்வு இடைவெளி பகுப்பாய்வுகள் ஊடாக வங்கி தனது சொந்த திரவத் தன்மை அசைவுகளை கண்காணிக்கின்றது. சந்தைப் பிரவேச வாய்ப்பு மற்றும் எதிர்பாராத நிதியிடல் திட்டம் பற்றியும் வங்கி பகுப்பாய்வு செய்கிறது.

கடன் வழங்கல் மற்றும் வைப்பு வீதங்கள் தொடர்பான வங்கியின் ஆரம்ப நிலை நடு நிலையாளர் என்ற வகையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய குழு, தளம்பல் நிலையான சந்தை நிலைமைகளில் அதிக பொருத்தப்பாட்டினை ஏற்படுத்தும் பொருட்டு நிரல் படுத்தப்பட்ட முறைசார் கூட்டங்களின் தடவைகளை அதிகரித்துள்ளது.

திரவத் தன்மையுடன் தொடர்புடைய ஒழுங்கு விதித் தேவைகளை வங்கி ஒழுங்காக நிறைவேற்றுகின்றது.

| விகிதம் | 31/12/2012 | 31/12/2011 |
|---|---|---|
| தேறிய கடன்/மொத்த சொத்துகள் | 81.9168575 | 78.8446323 |
| கடன்களும்/வாடிக்கையாளர் வைப்புகளும் | 106.4653194 | 107.1740644 |
| திரவ சொத்துகள்/ குறுங்கால பொறுப்புகள் | 21.98 | 20.04 |

(திரவ சொத்துகளில் காசும் குறுங்கால நிதியும், குறுங்கால முதலீடுகளும் உள்ளடங்கும். குறுங்கால பொறுப்புகளில் சேமிப்பு வைப்பு, ரெப்போ கடன்கள் மற்றும் நடப்பு வரியிடல்கள் உள்ளடங்கும்.)

திரவ மாறுபாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மோசமான சூழ்நிலைகளில் அழுத்த பரிசோதனை அதன் விபரத்திரட்டின் மீளும் அளவீடுகளை அடிக்கடி மேற்கொள்ளும்.

### தொழிற்பாட்டு இடர்

மக்கள் மற்றும் முறைமைகள் அல்லது வெளியக நிகழ்வுகளிலிருந்தான அழுத்தங்களின் காரணமாக பற்றாக்குறை அல்லது உள்ளக ரீதியாக தோல்வியடைந்த செயன்முறைகளின் விளைவால் ஏற்படுகின்ற நட்டம் தொழிற்பாட்டு இடராகும். மனிதர்களின் தவறுகள், முறைமையின் கோளாறுகள் மற்றும் முழுமையற்ற ஒழுங்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொழிற்பாட்டு இடர் தொடர்பாக செல்வாக்குச் செலுத்துகின்றன.

கொள்கைகள், தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ஒழுங்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை உரிய ஒழுங்குக்கு கொண்டு வருவதன் ஊடாக தொழிற்பாட்டு இடரினை வங்கி குறைக்கின்றது. வங்கியானது தனது முறைமை அபிவிருத்திச் செயன்முறை மற்றும் மேம்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. தகவல் தொழில்நுட்பம், இடர் தவிர்ப்பு மேற்பார்வை, ஊழியர்களின் திறன் அபிவிருத்தி, ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளின் உரிய நேர அறிமுகம் மற்றும் இடர்களை பரிவர்த்தனை செய்யும் செயற்பாடுகளின் பயன்பாடு போன்றவற்றின் ஊடாக கட்டுப்பாடுகள் தொடர்பான

## இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

முன்னேற்றம் தொடங்கியுள்ளது. தொழிற்பாடுகள் மற்றும் பணிகளின் மீளாய்வுகள் கிரமமாக கூட்டங்களின் போது கவனத்திற்கு கொள்ளப்படுகின்றன.

ஊழியர்கள் தங்களுடைய தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய சரியான தொழிற்பாட்டு ஒழுங்குவிதிகளை பெற்றுக் கொள்வதற்கும் அக் கொள்கைகளுடன் தொடர்புபடுவதற்கான தங்களுடைய பொறுப்புக்களை மேன்மைப்படுத்தும் நோக்கில் ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றன.

நடவடிக்கை அலகுகள் ஒவ்வொன்றிற்கும், நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளினால், இடர் முகாமைத்துவ பிரிவிற்கு செயற்பாட்டு இடர் நிகழ்வுகள் அறிவிக்கப்படுகின்றன. வங்கியின் செயற்பாட்டு இடர் முகாமைத்துவ நடவடிக்கையினால் மேற்கொள்ளப்படும் அடிப்படை மாதிரிகளிலமைந்த மீளாய்வுகள் கணக்காய்வு கண்டு பிடிப்புகள், கணக்காய்வு செயன்முறைகள் கிளைகளுக்கான விஜயங்கள் என்பனவும் இடர் அடையாளம் காணும் செயன்முறைக்கு தகவல்களை அளிக்கின்றன.

வர்த்தக நடவடிக்கைகளின் அடிப்படையில், நட்ட நிகழ்வுகளை சேகரிப்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும், நட்டங்களை தேடிக் கண்டடையும் தரவு தளம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. கற்றுக் கொண்ட பாடங்களின் மீது தடைகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்படும்.

செயன் முறையில் ஏதும் குறைபாடுகள் கண்டு பிடிக்கப்படும் போது ஏற்கனவே செய்யப்பட்ட வேலை மீண்டும் தொடரப்படுவதை தவிர்த்துக் கொள்வதற்காக உடனடி முறைசார் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சுமுகமான மற்றும் சிறந்த தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தி வியாபாரச் செயற்பாடுகள், கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகளில் வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வங்கியின் உரிய கொள்கைகளுடன் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் இணக்கப்பாட்டு மட்டத்தை உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாளர்கள் கண்காணிக்கின்றனர்.

திறமையான சேவை வழங்குதல் மற்றும் சரியான தீர்மானங்கள் எடுக்க உதவுவது எனும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை பலப்படுத்தவதற்காக தகவல் முறைமையையும் முகாமைத்துவ தகவல் முறைமையையும் தரமுயர்த்துவதற்கு, முதலீடு செய்யும் நடவடிக்கைகளை வங்கி ஆரம்பித்துள்ளது. மாற்று பங்கீட்டு துறைகளுடாக சந்தை பங்குகளை ஊடுறுவுவதையும், மக்கள், கட்டமைப்பு, மற்றும் முறைமைகளுடாக போட்டிகளில் வாய்ப்பான சூழ்நிலைகளை உறுதி செய்வதையும், வங்கி கடப்பாடாகக் கொண்டுள்ளது.

#### சட்ட இடர்

நீதிமன்ற கட்டளையின் படியான நெருக்குதல் செய்ய முடியாத கொடுக்கல் வாங்கல்கள் அல்லது வங்கிக்கு எதிராக ஆக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகளை வெற்றிகரமாக தவிர்த்துக் கொள்வதில் தோல்வியடைதல் போன்றவற்றின் காரணமாக சட்ட இடரானது எழுகின்றது. இவ்வாறான நிகழ்வுகளின் போது வங்கியின் தற்போதைய சட்டக் குழு தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது மட்டுமல்லாது இவ்வாறான இடர்களை வெளிப்படுத்துவதற்கும் அவற்றுக்கான தீர்வு காணல் தொடர்பாகவும் வங்கி உடனடி நடவடிக்கைகளை எடுக்கின்றது. வங்கி முகங்கொடுக்கக் கூடிய சட்ட இடர்களிலிருந்து விடுபடும் பொருட்டு தேவையாயின் வங்கி வெளியக சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும்.

#### உபாய இடர் முகாமைத்துவம்

மோசமான வியாபாரத் தீர்மானங்கள், தீர்மானங்களின் முறையற்ற அமுலாக்கம் அல்லது கைத்தொழில் மாற்றங்கள் தொடர்பாக குறைவான பிரதிபலிப்பு என்வற்றின் ஊடாக எழுகின்ற மூலதன உருவாக்கம் அல்லது உழைப்புக்கள் தொடர்பான நடைமுறை மற்றும் எதிர்பார்க்கப்படும் தாக்கங்களின் சாத்தியத் தன்மை என்பன உபாய இடர் முகாமைத்துவத்திற்கு காரணமாகின்றது.

நிருவன முகாமைத்துவத்துடன் பணிப்பாளர் சபை மற்றும் பொது முகாமையாளர் உபாயத் திட்டங்களை நடாத்துவதுடன் அவற்றின் உரிய அமுலாக்கத்திற்காக தொடர்பாடல்களையும் மேற்கொள்கின்றது. தீர்மானங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கும் இடர்களைத் தவிர்த்துக் கொள்வதற்காவும் ஒழுங்குவிதிகள் தொடர்பான தேவைப்பாடுகள், பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள், கூட்டாண்மை ஆட்சித் தேவைகள், ஒழுக்கம் மற்றும் கைத்தொழில் துறையின் சிறந்த படிமுறைகள் தொடர்பாக உரிய அவதானத்தை சபையும் நிருவன முகாமைத்துவமும் எடுக்கும் போது சகல உபாயத் தீர்மானங்களுக்கும் முன்னுரிமை வழங்குகின்றது.

#### இணங்குவிப்பு இடர்

பிரயோகிக்கப்பட வேண்டிய சட்டங்கள், ஒழுங்கமைப்புகள், நடத்தை விதிகள் மற்றும் நற்பிரயோகத்தின் தரங்களுடன் இணங்கி செயற்படாமையினால், வங்கிக்கு ஏற்படக்கூடிய நட்டமாக இது உள்ளது அஃமுவ வங்கிக்குள் இணங்குவிப்பு நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் சபையினால் இணங்குவிப்பு கையேடு ஒன்று அங்கீகரிக்கப்பட்டுமுள்ளது. இணங்குவிப்பு இடரின் இடைவிடாத முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக, வர்த்தகம் மற்றும் செயற்பாட்டு அலகுகளுடன் இணங்குவிப்பு நடவடிக்கைகள் நெருக்கமாகப் பணியாற்றுகின்றன.

# நிருவன ஆளுமை

அஈமுவ அதன் வாடிக்கையாளர்களுக்கு அளித்து வரும் தொழில்சார்ந்த அணுகுமுறை மற்றும் அர்ப்பணிப்புள்ள சேவை எனும் முக்கிய காரணங்களே அ.ஈமுவ தற்போது அடைந்துள்ள வலுவான ஸ்திரப்பாட்டிற்கான மூலகமாகவுள்ளது.

விவசாயம், வீடமைப்பு மற்றும் கைத்தொழில் துறைகளுக்கு நிதி உதவியும் ஆலோசனையும் வழங்குவதும் 1975 இன் 13 ஆம் இல. சட்டத்திற்கு ஏற்பவும் அதன் தொடர்ச்சியான 1981 இன் 62, 1984 இன் 29 மற்றும் 1994 இன் 10 ஆம் இல. திருத்தங்களுக்கு அமைவாகவும் சேமிப்புகளின் திரட்டலை மேம்படுத்துவதும் வங்கியின் முக்கிய நோக்கமாகும்.

பொருளாதாரத்திற்கும் சமூக குறிக்கோள்களுக்குமிடையே சமநிலையை பேணுவதற்காக அ.ஈ.மு. வங்கியினால் வெளிப்படைத்தன்மையும் வகை கூறுதலும் கவனமாகப் பேணப்பட்டு வருகின்றது. இந்த வகையில் உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகளுக்காக 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டல்களின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட நல்லாட்சிக் கோட்பாட்டை பேணியும் வருகின்றது.

அஈமு வங்கிக்குள் நிறுவன ஆளுமையை நிறைவேற்றுவதில், பணிப்பாளர் சபை பிரயோகிக்கக்கூடிய ஏற்றுக்கொள்ளப்பட்ட செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளுடன் இணங்கி செயற்படுவதற்கான முயற்சிகள் அனைத்தையும் எடுத்துள்ளது.

**பணிப்பாளர் சபை**

வங்கியின் அலுவல்களை நெறிப்படுத்துவது மற்றும் மேற்பார்வை செய்வது என்பவற்றினூடாக வங்கியின் திறமையான செயற்பாட்டிற்கும் வெற்றிக்கும் சபை கூட்டாக பொறுப்பேற்கின்றது.

வங்கியின் நிறுவன ஆளுமை சுமூகமாகவும் திறமையாகவும் செயற்படுவதை உறுதி செய்வது பணிப்பாளர் சபையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருக்கின்றது.

நிதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஒன்பது பணிப்பாளர்களை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. வங்கியின் ஒட்டு மொத்த செயற்பாடுகள் மற்றும் நிதியியல் ஸ்திரத்தன்மை என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகவும் வகைகூறுவதாகவும் இருக்கின்றது. வங்கியின் நியம தேவைப்பாடுகளை கடைப்பிடிக்கும் அதே நேரம் அதன் தீர்க்கமான யுக்திகளுக்கும், சரித்தன்மைக்கும் பொறுப்பேற்க வேண்டியுள்ளது.

நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஒன்பது பணிப்பாளர்களை, பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. சமூகவியல், நிதி, சட்டம் மற்றும் வர்த்தக துறைகளில் பரந்த அறிவும் அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்படுகின்றது.

வங்கியின் நடப்பு தேவைகளைப் பிரதிபலிப்பதற்கு. திறமை மற்றும் அனுபவத்தின் தவிர்க்க முடியாத மாற்றங்கள் தேவைப்படுகின்றன. இது வங்கியை திறமைமிக்க தீர்மானமெடுக்கும் நிறுவனமாக்குவதற்கு இன்றியமையாததாகும்.

பணிப்பாளர்கள் மத்தியிலிருந்து தலைவர் ஒருவரை நியமிப்பதற்கு கௌரவ அமைச்சர் அதிகாரம் பெற்றிருக்கின்றார்.

சபை திறமையாக பணியாற்றுவதையும், அதன் பொறுப்புகளை நிறைவேற்றுவதையும் ஏற்ற நேரத்தில் அனைத்து முக்கியமானதும் பொருத்தமானதுமான விடயங்களையும் கலந்துரையாடுவதையும் தலைவர் அவதானிப்பதுடன் சபையின் அலுவல்களுக்கு தலைமைத்துவம் வழங்குவதையும் உறுதிப்படுத்துவார். சபை கூட்டங்களில் எழுப்பப்படும் விடயங்களை, பணிப்பாளர் அனைவருக்கும் தலைவர் சரியாக விளக்குவார். வங்கியின் அபிவிருத்திக்கு பணிப்பாளர்கள் நிறைவான உற்சாகமான பங்களிப்புகளை செய்வார்கள்.

**சபை கூட்டங்கள்**

சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடைபெறுவதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் விசேட கூட்டங்கள் நடத்தப்படும். சபை கூட்டங்களுக்கு முன்னறிவித்தல் வழங்கப்படும்.

சரியான தீர்மானம் எடுத்தலை இலகுபடுத்தும் விதமாக நியாயமான, நேரகாலம் மற்றும் உரிய நேரத்தில் போதியளவான தகவல்கள் என்பவை பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும்.

வங்கியின் உபாயங்களையும், நிறுவனத்தின் மதிப்பீடுகளையும் பேணுவது அதன் முக்கிய நோக்கமாகும். அத்துடன் வங்கியின் வர்த்தகத்துடனும் முகாமைத்துவத்துடனும் தொடர்புடைய அலுவல்கள் மற்றும் பிரேரணைகள் என்பவை சரியாக பின்பற்றப்படுவதையும் உறுதி செய்தது.

இக் கூட்டங்களில் கருத்திற் கொள்ளப்படும் முக்கிய விடயங்களில், நிறுவன உபாயம், வரவு செலவு திட்ட செயற்பாடுகள், நிதி செயற்பாடுகள். அதிகார பங்கீடு, மற்றும் கடன்களை அங்கீகரித்தல் அல்லது மீளாய்வு செய்வது என்பவையும் உள்ளடங்கும்.

2012 இல் 12 சபைக் கூட்டங்கள் நடந்தன. விதிமுறைகள் மற்றும் ஒழுங்கமைப்புகளுக்கு அமைவாக சபையின் செயலாளரிடம், சபையின் கூட்ட அறிக்கைகள் பேணப்படுகின்றன.

**பொது முகாமையாரின் நடவடிக்கைகள்**

வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக பொது முகாமையாளர் இருக்கின்றார். விசேடமாக அல்லது பொதுவாக எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட சபையினால் வழி நடத்தப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் செயற்படுத்துகின்றனர்.

சபையினால் அங்கீகரிக்கப்பட்ட உபாய நோக்கங்கள், நிருவன மதிப்பீடுகள், ஒட்டு மொத்த இடர் கொள்கை, மற்றும் மிகவும் அந்தரங்கமான இடர் முகாமைத்துவ நடைமுறைகள் யாவும் வங்கியின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் அனைத்திற்கும் பொறுப்பான நிறுவன முகாமைத்துவக் குழுவிற்கு தலைமை தாங்கும் பொது முகாமையாளருக்கு அளிக்கப்படுகின்றது.

# நிருவன ஆளுமை தொடர்ச்சி

### உப குழுக்கள்

வரையறுக்கப்பட்ட பணி பரப்பெல்லையை கொண்ட அனேக சபை உப குழுக்கள் வங்கியில் செயற்படுகின்றன. இக் குழுக்கள் அவற்றிற்கு கொடுக்கப்பட்டுள்ள விடயங்கள் மீது, பணிப்பாா் சபைக்கு நிபுனத்துவ ஆலோசனைகளை வழங்கும் பொறுப்பைக் கொண்டுள்ளன.

அத்துடன் தொடர்புடைய விடயங்களில் அனுபவமுள்ள பணிப்பாளர்களினால் இக்குழுக்கள் தலைமைதாங்கப்படுவதுடன் அவா்கள் சுயாதீனமாகவும் பணியாற்றுகின்றனா்.

வங்கியின் கட்டுப்பாட்டு அலுவல்கள் சுமூகமாக நடைபெறுவதை நிருவன ஆளுமை உறுதிப்படுத்துகின்றது. இதற்கென, கணக்காய்வு, கடன், மனித வளங்களும் ஊதியங்களும் முகாமைத்துவம், சொத்துகள் பொறுப்புகள் மற்றும் இடர் முகாமைத்துவம் (ALCO) என்பவற்றை கவனிப்பதற்காக பல உப குழுக்களை சபை நியமித்துள்ளது.

ஒழுங்கமைப்பு தேவைகளுக்கு ஏற்பவும், வங்கியின் தேவைகளுக்காகவும், சபையின் உப குழு கூட்டங்கள் கிரமமாக நடத்தப்படுகின்றன.

### கணக்காய்வுக் குழு

வங்கியின் 4 பணிப்பாளர்களை கணக்காய்வுக் குழு உள்ளடக்குவதுடன் பிரதான உள்ளக கணக்காய்வாளா், குழுவின் செயலாளராகச் செயற்படுகின்றாா். பொது முகாமையாளா், பி.பொ.மு. (நிதி), பி.பொ.மு. (கடன்), பிரதான இடா் அலுவலா் மற்றும் உ.பொ.மு. (நிதி) ஆகியோா் அறிவித்தலின் பிரகாரம் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனா். நல்லாட்சி நோக்கம் கருதி அரச முயற்சிகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவப்பட்ட கணக்காய்வுக் குழு பணிப்பாளா் சபைக்கு பொறுப்பு கூறுதல் வேண்டும்.

உள்ளகக் கணக்காய்வு அலகின் பரப்பெல்லையை நிா்ணயித்தல், முகாமைத்துவக் கடிதங்களை மீளாய்வு செய்தல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளடக்கங்களை ஆராய்தல், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் வினைத்திறன் மற்றும் பூரணத்துவத்தை பரீட்சித்தல், வெளியிட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் நியதிச் சட்டக் கணக்குகளை மீளாய்வு செய்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணைவாக மதிப்பாய்வு செய்தல், அறிக்கைகள் உள்ளடங்களாக செயலாற்றுகை மற்றும் பொது முயற்சிகள் பற்றிய குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தல் என்பவை கணக்காய்வுக் குழுவின் பொறுப்பாகும். 2012 ஆம் ஆண்டின் போது நான்கு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

### மனித வள ஊதியங்கள் குழு

01.01.2008 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு நிருவன ஆளுமை பணிப்புரைக்கு அமைவாக மேலேயுள்ள குழு நிறுவப்பட்டது. இக் குழுவானது மூன்று பணிப்பாளா்களை உள்ளடக்குகின்றது. இக் குழுவின் செயலாளராக உ.பொ.மு (சட்டம்) இருப்பதுடன், பொ.மு. மற்றும் உ.பொ.மு (தி மற்றும் நி) ஆகியோா் அறிவித்தலின் பிரகாரம் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனா்.

மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல் வழிகாட்டல்கள் மற்றும் பணிப்பாளா் சபையின் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப இக் குழு செயற்படுகின்றது. கொடுப்பனவுகள் தொடா்பான கொள்கைகளை தீா்மானித்தல், செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல், கண்காணிப்புக்களை அறிமுகம் செய்தல் மற்றும் அபிவிருத்தி மற்றும் மனித வளச் செயலாற்றுகையினை மீளாய்வு செய்தல் தொடா்பாக இக் குழு அதிகாரம் பெற்றுள்ளது. 2012 ஆம் ஆண்டின் போது நான்கு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

### நிறைவேற்றதிகாரமுள்ள கடன் குழு

பொது முகாமையாளா் தலைமை தாங்குகின்ற கடன் குழுவானது, பிபொமு/உபொமு - (கடன்) பி.பொமு. - (நிதி, திட்டமிடல் மற்றும் நிருவாகம்,) உதவி பொது முகாமையாளா், (கடன்) மற்றும் உ.பொ.மு அறவீடுகள் போன்றோா்களை இக்குழு உள்ளடக்குகின்றது. உ.பொ.மு. - சட்டம் மற்றும் உ.பொ.மு. - மதிப்பீடுகள் அறிவித்தலின் பிரகாரம் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனா். இக் குழுவானது வங்கியின் கடன் கொள்கையினை உருவாக்குவதுடன் கடன் இடா் முகாமைத்துவம் செய்யப்படுவதை கண்காணிப்புச் செய்கின்றது.

முன்னரும் மேலேயும் குறிப்பிட்ட பிரகாரம் முகாமைத்துவம் தொடா்பான அதிகாரத்தை வழங்குகின்றமை தொடா்பாக அங்கீகாரத்தைப் பெறுவதற்கு இக் குழுவின் பரிசீலனைக்கு முன்வைத்தல் வேண்டும். 2012 ஆம் ஆண்டின் போது முப்பத்து இரண்டு (32) கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

### சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவக் குழு

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவ குழுவின் பிரதான தொழிற்பாடுகளாவன: வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கண்காணிப்புச் செய்தலாகும். அத்தோடு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடா்பாக ஏற்படக் கூடிய இடரை மதிப்பீடு செய்தலும் முகாமைத்தும் செய்தலுமாகும்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு பொது முகாமையாளரினால் தலைமை தாங்கப்படுவதுடன் பிரதிப் பொது முகாமையாளா் (நிதி), பிரதிப் பொது முகாமையாளா் (கடன்), பிரதான இடா் அலுவலா், உதவிப் பொது முகாமையாளா் (நிதி) மற்றும் உ.பொ.மு. (த.தொ) குழுவின் செயலாளா் என்ற வகையில் திறைசேரி நிறைவேற்று அலுவலா் ஆகியோரை உள்ளடக்குகின்றது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடா்பான தீா்வுக்கான அதிகாரம் பணிப்பாளா் சபையிடம் வழங்கப்பட்டுள்ளது. இக் குழுவானது உயா் நிலை தொழிற்பாட்டு அலகாகவும், பணிப்பாளா் சபையினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப ஐந்தொகையை

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

முகாமைத்தும் செய்தல் தொடர்பாகவும் செயற்படுகின்றது. 2012 ஆம் ஆண்டின் போது 07 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

### முகாமைத்துவக் குழு

பணிப்பாளர் சபையினால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடான சூழல் மற்றும் சட்டத்திற்குட்பட்ட செயற்பாடு, வங்கியின் நாளாந்தச் செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருப்பது என்பவை நிருவன முகாமைத்துவத்தின் கடமையாகும். குழுவிற்கு பொது முகாமையாளர் தலைமை வகிப்பதுடன் பிரதான முகாமையாளர் தரத்திற்கு மேற்பட்ட அனைத்து அலுவலர்களையும் இக் குழு உள்ளடக்குகின்றது. முகாமைத்துவக் குழுவுடன் இணைந்து, மாதம் இருமுறை கிளை முகாமையாளர்கள் இக் கூட்டங்களில் பங்கேற்றார்கள். இலக்குகள், வாய்ப்புகள், விடயங்கள் மற்றும் நடப்பு அபிவிருத்திகள் என்பவற்றை பற்றி கலந்துரையாடுவதற்கு இவை கிரமமாகக் கூடுகின்றன.

2012 ஆம் ஆண்டின் போது ஏழு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

### ஒழுக்கங்கள்

சகல பணிப்பாளர்கள், உயர் முகாமைத்துவம், நடுத்தர முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள் தமது அலுவலகக் கடமைகளை நிறைவேற்றும் போது ஒருமைப்பாடு மற்றும் நேர்மை போன்றவற்றில் அதி உயர் நிலையினை பேணுதல் வேண்டும் என வங்கி எதிர்பார்க்கின்றது. வலுவான ஒழுக்கக் கலாச்சாரத்தை உருவாக்கும் நோக்கில் பணிப்பாளர் சபையினால் பின்வரும் பிரதான அளவீடுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

- எமது வங்கியின் நற்பெயயருக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலான ஆட்கள், நிறுவனங்கள், உற்பத்திகள் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் நாங்கள் தெரிந்து கொண்டே ஈடுபட மாட்டோம்.
- எமது சட்டம் மற்றும் ஒழுங்கு முறையான கடப்பாடுகள் தொடர்பாகச் செயற்படல் தொடர்பாக நாங்கள் சாதகமான மனோ நிலையில் இருக்கின்றோம். இந்த நிலையானது எமது தீர்மானம் எடுப்போர்களையும் எம்மையும் பாதுகாக்கின்றது.
- வங்கியின் நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற சகல விடயங்களின் போதும் தனியாள் தொடர்புகள் மற்றும் உயர் நிலை ஒருமைப்பாட்டைப் பேணல், மனச்சாட்சியாகவும், வினைத்திறனாகவும் மற்றும் நேர்மையாகவும் அவர் அல்லது அவள் தனது கடமைகளை நிறைவேற்றுவதன் ஊடாக வங்கியின் வெற்றிக்கும் நற்பெயருக்கும் பங்களிப்புச் செய்தல் தொடர்பாக பதவியணியின் ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் பொறுப்பு உண்டு.
- எதேனும் பிழையான செயற்பாடு என சந்தேகிக்கத் தக்க நிகழ்வுகள் இடம் பெறும் பட்டசத்தில் உயர் முகாமைத்துவத்திற்கு அதனை அறிவிப்பதற்கு நாங்கள் ஊக்கம் வழங்குகின்றோம்.
- தொடர்ச்சியான உயர் தரங்களை நிலையாகப் பேணும் பொருட்டு, பரிசுப் பொருட்களை ஏற்றுக் கொள்வதோ அல்லது வரவேற்புகளை அங்கீகரிப்பதோ இல்லை. ஏனெனில் இவை எமது வங்கி பற்றி பிழையான கருத்தை ஏற்படுத்தக் கூடியவை. தனிப்பட்ட சொந்த இலாபங்கள் கருதி, எமது வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக வருகின்ற தகவல்களை பயன்படுத்துவதனை நாங்கள் ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை.
- உயர்தரமான வியாபார நேர்மைகள் மற்றும் நியாயமான கொடுக்கல் வாங்கல் ஊடாக வெற்றிகளுக்கு இட்டுச் செல்கின்றதும் இருசாராருக்கும் நன்மை கிடைக்கக் கூடியதுமான வியாபார உறவுகளை நாங்கள் வரவேற்கின்றோம்.
- பொருத்தமான விநியோகத்தர்கள் மற்றும் சேவை வழங்குனர்களிடமிருந்து போட்டித் தன்மையான பிரேரனைகளை நாங்கள் பொதுவாக எதிர்பார்ப்போம்.
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு உள்ளடங்கலாக சகல ஊழியர்கள் தொடர்பான பொறுப்புக்களை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம்.
- ஊழியர்களின் அலுவலக மற்றும் குடும்ப வாழ்க்கையை ஒருங்கிணைக்கின்ற வாழ்வியல் முறைமையொன்றை அபிவிருத்தி செய்வதற்கு நாங்கள் ஊக்கம் வழங்குகின்றோம்.
- வங்கியின் சிறந்த செயலாற்றுகை நன்மைகளை பகிர்ந்து கொள்வதற்கான இயலுமை பணியாளர்கள் அவைனவருக்கும் கிடைப்பது முக்கியமானது என நாங்கள் நம்புகின்றோம்.
- ஊழியர்கள் சுய ஒழுக்கத்தை கடைப்பிடிக்கக் கூடியதும், வேலை தொடர்பாக பொறுப்பை ஏற்படுத்தும் மனோபாவத்தையும் முயற்சியையும் வங்கி ஊக்கப்படுத்துகின்றது. வங்கியின் ஒழுக்கக் கொள்கையின் பிரதான நோக்கமானது தண்டனை வழங்குவதன்று மாறாக திருத்துவதாகும் மற்றும் இது அரசாங்கத்தின் ஒழுங்குவிதிகளுக்கும் வழிகாட்டலுக்கும் இணைவாகவும் உள்ளது. இவை சகல ஊழியர்கள் தொடர்பாகவும் நியாயமானதும் நிலையானதுமான கவனிப்பை உறுதிப்படுத்தும் நோக்கம் மற்றும் நியாயமான செயலாற்றுகைத் தரம் மற்றும் நடத்தையை உருவாக்குகின்றது.
- வாடிக்கையாளர்களை முழுமையாக புரிந்து கொள்வதன் ஊடாக எமது கடன் தீர்மானங்களை அமைத்துக் கொள்வதற்கும் பொறுப்புடன் கடன் வழங்குவதற்கும் இலக்குகளை வைத்திருக்கின்றோம்.
- சமத்துவம், பன்முகத்தன்மை மற்றும் வியாபார வெற்றிகளுக்கிடையே ஒரு தெளிவான பிணைப்பை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
# AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. } எவ்பி/ஈ/எஸ்எம்ஜபி/எவ்ஏ/2012 ඔබේ අංකය / உமது இல / Your No. } දිනය / திகதி / Date } 21 செத்தெம்பர் 2013

தலைவர்
அரச ஈட்டு முதலீட்டு வங்கி

**இலங்கை மத்திய வங்கியினால் (இ.ம.வ.) வெளியிடப்பட்ட கூட்டு நிர்வாக வழிகாட்டலின் இணங்குவிப்பு தேவைப்பாடுகளுக்கு அமைவாக, அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபைக்கு, அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் கண்டறிந்தவைகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கூற்று**

இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) வெளியிடப்பட்ட கூட்டு நிர்வாக வழிகாட்டலின் தேவைப்பாட்டு அனுமதி மற்றும் சந்திப்பதற்கு முன்வைக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபையின் நிர்வாக அறிக்கை பற்றிய வகையில் என்னால் இந்த அறிக்கையின் பிற்சேர்க்கை தொடர்பாக கணக்கிடப்பட்ட செயன்முறைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்த உடன்படிக்கைகள் இணங்கி செயன்முறைகள் பற்றி பொருத்தமான 4400 இலங்கை நியமம் தொடர்பான சேவைகளின் (SLSRS 4400) கொள்கைகளுக்கேற்ப செயற்படுத்தப்பட்டுள்ளது. கூட்டு நிர்வாக வழிகாட்டலின் அனுமதி மற்றும் உதவி செய்ய சந்திப்பதற்கும் இந்த செயன்முறைகள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டுள்ளன. இணங்கிய செயன்முறைகளை செயற்படுத்துவதற்காக பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை என்னால் பெறமுடிந்தது.

இவ் அறிக்கைக்கு இணைக்கப்பட்ட பிற்சேர்க்கையில் என்னால் கண்டறிந்தவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலுள்ள செயற்பாடுகளுக்கிடையில் இலங்கையில் கணக்காய்வு நியமங்கள் மற்றம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமைக்கப்பட்ட கணக்காய்வொன்று அல்லது மிள்பரிசீலனையொன்று உள்ளடக்கப்படாததென்றும், CBSL மூலம் வழங்கப்பட்ட கூட்டு நிர்வாக வழிகாட்டலின் இணங்குவிப்பின் பிரகாரம் எந்தவொரு சான்றிதழையும் நான் சமர்ப்பிக்கவில்லை.

இலங்கையின் கணக்காய்வு நியமங்கள் மற்றும் நிதிக் கூற்றின் கணக்காய்வொன்று பொருத்துமாறு அல்லது மீள்பரிசீலனையொன்று அல்லது செயன்முறையொன்றும் என்னால் நிறைவேற்றியிருப்பின், உங்களுக்கு அறிக்கையிடப்பட்ட வேறு காரணங்களுக்கு எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

எனது அறிக்கை மாத்திரம் என்னால் இந்த அறிக்கையின் முதல் பந்தி வரைக்கும் உள்ள நோக்கங்களுக்காகவும் மற்றும் உங்களுக்கு தெரிந்துகொள்வதற்காகவும் இருப்பதோடு இது வேறு நோக்கங்களுக்காகவோ அல்லது வேறு எந்த தரப்பினருக்கும் பயன்படுத்தியிருக்கவோ முடியாது. இந்த அறிக்கையின் மேலுள்ள விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்டவர்களுக்காக மட்டும் பொருந்துவதோடு முழுமையாக அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் எந்தவொரு நிதிக் கூற்றும் செய்யப்பட மாட்டாது.

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. } 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

# நிருவன ஆளுமை தொடர்ச்சி

## அடையாளம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பான அறிக்கைக்கான இணைப்பு

**குறிப்பு: இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட வழிகாட்டல்களின் "பிரிவு 3" இற்கு ஏற்ப கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கமிடல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆவணம் தொடர்பாக பிரிவு 1 மற்றும் 2 ஏற்புடையதன்று.**

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(1) | பணிப்பாளர் சபையின் பொறுப்புகள் | | | | |
| 3(1)(i) | வங்கியின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறனான செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒழுங்கு முறைகள் தொடர்பில் உடன்பட்டுள்ளமை. | | | | |
| | அ) பணிப்பாளர் சபை அங்கீகாரம், வங்கியின் உபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டாண்மை பிரமாணங்கள் பரீட்சிக்கப்பட்டன. | இணங்குவிப்பு | | | 2009 - 2013 இற்கான மீள்திருத்தப்பட்ட உபாய திட்டத்தை அவதானித்தது.<br><br>சபையினால் அங்கீகரிக்கப்பட்ட (ச/ப/இல. 03/04/2009 யை அங்கீகரித்தது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மிகவும் அண்மையில் கிடைத்த ஆவணமாக இது இருந்தது. |
| | வங்கியின் செயற்பாட்டின் ஊடாக வங்கியின் உபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டாண்மை பிரமாணங்கள் உரிய முறையில் தொடர்பாடல் செய்யப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | ஒவ்வொரு பிரிவினதும் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அளிக்கப்பட்ட உபாய நோக்கங்களும், நிறுவன மதிப்பீடுகளும். |
| | ஆ) வங்கியின் ஒட்டு மொதத வியாபார உபாயங்கள் தொடர்பான சபையின் அங்கீகாரம் பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | நிறுவன திட்டத்தில் ஒட்டுமொத்த வர்த்தக உபாயம் உட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், 03/04/2009 இலக்கத்தினால் சபையினால் அங்கீகரிக்கவும்பட்டது. |
| | ஒட்டு மொத்த இடர் தொடர்பான கொள்கைகள், இடர் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் மற்றும் முறைமை என்பன வங்கியின் ஒட்டு மொத்த உபாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டன. | இணங்குவிப்பு | | | வங்கியின் இடர் முகாமைத்துவ இலக்குகளை வங்கி ஆவணப்படுத்தியதுடன், நிறுவனத் திட்டத்தில் அவை உட்சேர்க்கப்பட்டிருப் பதையும் அவதானித்தது. |
| | குறைந்தது எதிர்வரும் மூன்று வருடங்களுக்கான அளவிடக் கூடிய இலக்ககளை முழு மொத்த வியாபார உபாயம் கொண்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | மீள் திருத்தப்பட்ட உபாயத் திட்டத்தில், 2009 இலிருந்து 2013 இற்கான அளவிடப்பட்ட இலக்குகளிருப்பதை அவதானித்தது. |
| | இ) பணிப்பாளர் சபையினால் அடையாளம் காணப்பட்ட இடர்களை முகாமை செய்வதற்கு உரிய புத்திசாதுர்யமான முறையிலும் பொருத்தமான முறையிலும் அவற்றை முகாமை செய்தல் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு இடர் அடையாளம் காணலை காலத்திற்கு காலம் அறிவித்தது. சபையின் கூட்ட அறிக்கைகளையும், சபையின் பத்திரங்களையும் அவதானித்தது. (உ+ம்) சபை கூட்ட அறிக்கை இல. 3 & 5 A/V. இல. 12/03/18 & 12/5/11. |
| | ஈ) வைப்பாளர்கள், கடன் கொடுத்தோர்கள், பங்குதாரர்கள் மற்றும் கடன் பெறுனர்களை உள்ளடக்கிய சகல அக்கறை காட்டுனர்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையானது தொடர்பாடல் கொள்கை ஒன்றை அங்கீகரித்து அமுல்படுத்தி உள்ளதா என பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | இதற்கு வாடிக்கையாளர் பட்டயம் பயன்படுத்தப்பட்டது. |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | உ) வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் முகாமைத் தகவல் முறைமையின் ஒருமைப்பாடு மற்றும் நிறைவுத் தன்மையினை சபை மீளாய்வு செய்துள்ளமை பற்றி பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | சபையின் கணக்காய்வு குழுவினால், உள்ளக கட்டுப்பாடுகள், முகாமைத்துவ தகவல் முறைமைகள் என்பவற்றின் போதுமையும் நேர்மையும் மீளாய்வு செய்யப்பட்டன. (சபையின் கணக்காய்வு குழுவின் கூட்ட அறிக்கைகள் கவனிக்கப்பட்டன.) அத்துடன் சம்பந்தப்பட்ட சபையின் கணக்காய்வு குழுவின் பத்திரங்கள் சபைக் கூட்டங்களில் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டன. ச/ப இல. 12/4/06, ச/ப 12/9/11, ச/ப 12/09.13). |
| | ஊ) இலங்கை கணக்கீட்டு நியமங்களில் வரையறுத்த பிரகாரம், முக்கிய முகாமைத்துவ பதவியினர் அடையாளம் காணப்பட்டு பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் (i) முக்கியமான கொள்கைகள் தொடர்பாக செல்வாக்கு செலுத்துபவர்களாகவும் (ii) செயற்பாடுகள் தொடர்பாக பணிப்பாளர்களா கவும் (iii) வியாபாரச் செயற்பாடுகள், தொழிற்பாடுகள் மற்றும் முகாமை இடர் தொடர்பான கட்டுப்பாடுகளை மேற்கொள்பவர்களாகவும் இருக்கின்றனர். | இணங்குவிப்பு | | | 2011 இன் ஆண்டறிக்கைக்கு அமைவாக இகுறி 30 இனால் வரையறுக்கப்பட்ட குறித்தொதுக்கப்பட்ட முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை சபை ஏற்படுத்தியதுடன் வேறுபட்ட குழுக்கள் நியமிக்கப்பட்டு அக்குழுக்களின் நேரடி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன. வங்கி மீதான கட்டுப்பாடுகளையும் செயற்படுத்தினர். |
| | எ) பணிப்பாளர் சபையின் கொள்கையுடன் நிலையான தன்மையினைப் பேணுகின்ற பிரதான முகாமை பதவியினர்களால் வங்கி அலுவல்கள் உரிய முறையில் மேற்பார்வை செயற்படுத்தப்படுகின்றதா என்பது பற்றிய பணிப்பாளர் சபை பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | நியமிக்கப்பட்ட குழுக்களின் ஊடாக வங்கியின் அலுவல்களை சபை மேற்பார்வை செய்வதுடன், நிதி செயற்பாடுகளையும் மீளாய்வு செய்கின்றது. இது சபையின் கணக்காய்வு குழுவினால் மேற்கொள்ளப்படுவதுடன் வங்கியின் கணக்காய்வு குழு பத்திரங்களினால் சரிபார்க்கப்படுகின்றது. ச/ப 12/04/06. |
| | ஏ) பணிப்பாளர் சபை பணிப்பாளர்கள் தங்களுக்கும் மற்றும் பிரதான முகாமை பதவியர்களுக்குமான வரையறுக்கப்பட்ட விடயம் பரப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் சபையினால் வரையறை செய்யப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | நாங்கள் அவதானித்தவரை, ஒவ்வொரு பணிப்பாளருக்கும் ஆவணப்படுத்திய முக்கிய பொறுப்புகள் இருக்கவில்லை. ஆயினும் பணிப்பாளர்களுக்கு உப குழுக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே இவர்களின் தகைமைகளின் கீழ் அவர்களுக்கு முக்கிய பொறுப்புகள் இருந்தது தெளிவாகியது.<br><br>மேலும், 1975 இன் 13 ஆம் இல. அஈமுவ சட்டத்தின் 07 ஆம் பிரிவில் அஈமுவயின் பணிப்பாளர்களின் அதிகாரங்கள் வரையறுக்கப் பட்டுள்ளன. |
| | ஐ) பணிப்பாளர் சபையின் வினைத்திறன் மற்றும் பணிப்பாளர்களின் சொந்த ஆளுமைச் செயன்முறைகள் கால அடிப்படையில் பணிப்பாளர் சபை மதிப்பாய்வு செய்துள்ளமையினை பரீட்ச்சித்துள்ளதுடன் அவை கீழ் வரும் விடயங்களை உள்ளடக்குகின்றன: (i) பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைப் பதவியினர்களின் தெரிவு, பெயர் குறிப்பிடல் மற்றும் வாக்கெடுப்பு, (ii) முகாமைப் பிணக்குகள் மற்றும் ஆர்வங்கள் மற்றும் (iii) பலவீனங்கள் தொடர்பான புரிந்துணர்வு மற்றும் தேவையான இடங்களில் மாற்றங்களை அமுல்படுத்தல் | | இணங்குவிப்பு இன்மை | | பணிப்பாளர் சபையினை தெரிவு செய்தல், பெயர் குறிப்பிடல் மற்றும் வாக்களித்தல் என்பன 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் பிரகாரம் நிதி அமைச்சரினால் மேற்கொள்ளப்படும்.<br><br>எனினும், பணிப்பாளர் சபையினால் அதன் நிருவாக முறைமைகளின் செயற்பாடு 2012 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. |
| | ஒ) பிரதான முகாமை பதவியினர்கள் தொடர்பாக அமர்வு திட்டமொன்றை பணிப்பாளர் சபை கொண்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | முக்கியமான பதிவுகள் பலவற்றிற்கு பின் அமர்வாளர் திட்டத்தில் பொருத்தமான ஆளணியினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.<br><br>12/02/16 ஆம் இல. சபை பத்திரமும் 2 ஆம் இலக்க கூட்ட அறிக்கையும். |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | ஓ) கொள்கைகளின் மீளாய்வு, தொடர்பாடல் மார்க்கங்களின் உருவாக்கம் மற்றும் கூட்டாண்மை குறிக்கோள்களின் செயலாற்று கையினை கண்காணித்தல் போன்ற பணிகள் தொடர்பாக பிரதான முகாமைப் பதவியினர்களுடன் வழமையான கூட்டங்களை பணிப்பாளர் சபையானது நிறப்படுத்தியுள்ளதா என்று செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | அஈமுவ சட்டத்தின் பிரிவு 15 இன் தேவைப்பாட்டிற்கு அமைவாக, சபை குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையாவது சபை கூட்டங்களை நடத்த வேண்டும். அதற்கமைவாக 2012 ஆம் ஆண்டின் போது, 12 முறை சபை கூடியது. |
| | ஔ) ஒழுங்கு முறைப்படுத்தல் சூழலினை புரிந்து கொள்வதற்கான செயற்பாடுகள் மற்றும் செயன் முறைகளை பணிப்பாளர் சபை எடுத்துள்ளமை பற்றியும் அவ் ஒழுங்கு முறைகளுடன் வங்கி ஒரு பிணைப்பினைப் பேணுகின்றமை பற்றியும் செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | கணக்காய்வு குழுவின் பட்டயத்திற்கு அமைவாக இது தொடர்பாக வங்கிக்கு சபையின் கணக்காய்வு குழு உதவி செய்கின்றது. சபையின் கணக்காய்வு குழுவின் பத்திரங்களை மீளாய்வு செய்வதனூடாக இது நடைபெறுவதற்கான சான்றுகள் உள்ளன.<br><br>மேலும், இது தொடர்பாக வங்கியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு வங்கியில் புறம்பானதொரு இணங்குவிப்பு அதிகாரி இருக்கின்றார். |
| | ஃ) வெளியக கணக்காய்வாளர்களை சேவைக்கு அமர்த்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான செயன்முறையொன்றினை பணிப்பாளர் சபை மேற்கொண்டிருக்கின்றமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | | | ஏ/இ | 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டுச் சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த முறைமைகள் சீராக்கப்பட்டன. |
| 3(1)(ii) | பணிப்பாளர் சபையானது தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரினை நியமித்துள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது. (பி.நி.அ) | இணங்குவிப்பு | | | நிதி அமைச்சரினால் தலைவர் நியமிக்கப்படுவார். (1975 இன் 13 ஆம் இல. அஈமுவ சட்டத்தின் 14 அம் பிரிவு). |
| | இந்த வழிகாட்டல்களின் 3 (5) ஆம் பிரிவுகளுக்கு இணைவாக தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரின் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் காணப்படுகின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | பணிப்புரை 3 (5) இன் கீழ் அவதானிக்கப்பட்ட விளைவுகளை தயவு செய்து பார்க்கவும். |
| 3(1) (iii) | பணிப்பாளர் சபை அண்ணளவாக ஒரு வருடத்தின் போது மாதம் ஒரு முறை என்ற வகையில் உரிய தினங்களில் கூடி பணிப்பாளர் சபை கூட்டங்களை நடாத்தியுள்ளமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | சபை கூட்டங்களை சரிபார்த்ததுடன், 2012 இன் போது சபை 12 முறை கூட்டப்பட்டது. மேலும், பணிப்பாளர்களின் வரவு புத்தகத்தையும் கவனித்தது. |
| 3(1) (iv) | வங்கியின் இடர் முகாமை மற்றும் வியாபார மேம்பாடு தொடர்பான விடயங்கள் மற்றும் முன்மொழிவுகள் போன்ற விடயங்கள் தொடர்பில் குழுக் கூட்டங்கள் தேவைப்படுகின்ற சந்தர்பங்களில் வழமையான சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் விடயங்கள் மற்றும் முன்மொழிவுகளை உள்ளடக்குவதற்கு பணிப்பாளர்களை இயலச் செய்யும் பொருட்டு பணிப்பாளர் சபையினால் முறைமையொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | சபையின் செயலாளரின் அதிகாரத்தின் கீழ் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டதுடன். பிநிஅ/ பொமு. இனால் சரிபார்க்கப்பட்டது.<br><br>பணிப்பாளர்கள் அனைவருக்கும் வரையறை யற்ற ஆலோசனைகளும் சேவைகளும் கம்பனி செயலாளரினால் வழங்கப்படும்.<br><br>அதற்கமைய, பணிப்பாளர்களினால், வங்கியை மேம்படுத்தும் விடயங்களும் பிரேரணைகளும் கலந்துரையாடப்பட்டன. |
| 3(1) (v) | சகல பணிப்பாளர்களும் கூட்டங்களில் பங்குபற்று வதற்கான வாய்ப்பொன்றை வழங்குவதற்காக வழமையான கூட்டங்களுக்கான அறிவித்தல்கள் ஆகக் குறைந்தது 7 நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் அறிவித்தல் விடப்படு கின்றமை மற்றும் ஏனைய சகல சபைக் கூட்டங்கள் தொடர்பாக அறிவித்தல் விடப்பட்டுள்ளமை பற்றியும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல், சபையின் செயலாளரினால் ஒப்பமிடப்பட்டும் அங்கீ கரிக்கப்பட்டும் ஒவ்வொரு சபையின் பணிப்பாளருக்கும் அஞ்சலிலும் நேரடியாகவும் கூட்டம் நடைபெறுவதற்கு 7 நாட்களுக்கு முன்னர் அனுப்பப்படும். |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(1) (vi) | பணிப்பாளர்கள் ஒரு வருட காலப் பகுதியில் நடைபெற்ற கூட்ட எண்ணிக்கையில் 2/3 கூட்டங்களுக்கு அல்லது தொடர்ச்சியாக நடைபெற்ற 3 கூட்டங்களுக்கு சமுகமளிக்காமை தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை பணிப்பாளர் சபை மேற்கொண்டுள்ளதாக என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைக் கூட்டம் தொடர்பில் மாற்று பணிப்பாளர் ஒருவரின் பங்குபற்றல் எவ்வாறாயினும் குறிப்பிட்ட கூட்டத்திற்கான சமுகமளித்தமை தொடர்பான எற்புடைமையாக ஏற்றுக் கொள்ளப்படும். | இணங்குவிப்பு | | | தேவைப்பாட்டிற்கு அமைவாக பணிப்பாளர்கள் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.<br><br>"பணிப்பாளர்களின்" வரவு தாள்கள் கவனிக்கப் பட்டன. |
| 3(1) (vii) | 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை திருப்திப்படுத்தும் வகையில் கம்பனிச் செயலாளர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளமை பற்றியும் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் பங்குதாரர் கூட்டங்கள் தொடர்பில் செயலக் சேவைகளை வழங்குதல் மற்றும் நியதிச் சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் நியமிக்கப்பட்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | 1988 இன் 30 ஆம் இல. வங்கி சட்டத்தின் 43 ஆம் பிரிவிற்கும் 2007 இன் 7 ஆம் இல. கம்பனிகள் கூட்டத்திற்கும் அமைவாக, சபையின் செயலாளர் நியமிக்கப்படுகிறார். இவர் சட்டத்தரணியாக இருப்பார். திருமதி. பி.ஒ.சி.கே. அரமசிங்க இப்பதவியை வகிக்கின்றார். |
| 3(1) (viii) | கம்பனிச் செயலாளரின் சேவைகள் மற்றும் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பிரவேச இயலுமையினை சகல பணிப்பாளர்களும் பெற்றுக் கொள்வதற்கான செயன்முறை பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | பணிப்பாளர்கள் அனைவருக்கும் வரையறையற்ற ஆலோசனைகளும் சேவை-களும் கம்பனி செயலாளரினால் வழங்கப்படும். |
| 3(1) (ix) | பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் தொடர்பான கூட்ட அறிக்கைகளை கம்பனிச் செயலாளர் பேணுவதுடன் அவ்வாறான கூட்ட அறிக்கைகளை பணிப்பாளர்கள் பரீட்சிப்பதற்கான செயன் முறையொன்று உள்ளதா என்று செவ்வை பார்க்கப்பட்டுள்ளது, | இணங்குவிப்பு | | | சபைக் கூட்டங்களின் அறிக்கைகள் யாவும் தொடராக கோவைப்படுத்தப்பட்டுள்ளது அவதானிக்கப் பட்டதுடன் சபையின் செயலாளர்களின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்தன. சபை கூட்டங்கள் தொடர்பான எந்தவொரு தகவலையும் எந்தவொரு நேரத்திலும் எந்தவொரு பணிப்பாளரும் பெற்றுக் கொள்வதற்கான வசதியுண்டு. |
| 3(1) (x) | சபைக் கூட்ட அறிக்கைகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கு கின்றது அல்லது பின்வரும் விடயங்களை மேல் ஆய்வு செய்துள்ளது என செவ்வை பார்க்கப்பட்டுள்ளது:<br>அ) பணிப்பாளர் சபையானது தனது கலந்துரையாடலின் போது சுருக்கத் தரவுகள் மற்றும் தகவல்கள் பயன்படுத்தப்பட்டமை.<br>ஆ) பணிப்பாளர் சபையினால் கவனத்திற்கு எடுக்கப்பட்ட விடயங்கள்.<br>இ) உரிய கவனம் மற்றும் மதிநுட்பத்துடன் பணிப்பாளர் சபையானது தனது கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்ததா என வெளிப்படுத்தக் கூடிய விலகல்கள் அல்லது உள்ளடக்கப் பிரச்சினை அல்லது உண்மை நிலவர கலந்துரையாடல்கள் :<br>ஈ) குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஒழுகவும் பணிப்பாளர் சபையின் உபாயங்கள் மற்றும் கொள்கை களுக்கு இணைவாகவும் விடயங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.<br>உ) எவ்வகையான இடர் தொடர்பாக வங்கி முகங் கொடுக்கின்றது என்பது பற்றி புரிந்து கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள இடர் முகாமைச் செயற்பாடுகளினை மீளாய்வு செய்வதற்கும், மற்றும்<br>ஊ) தீர்மானங்கள் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள். | இணங்குவிப்பு | | | இந்த ஒழுங்குவிதிகளின் கீழ், தேவைப்பட்ட தகவல்கள், பேணப்படுகின்றன. இவை சபைக் கூட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.<br><br>வங்கியின் சபை கூட்டங்களின் வழமையான விடயங்களில் பின்வருபவை உள்ளடங்கும்.<br>(i) உறுதிப்படுத்தலுக்கான அறிக்கைள்<br>(ii) முன்னைய கூட்டங்களின் அறிக்கைகளில் உருவான விடயங்கள்<br>(iii) முன்னைய கூட்டங்களிலிருந்து வேறுபட்டவை<br>(iv) அறவீட்டு விடயங்கள்<br>(v) நிதியியல்<br>(vi) சந்தைப்படுத்தலும் வெளியீடும் விடயங்கள்<br>(vii) நிர்வாகமும் ஆளணியும்<br>(viii) கடன் விடயங்கள்<br>(ix) இடர் விடயங்கள்<br>(x) சட்ட விடயங்கள்<br>(xi) ஏதாகிலும் ஏனைய விடயங்கள் |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(1) (xi) | வங்கியின் செலவில் பொருத்தமான சூழ் நிலைகளின் போதான சுதந்திரமான தொழில்சார் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், நியாயமான வேண்டுகோளின் பிரகாரம், பணிப்பாளர்கள் இம் முறைமைகளை அடைந்து கொள்வதற்கான இயலுமையைப் பெறுவதற்கான செயன் முறையொன்றினை பணிப்பாளர் சபை அங்கிகரித்துள்ளமை பற்றி செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | | இணங்குவிப்பு இன்மை | | சுயாதீனமான தொழில்சார் ஆலோசனை-களை நாடுவதற்கு ஒத்துக் கொள்ளப்பட்ட நடைமுறைகள் /அவதானிக்கப்படவில்லை. |
| 3(1) (xii) | பிணக்குகள் தொடர்பான நிலைமைகள் அல்லது பிணக்குகள் ஏற்படுவதற்கான தோற்றப்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதுடன் தொடர்புடைய பொருத்தமான செயற்பாடுகளை எடுப்பதற்கும் தீர்ப்பதற்கும் மற்றும் அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்குமான ஒழுங்கு முறைமையனொன்று பிரயோகத்தில் உள்ளமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | இதற்கு 1975 இன் 13 ஆம் இல. அஈமுவ யின் 17 ஆம் பதிவு பின்பற்றப்பட்டது.<br><br>மேலும், வங்கியின் எந்த பணிப்பாளருக்கும் அல்லது ஊழியருக்கும், அல்லது பணிப்பாளர் ஒருவரின் அல்லது ஊழியர் ஒருவரின் துணைக்கு அல்லது தங்கியிருக்கும் பிள்ளைக்கு அல்லது பணிப்பாளர் ஒருவர் அல்லது ஊழியர் ஏதாகிலும் கம்பனி அல்லது நிறுவனத்தில் குறிப்பிடத்தக்க ஆர்வத்தை கொண்டிருப்பாரானால் வங்கியினால் கடன் வழங்க முடியாதென சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>2011 இன் ஆண்டறிக்கையின் 76 ஆம் பக்கத்தை தயவு செய்து பார்க்கவும். |
| | பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் குறிப்பிட்டதொரு விடயம் தொடர்பில் பணிப்பாளர் ஒருவர் வாக்களிப்புக்கு விடப்படுகின்ற விடயம் தொடர்பில் அவர் / அவள் அல்லது அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் அல்லது அவ் விடயம் தொடர்பான முக்கியமான ஆர்வம் இருக்கின்ற பட்சத்தில் குறிப்பிட்ட பணிப்பாளர் வாக்களிப்பிலிருந்து தவிர்ந்து கொள்ளல் மிக முக்கியமாகும். | இணங்குவிப்பு | | | கூட்ட அறிக்கைகள் எவற்றிலும் 1975 இன் 13 ஆம் இல. அஈமுவ சட்டத்தின் 17 ஆம் பிரிவின் தேவைபாட்டிற்கு அமைவாக 2012 ஆம் ஆண்டின்போது. கூட்ட அறிக்கைகளில் செய்ய வேண்டிய ஈடுபாடுள்ள விடயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.<br><br>சிஜஎ மற்றும் சபையின் செயலாளரின் எதிர்பார்ப்புக்கு அமைவாக, சபையின் பணிப்பாளர்கள் அனைவரும் சுயாதீன-மான நிறைவேற்று அதிகாரமற்றவர்களாக இருப்பதால், சபையின் ஈடுபாடுகளில் முரண்பாடுகள் எவையும் இடம்பெறவில்லை. |
| | குறிப்பிட்ட கூட்டத்தின் கூட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் குறிப்பிட்ட விடயம் தொடர்பான கூட்ட நடப்பெண் தொடர்பில் அவரின் / அவளின் பெயர் கணக்கெடுக்கப்பட்டுள்ளதா என்று செவ்வை பார்க்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | அத்தகைய ஒருவர் கோரம் இல் கணக்கெடுக்கப்படுவதில்லை. |
| 3(1) (xiii) | வங்கியின் கட்டுப்பாடு மற்றும் நெறிப்படுத்தல்களை அடையாளம் காண்பதற்கான தீர்மானங்கள் தொடர்பாக வங்கிக்கு ஒதுக்கப்பட்டுள்ள விசேடவிடயங்களின் முறைசார் நிகழ்ச்சி நிரல் மற்றும் அதற்கான அதிகாரம் தொடர்பாக வங்கி உறுதியாக இருக்கின்றமை பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | சபையால் முறைமையான பட்டியலொன்று பேணப்படுகின்றது. சபை கூட்டங்களை சரிபார்த்தது. |
| 3(1) (xiv) | வங்கி தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இயலாத சந்தர்பத்தில் அல்லது அது போன்ற நிலைமைக்கு ஆளாகியிருக்கின்ற நிலைமையில் அல்லது சொத்து இழப்புக்கள் ஏற்படுவதற்கான அண்மித்த நிலையில் இருக்கின்ற நிலைமையில் அல்லது வைப்பாளர்கள் மற்றும் வேறு கடன் காரர்களுக்கு உரிய கொடுப்பனவுகளை காலம் தாழ்த்துவதற்கு அண்மித்த நிலையில் இருக்கின்ற போது அல்லது அவ்வாறான நிலைமைகளின் போது ஏதாவது தீர்மானம் அல்லது செயற்பாட்டினை எடுப்பதற்கு முன்னர் வங்கியின் நிலைமை தொடர்பான வங்கி மேற்பார்வை பணிப்பாளர்கள் முன்னோடியாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றமை பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | | | ஏ/இ | சபையின் கூட்ட அறிக்கை அல்லது 2012 ஆம் ஆண்டிற்கான வரைவு நிதிசார் கூற்றின் மீளாய்வினூடாக அத்தகையதொரு நிலைமை சான்றுப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை நாம் அவதானித்தோம். |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(1) (xv) | நிதிச் சபை வேண்டியுள்ள பிரகாரம் பணிப்பாளர் சபையினால் வங்கி உரிய காலத்தில் மூலதனப்படுத்தி உள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | இலங்கை மத்திய வங்கிக்கு அமைவாக, தேவைப்படும் மூலதன போதுமை விகிதம் 10% வீதமாக இருந்தது. 31/12/2012 இல் அஈமுவயின் மூலதன பொதுமை (அடுக்கு 1) 26.68% மாகவும் இல் அஈமுவயின் மொத்த மூலதன விகிதம் 26.99%வும் இருந்தது.<br>.<br>2012 இன் 4வது காலாண்டிற்கான மூலதன போதுமை விகிதத்தின் கணக்கு ஆவணங்கள் இமவக்கு அனுப்பப்பட்டுள்ளதை நாங்கள் அவதானித்தோம். |
| 3(1) (xvi) | இந்த வழிகாட்டல்களின் 3 ஆம் வழிகாட்டலுக்கு இணைவாக வங்கியின் வருடாந்த அறிக்கை, வருடாந்த கூட்டாண்மை அறிக்கை போன்றவற்றை பணிப்பாளர் சபை வெளியிட்டுள்ளமை பரீட்ச்சிக்கப் பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | 2011 ஆண்டறிக்கையில் நிறுவன ஆளுமை குறித்த அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. 2012 ஆண்டறிக்கை இலும் இதே வழமை தொடரும்.<br>2012 இன் நிஆ அறிக்கையின் வரைவு இதில் தரப்பட்டுள்ளது. |
| 3(1) (xvii) | வருடாந்தம் ஒவ்வொரு பணிப்பாளர்களும் கடைப்பிடிக்க வேண்டிய சுய மதிப்பீட்டு திட்டம் ஒன்றின் பின்பற்றல் மற்றும் அவ்வாறான மதிப்பீடுகளின் தரவுகள் பராமரிக்கப்படுகின்றமை பற்றி பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | | இணங்குவிப்பு இன்மை | | 2012 ஆம் ஆண்டிற்கு. பணிப்பாளர் சபையி-னால் சுய மதிப்பீட்டு செயன்முறை மேற்கொள்ளப்படவில்லை. |
| 3(2) 3(2)(i) | பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம் பணிப்பாளர் சபையானது 7 பேரைவிடக் குறை யாததும் 13 பேரை விட விஞ்சாததுமான பணிப்பாளர்களைக் கொண்டுள்ளமை பரீட்ச்சிக்கப் பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | சபை எட்டு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இவர்களின் இருவர் இந்த ஆண்டில் நியமனம் பெற்றனர்.<br>சபையின் வரவு புத்தகம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் அனுப்பப்பட்ட பணிப்பாளர்களின் நியமன கடிதங்கள் என்பவை கவனிக்கப்பட்டன.<br>. |
| 3(2)(ii) | (அ) பி.நி.தரப் பதவியொன்றை வகிக்கின்ற பணிப்பாளர் தவிர்ந்த பணிப்பாளர் ஒருவரின் மொத்த சேவைக் காலம் 9 வருடங்களை விஞ்சுதல் கூடாது என்பது பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | பணிப்பாளர் பதவிகளில் 9 ஆண்டுகளுக்கும் அதிகமாக பணிப்பாளர்கள் சேவையாற்றவில்லை என்பதை நாங்கள் அவதானித்தோம். பணிப்பாளர்களுடைய தொடர்புடைய கோவைகள் கவணிக்கப்பட்டன. |
| | (ஆ) ஏதேனுமொரு பணிப்பாளர் 9 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிக் கொண்டிருப்பாராயின், அவ்விடயம் தொடர்பில் நிலை மாற்று ஏற்பாடுகள் பிரயோகிக்கப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கவும். | | | ஏ/இ | மேலே அவதானிக்கப்பட்டது போல, பணிப்பாளர்கள் எவரும் 9 ஆண்டுகளுக்கும் அதிகமாக பணிப்பாளர் பதவிகளில் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |
| 3(2) (iii) | சி.நி.அ. உள்ளடங்கலாக பணிப்பாளர் சபை எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பகுதியை விட சிரேட்ட நிறைவேற்றுத்தர அலுவலர்களின் எண்ணிக்கை விஞ்சலாகாது, அது பற்றி செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | பணிப்பாளர்கள் அனைவரும் நிறைவேற்று அதிகாரம் அற்றவர்கள் 1975 இன் 13 ஆம் இல. அஈமுவ 07 ஆம் பிரிவிற்கு அமைவாக நிதி அமைச்சரினால் நியமிக்கப்பட்டார்கள். |
| 3(2) (iv) | சி.நி.அ. உள்ளடங்கலாக பணிப்பாளர் சபை எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பகுதியை விட சிரேட்ட நிறைவேற்றுத்தர அலுவலர்களின் எண்ணிக்கை விஞ்சலாகாது, அது பற்றி செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | பணிப்பாளர்கள் அனைவரும் நிறைவேற்று அதிகாரம் அற்றவர்களும் நிதி அமைச்சரினால் நியமிக்கப்பட்டவர்களும் ஆவர். |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள் சுதந்திரமான அலுவலர்களாக கருதப்படுவார்களாயின், அவர் / அவள் : | | | ஏ/இ | |
| | அ) வங்கியின் 1 சதவிதத்திற்கு அதிகமான பங்கு முதலை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வைத்திருத்தல்.: | | | ஏ/இ | வங்கி அரசாங்கத்திற்கு முழுமையான உரித்துடையது ஆகையால் பணிப்பாளர்களுக்கு எவ்வித பங்குரிமையும் இல்லை. |
| | ஆ) 3 (7) ஆம் அறிவுறுத்தலில் விளக்கப்படுத்திய பிரகாரம் வங்கியின் ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில், நியமனம் பெற்றதன் பின்னர் தொடர்கின்ற இரண்டு வருட காலப் பகுதியின் போது அல்லது தற்பொழுது வங்கியின் ஒழுங்கு முறையான மூலதனத்தின் 10 சதவீத்தினை விஞ்சுகின்ற பிரகாரம், ஒரு தொகை முதலை வைத்திருத்தல். | | | ஏ/இ | 2012 இன் வரைவு கணக்குகளுக்கமைய, ஒழுங்கமைப்பு மூலதனத்தின் 10% இற்கும் அதிகமானதாக வா்த்தக கொடுக்கல் வாங்கல்கள் இருக்கவில்லை. |
| | இ) பணிப்பாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் உடனடியான இரண்டு வருட காலத்தில் வங்கியின் ஊழியராக இருந்திருத்தல். | | | ஏ/இ | நிறைவேற்றதிகாரம் அற்ற பணிப்பாளர்கள் எவரும் வங்கியில் பணியாற்றவில்லை. |
| | ஈ) பணிப்பாளாராக, பி.நி.அ, பிரதான முகாமை அங்கத்தவராக, இவ் வங்கியின் அல்லது வேறு வங்கி யொன்றின் பிரதான பங்குதாரராக நெருங்கிய தொடர்பைக் கொண்டிருத்தல். (இவ் விடயம் தொடர்பில், நெருங்கிய தொடர்ப என்பதன் பொருள், துணை அல்லாத நிதி ரீதியாக தங்கியிருக்கின்ற பிள்ளை என்று பொருள் படும்) | | | ஏ/இ | நிதி அமைச்சரினால் பணிப்பாளர்களின் நியமனங்கள் செய்யப்படுகின்றன. வங்கிச் சட்டத்தின் 42 ஆம் பிரிவிற்கு அமைவாக ஒவ்வொரு பணிப்பாளரினாலும் வழங்கப்பட்டதும் சமா்ப்பிக்கப்படவுள்ளதுமான பிரகடணங்கள் அத்தகைய விடயங்களின் அடிப்படையிலானது என்பதையும் நாங்கள் அவதானிக்கவில்லை. |
| | உ)வங்கியின் குறிப்பிட்டொரு பங்குதாரரை பிரதிநிதித்துவப்படுத்தல். | | | | |
| | ஊ) கம்பனி ஒன்றின் அல்லது வியாபார நிறுவனம் ஒன்றின் ஊழியர் அல்லது ஒரு பணிப்பாளர் அல்லது முக்கியமான பங்குதாரராக இருத்தல்: | | | ஏ/இ | வங்கி அரசாங்கத்திற்கு முழுமையாக சொந்தமானதாகையால் பங்குரிமையாளர்கள் இல்லை. |
| | I. வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனத்தின் 10 சதவீதத்தை விஞ்சுகின்ற அளவானதும், 3 (7) ஆம் அறிவுறுத்தலில் வரையறுத்த பிரகாரம் வங்கியுடன் ஒரு கொடுக்கல் வாங்கில் ஈடுபட்டிருத்தல். அல்லது | | | ஏ/இ | 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை சரிபார்க்கப்பட்டது. வங்கியின் ஒழுங்கமைப்பு மூலதனமான 10% யை விஞ்சும் வா்த்தக கொடுக்கல் எவையும் இருக்கவில்லை. என்பதுடன் தரப்பட்ட விளக்கங்களுக்கு அமைவாக அத்தகைய கொடுக்கல் வாங்கல் எவையும் இருக்கவில்லை. |
| | II. வங்கியின் ஏனைய பணிப்பாளர்களுக்கு மத்தியில் எவரேனும் ஒருவர் அதன் ஊழியராக இருத்தல் அல்லது அங்கு பங்குதாரராக நியமனம் பெறல், அல்லது | | | ஏ/இ | இது விடயமாக எவ்வித நிகழ்வுகளும் அவதானிக்கப்படவில்லை. |
| | III. இங்கு உள்ள அறிவுறுத்தல்களில் 3 (7) அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம், வங்கியுடன் அதன் செயற்பாட்டு மூலதனத்தின் 10 சதவீதத்தை விஞ்சும் வகையிலான கொடுக்கல் வாங்கல் ஒன்றை வங்கியின் வேறு யாரேனும் ஒருவர் பணிப்பாளர் ஊடாக நடாத்துதல். | | | ஏ/இ | |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(2) (v) | சுதந்திரமான பணிப்பாளர் ஒருவரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மாற்று பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருக்கின்ற நிலையில், சுதந்திரமான பணிப்பாளர் ஒருவர் தொடர்பாக பிரயோகிக்கத் தக்க பிறமாணங்களை அடையும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளதா என்று பரீட்ச்சிக்கப்பட்டது. | | | ஏ/இ | சபையின் செயலாளரின் விளக்கத்திற்கு அமைவாக, ஆண்டின்போது மாற்று பணிப்பாளர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. |
| 3(2) (vi) | வங்கி சுதந்திரமான பணிப்பாளர்களை நியமித்தல் தொடர்பாக ஒரு முறைமையினைக் கொண்டிருக்கின்றதா என்று பரீட்ச்சித்துப் பார்த்தல். | இணங்குவிப்பு | | | 1975 இன் 13 ஆம் இல. (07 ஆம் பிரிவு) அஈமுவ சட்டதின்கீழ் நிதி அமைச்சரினால் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். |
| 3(2) (vii) | வங்கியின் கூட்ட நடப்பெண் 50 % விட அதிகமான பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றதா என்றும் அவ் நடப்பெண்ணில் 50 % லும் அதிகமான நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் பரீட்ச்சிக்கப் பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | அஈமுவ சட்டத்திற்கு (16 ஆம் பிரிவு) அமைவாக 3 அங்கத்தினர்கள் சபையின் கோரமாக இருப்பார்கள். பணிப்பாளர்கள் அனைவரும் நிறைவேற்று அதிகாரம் அற்றவர்கள் பணிப்பாளர்களின் 50% இற்கு அதிகமானோரை சபையின் கேரம் கொண்டுள்ளது. |
| 3(2) (viii) | வருடாந்த கூட்டாண்மை ஆட்சி அறிக்கையில் தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களின் பெயர்கள் உள்ளடங்கலாக பணிப்பாளர்கள் வகையடிப்படையில் பணிப்பாளர் சபையின் உள்ளடக்கத்தை வங்கி வெளிப்படுத்துகின்றதா என்று பரிட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை சரிபார்க்கப்பட்டதுடன், நி.ஆ. அறிக்கையில் சபையின் தொகுப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>2011 ஆம் ஆண்டறிக்கையின் 26, 27ஆம் பக்கங்களில் உள்ளது நி.ஆ. அறிக்கை. |
| 3(2) (ix) | பணிப்பாளர் சபைக்கான புதிய பணிப்பாளர்களை நியமனம் செய்கின்ற ஒழுங்கு விதிகள் செவ்வைபார்க்கப்பட்டுள்ளன. | இணங்குவிப்பு | | | அஈமுவ சட்டத்தின் (07 ஆம் பிரிவு) கீழ், நிதி அமைச்சரினால், பணிப்பாளர்களின் நியமனங்கள் செய்யப்படுகின்றன. |
| 3(2) (x) | பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டதன் பின்னரான முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் நியமிக்கப்படுவர் என்ற நிபந்தனையின் பிரகாரம் சகல பணிப்பாளர்களும் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனரா என்று பரீட்சிக்கப்பட்டது | இணங்குவிப்பு | | | சட்டத்திற்கு இணக்கமாக நிதி அமைச்சரினால் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஆண்டின்போது, புதிய பணிப்பாளர்களாக இரண்டு பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். (திரு. எஸ்.எல்.ஜி. பந்துசிறி & திரு. பி. எச் எல் டப் பெரேரா.) |
| 3(2) (xi) | பணிப்பாளர்கள் தங்களது அலுவலகம் அல்லது சபையிலிருந்து பதவி விலகியுள்ளனரா அல்லது நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா என்று பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது:<br><br>அ) வங்கியுடனான பணிப்பாளர்களின் உடன்பாடின்மை போன்றவற்றுடன் தொடர்புடைய தவல்கள் தொடர்பாக வரையறுக்கப்படாது, பணிப்பாளர்களின் பதவி விலகல் அல்லது நீக்கம் மற்றும் அவ்வாறான பதவி விலகல் அல்லது நீக்கத்திற்கான காரணங்கள் உள்ளடங்கலாக அவ் விடயங்கள் அறிவிக்கப்படல். மற்றும்,<br><br>ஆ) பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டிய ஏதேனும் விடயங்கள் இருப்பின் அல்லது இல்லாது இருப்பினும், அது தொடர்பில் உறுதிப்படுத்திக் கூற்றொன்றை வெளியிடல். | இணங்குவிப்பு | | ஏ/இ | பணிப்பாளர்களை நீக்குவதும் நிதி அமைச்சினால் செய்யப்படுகின்றது.<br><br>ஆண்டின் போது (திருமதி. கே. டி. எல். கண்டனாராய்ச்சி, திரு. எஸ். எம். ஜி. ஜயரத்ன ஆகியோர் பதவி விலகினர். 09/03/2012) பதவி விலகல் கடிதங்கள் சரிபார்க்கப்பட்டது.<br><br>கூட்டறிக்கை இல 2.<br>இது குறித்த கூற்றுகள் வெளியிடப்படவில்லை. |
| 3(2) (xii) | வங்கி ஒன்றின் ஊழியர் அல்லது பணிப்பாளர் இன்னொரு வங்கியின் பணிப்பாளர் ஒருவராக பெயர் குறிப்பிடப் பட்டிருக்கின்றமை அல்லது தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமை அல்லது நியமனம் செய்யப்பட்டிருக்கின்றமை தொடர்பாக அடையாளம் கண்டு கொள்வதற்கான செயன் முறையொன்று இருக்கின்றதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | மற்றொரு வங்கியின் பணிப்பாளர் அல்லது ஊழியர், வங்கியினால், தெரிவு செய்யப்பட அல்லது நியமிக்கப்படவில்லை.<br><br>வங்கிச் சட்டத்தின் 42 ஆம் பிரிவிற்கு அமைவாக, ஒவ்வொரு பணிப்பாளர்களினாலும் பிரகடனங்கள் வழங்கப்பட்டுள்ளதை நாங்கள் அவதானித்தோம். |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(3) | பணிப்பாளர்களின் உரிமைத்துவம் மற்றும் வலிமையினை மதிப்பிடுவதற்கான பிரமாணங்கள் | இணங்குவிப்பு | | | |
| 3(3)(i) | பணிப்பாளராகச் சேவையாற்றுகின்ற ஒரு நபரின் வயது 70 வயதை விடத் தாண்டக் கூடாது என்பது பரீட்சிக்கப்பட்டுள்ளது. | | | | பணிப்பாளர்களுடன் ஒத்துள்ள கோவைகள் சரிபார்க்கப்பட்டதுடன், எந்தவொரு பணிப்பாளரும் 70 வயதை விஞ்சியவர்களாக இருக்கவில்லை. |
| | (அ) இத்துடன் நிலை மாற்று ஏற்பாடுகள் இணக்கம் காணப்பட்டுள்ளமை பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | | | ஏ/இ | மேலேயுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில் அத்தகைய பணிப்பாளர்கள் இல்லை. |
| 3(3)(ii) | வங்கியின் துணைக் கம்பனிகள் அல்லது இணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 மேற்பட்ட கம்பனிகள் / தொழில் தாபனங்கள் / நிறுவனங்களில் பணிப்பாளராக ஒரு நபர் பதவி வகித்துக் கொண்டிருப்பாராயின் அது தொடர்பாக பரீடச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | வங்கிச் சட்டத்தின் 42 ஆம் பிரிவிற்கு அமைவாக, பணிப்பாளர்களுடன் ஒத்துள்ள கோவைகளும், சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடணங்களும் சரிபார்க்கப்பட்டன. அதற்கமைய, 20 இற்கு மேற்பட்ட நிறுவனங்களில் பணிப்பாளர் பதவி வகிக்கும் பணிப்பாளர்கள் எவரும் இருக்கவில்லை. |
| 3(4)<br>3(4)(i) | சபையினால் வழங்கப்பட்டுள்ள முகாமைத்துவ தொழிற்பாடுகள்<br>பணிப்பாளர் சபையினால் அதிகாரக் கையளிப்பு ஏற்பாடுகள் அங்கிகரிக்கப்பட்டுள்ளமை பற்றி பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | அஈமுவ சட்டத்தின் 20, 21 ஆம் பிரிவுகளுக்கு அமைவாக பொது முகாமையாளரிடம், வர்த்தகத்தை முகாமைத்துவம் செய்வதற்கு சபையினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதனைவிட சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்களும் ஏற்றவாறு அதிகாரத்தை வழங்குகின்றன. |
| 3(4)(ii) | 3 (1) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக நிகழ்வுகளின் போதும் கூட அவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பாக சபை பொறுப்பெடுத்துள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | கூட்ட அறிக்கைகளை மீளாய்வு செய்தபோது, பொறுப்பான முறையில் விடயங்களை சபை கலந்துரையாடியுள்ளது. ஆகையினால் சபையின் உப குழுக்கள் அனைத்தும் இறுதியாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கைகளை செய்யும். |
| 3(4)<br>(iii) | வங்கியின் தேவைகளுடன் தொடர்புடையதாக அவை இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கால அடிப்படையில் அதிகாரக் கையளிப்பு செயன் முறைகள் காணப்படுகின்றமையினை சபை மீளாய்வு செய்திருக்கின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | கால அடிப்படையில் அதிகார ஒப்படைப்பு நடைமுறைகளை சபை மீளாய்வு செய்தது. இது தொடர்பான உள்ளக கடிதங்களையும் சுற்றறிக்கைகளையும் சரிபார்த்தது. ச/ப 12/09/16. |
| 3(5)<br>3(5)(i) | தலைவர் மற்றும் பி.நி.அ<br>தலைவர் மற்றும் பி.நி.அ ஆகிய இருவர்களினதும் பாத்திரங்கள் வேறுபட்டவை, ஆகவே, அவர்கள் இருவரும் செய்கின்ற வேலைகளை ஒன்றாக ஒப்பீடு செய்ய முடியாது என்பது பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | தலைவரினதும், பிநிஅஇனதும் பங்கேற்புகள் வெவ்வேறானவை என்பதுடன், ஒரே நபரினால் செயன் முறைப்படுத்தப்படுவதுமில்லை. தலைவர் திரு. ஜகத் வெல்லவத்த பிநிஅ/ பொமு திரு. எம்.எம். தயாசிங்க. |
| 3(5)(ii) | தலைவர் ஒரு நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் என்பது பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராவார். 1975 இன் அஈமுவ சட்டத்தின் 13 ஆம் இல. இன் கீழ் நிதி அமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்றார். |
| | தலைவர் சுதந்திரமான பணிப்பாளராக இல்லாத சந்தர்பத்தில், பொருத்தமான எழுத்து மூலமான ஆவணங்களுடன் ஒரு சிரேட்ட பணிப்பாளராக ஒரு சுதந்திரமான பணிப்பாளரை நியமித்துள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. | | | ஏ/இ | ஏற்புடமை இன்மை |
| | வங்கியின் வருடாந்த அறிக்கையில் சிரேட்ட பணிப்பாளர் ஒருவரின் பதவி வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்ற விடயம் பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | | | ஏ/இ | ஏற்புடமை இன்மை |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(5) (iii) | அவ்வாறு ஏதும் தலைவர் மற்றும் பி.நி.அ மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு மத்தியில் ஏதேனும் உறவு முறைத் தன்மையின் உள்ளடங்கலாக இருப்பின், வருடாந்த அறிக்கையின் ஒரு பகுதியாக, ஒரு தொடர்பாக (நிதி, வியாபாரம். குடும்பம் அல்லது ஏனைய விடயங்கள்/ தொடர்புடைய உறவு முறைகள்) இருக்கக் கூடிய வங்கியின் கூட்டாண்மை அறிக்கையினை அடையாப்படுத்துவதற்கும் வெளிப்படுத்துவதற்குமான செயற்பாட்டினை சபை கொண்டுள்ளது என்பது பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | இமவயின் தேவைப்பாடுகளுக்கு அமை-வாக, பணிப்பாளர்களினால் செய்யப்பட்ட சுய பிரகடனங்களில் இது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக சுய பிரகடனங்களும் ஆண்டறிக்கை 2011 இல் வெளிப்படுத்தப்பட்டவையும் சரிபார்க்கப்பட்டன. |
| 3(5) (iv) | தலைவர் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் போது சபை சுய மதிப்பீட்டு செயன்முறையொன்றைக் கொண்டுள்ளதா என்று பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. :<br><br>அ) சபைக்கு தலைமைத்துவம் வழங்கல்<br>ஆ) சபையானது வினைத்திறனாக தனது பணிகளையும் பொறுப்புக்களையும் உரிய முறையில் மேற்கொள்கின்றது மற்றும்<br>இ) கால அடிப்படையில் சபையினால் சகல பிரதான மற்றும் பொருத்தமான பிரச்சினைகள் உரிய முறையில் கலந்துரையாடப்பட்டுள்ளமை பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | | இணங்குவிப்பு இன்மை | | ஆண்டின் போது, சபையினால் மீளாய்வு செய்யப்பட வேண்டிய சுய மதிப்பீடுகள் எவையும் இருக்கவில்லை. |
| 3(5) (v) | தலைவரினால் அங்கிகரிக்கப்பட்ட கம்பனி செயலாளரினால் முறைசார் நிகழ்ச்சி நிரல் கணக்கிடப்பட்டுள்ளமை பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | | இணங்குவிப்பு இன்மை | | பணிப்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் சுற்றுக்கு விட வேண்டிய நிகழ்ச்சி நிரல், சபையின் செயலாளரினால் தயாரிக்கப்படுகின்றது. ஆயினும் தலைவரின் அங்கீகாரம் அளிக்கப்படாதமையை நாங்கள் அவதானித்தோம். |
| 3(5) (vi) | பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் எழுகின்ற விடயங்கள் பற்றி பணிப்பாளர்கள் சகலருக்கும் உரிய முறையில் அறிவிக்கப்படுகின்ற பிரகாரம் அறிவிக்கப்படுவதாக தலைவருக்கு உறுதிப்படுத்தப்படுகின்றமை நிகழ்கின்றதா என்று பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | சபையின் கூட்ட அறிக்கையையும். சபை பத்திரங்களையும் சரிபார்த்தோம். சபை கூட்டங்களில் எழுப்பப்படும் விடயங்கள் பணிப்பாளர்களுக்கு ஏற்றவாறு விபரமாக அளிக்கப்பட்டன. |
| 3(5) (vii) | சகல பணிப்பாளர்களும் முழுமையானதும் வினைத்திறனானதுமான பணிப்பாளர் சபைச் செயற்பாடுகள் தொடர்பாக ஊக்கப்படுத்துகின்ற பணிப்பாளர் சபையில் சுயமான கணிப்பீட்டு முறைமை ஒன்று உள்ளதா என்றும் வங்கியின் நலன் கருதி தலைவரின் தலைமைத்துவத்துடன் செயற்படுகின்றதா என்றும் பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | | இணங்குவிப்பு இன்மை | | இது தொடர்பாக சரியான நடைமுறைகள் கவனிக்கப்படவில்லை. |
| 3(5) (viii) | நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களின் பங்களிப்பினை அடைந்து கொள்வதற்கான செயன் முறை தொர்பான சுய மதிப்பீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | | இணங்குவிப்பு இன்மை | | இது தொடர்பாக சரியான நடைமுறைகள் கவனிக்கப்படவில்லை. |
| 3(5) (ix) | பிரதான முகாமைப் பதவியினரால் அல்லது ஏனைய நிறைவேற்று கடமைகளின் நேரடியான மேற்பார்வை செயற்பாடுகளில் தலைவர் ஈடுபடுகின்றார் என்பது பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் மேற்பார்வையில் நேரடியாக ஈடுபடும் நடவடிக்கைகள் அல்லது வேறு ஏதாகிலும் நிறைவேற்று கடமைகளில் தலைவர் ஈடுபடமாட்டார். |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(5) (x) | பங்குதாரர்களுடன் வினைத்திறனான தொடர்பாடலை பராமரிப்பதற்கான செயன் முறையொன்று இருக்கின்றமையினையும் அந்தக் கண்ணோட்டத்தில் சபையுடன் பங்குதாரர்கள் தொடர்பாடல் செய்கின்றமையும் பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | நாங்கள் அவதானித்தவாறு, ஒவ்வொரு சபைக் கூட்டங்களுக்கும் பங்குரிமையார்களின் பிரதிநிதி வருகை தருவர். (அரசாங்க பிரதிநிதி திரு. வி. எம். அமீன்) சபை அறிக்கைகளில் உள்ள வருகைகளையும் நாங்கள் அவதானித்தோம். |
| 3(5) (xi) | வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் வியாபாரம் தொடர்பான நாளாந்த முகாமைக்குப் பொறுப்பான பிரதான நிறைவேற்றுனராக பி.நி.அ தொழிற்படுகின்றமை பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | வங்கியின் செயற்பாடுகளில், சபை கூட்டங்கள் மற்றும் உப குழுக்கள் ஊடாக சுறுசுறுப்பாக பங்கேற்கின்றது. |
| 3(6) 3(6)(i) | சபை நியமனம் செய்த குழுக்கள் வழிகாட்டல்களின் 3(6)(ii)இ 3(6)(iii), 3(6)(iv), 3(6)(v) ஆம் பிரிவுளுக்கு ஏற்ப ஆகக் குறைந்தது நான்கு சபைக் குழுக்களை வங்கி தாபித்துள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | சபையின் உப குழுக்கள்<br>கணக்காய்வு குழு<br>மனித மூலவளங்கள். ஊதியங்கள் மற்றும் நியமன குழுக்கள்<br>சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு<br>கடன் குழு<br>முகாமைத்துவக் குழு<br>சொத்துகள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவ குழு |
| | பணிப்பாளர் சபையிற்கு ஒவ்வொரு சபைக் குழு அறிக்கைகளும் விளக்கப்படுத்தப்பட்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது | இணங்குவிப்பு | | | சபையின் உப குழு ஒவ்வொன்றினதும் அறிக்கை சபைக்கு நேரடியாக அளிக்கப்பட்டது. அத்தகைய சபை குழுக்களின் அறிக்கைகள் அவதானிக்கப்பட்டன. |
| | ஒவ்வொரு குழுவும் தத்தமது கடமைகள், பாத்திரங்கள் மற்றும் செயலாற்றுகை தொடர்பான அறிக்கையினை தமது வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்துகின்றமை பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | 2011 ஆம் ஆண்டின் அண்டறிக்கை சரிபார்க்கப்பட்டது. இது தொகுக்கப்பட்டுள்ளது. |
| 3(6)(ii) | கணக்காய்வுக் குழு :<br><br>அ) குழுவின் செயலாளர் நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளராக இருப்பதுடன் தகைமைக்ள மற்றும் தொடர்பான அனுபவங்களைக் கொண்டிருக்கின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | தலைவர், சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்<br><br>சபையின் கணக்காய்வு குழு தலைவருக்கு, அவசியமான தகுதிகளும் அனுபவங்களும் உள்ளது.<br>(இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் துணை அங்கத்தினராக இருப்பதுடன் நிதி மற்றும் முகாமைத்துவத்தில் 25 ஆண்டுகளுக்கு அதிகமான அனுபவமும் உள்ளவர்) |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | ஆ) குழுவின் சகல அங்கத்தவர்களும் நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள் என்று பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்குவிப்பு | | | சபையின் கணக்காய்வு குழுவில் நிறைவேற்று அதிகாரமற்ற 5 பணிப்பாளர்கள் உள்ளனர் ச/ப 12/08/28 கூட்ட அறிக்கை 8 ஆம் இல. புதிய நியமனங்கள். |
| | இ) குழுவின் சகல அங்கத்தவர்களும் நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள் என்று பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | | | | |
| | i. உரிய நியதிச் சட்டங்களுக்கு இணங்க வழங்கப்படும் சேவைகள் தொடர்பான வெளியக கணக்காய்வாளரின் நியமனம் : | | | ஏ/இ | நிதி அமைச்சரினாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினாலும், வெளியக கணக்காய்வாளர் நியமிக்கப்படுகின்றனர் |
| | ii. காலத்துக்குக் காலம் மத்திய வங்கியால் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் அமுலாக்கம்: | | | ஏ/இ | வெளியக கணக்காய்வாளர்கள் நிதி அமைச்சரினால் நியமிக்கப்படுவதால் அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான அதிகாரம் கணக்காய்வு குழுவிற்கு இல்லை. |
| | iii. உரிய கணக்கீட்டு நியமங்களின் பிரயோகம் மற்றும் | | | ஏ/இ | குழுவின் சார்பாக, பிரதான உள்ளக கணக்காய்வாளரும், நிதிப் பிரிவின் தலைவரும் இது விடயமாக பொறுப்புடையவர்களாக இருப்பார்கள். |
| | iv. சேவைக் காலம், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் ஏதும் பதவி விலகல்கள் அல்லது கணக்காய்வாளரின் பதவி நீக்கம்: கணக்காய்வாளரனி பதவிக் காலம் 5 வருடங்களை விட விஞ்சக் கூடாது, மற்றும் முன்னைய காலப்பகுதி நிறைவிலிருந்தான திகதியிலிருந்தான மூன்று வருட காலா வாதிக்கு முன்னர் கணக்காய்விற்காக குறிப்பிட்ட கணக்காய்வாளரை மீள ஈடுபடுத்தக் கூடாது. | | | ஏ/இ | அஈமுவயின் சட்டத்திற்கு அமைவாக நிதி அமைச்சரினால் வெளியக கணக்காய்வாளர் நியமிக்கப்படுவார்கள். அத்தகைய ஏற்பாடு களுக்கு அமைவாக, கணக்காய்வாளர் தலைமையதிபதி வெளியக கணக்காய்வாளராக இருக்கின்றார். |
| | ஈ) வங்கியின் சுயாதீனத்தின் நிமித்தம் வெளியக கணக்காய்வாளரிடமிருந்து குழு சுட்டிக்காட்டுதல்களைப் பெற்றுள்ளமையும், கணக்காய்வானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பவே மேற்கொள்ளப்படுவதும் பரீட்சிக்கப்பட்டது. | | | ஏ/இ | அஈமுவயின் சட்டத்திற்கு அமைவாக நிதி அமைச்சரினால் வெளியக கணக்காய்வாளர் நியமிக்கப்படுவார். அத்தகைய ஏற்பாடுகளுக்கு அமைவாக, கணக்காய்வாளர் தலைமையதிபதி வெளியக கணக்காய்வாளராக இருக்கின்றார். |
| | உ) சம்பந்தப்பட்ட விதிமுறைகளின் பிரகாரம் வெளியக கணக்காய்வாளர் ஒருவர், கணக்காய்வு சாராத சேவைகளை வழங்குவதுடன் தொடர்புடைய கொள்கையொன்றை குழு அமுல்படுத்தியுள்ளமை பரீட்சிக்கப்பட்டது. | | | ஏ/இ | அஈமுவயின் சட்டத்திற்கு அமைவாக நிதி அமைச்சரினால் வெளியக கணக்காய்வாளர் நியமிக்கப்படுவார்கள். அத்தகைய ஏற்பாடுகளுக்கு அமைவாக, கணக்காய்வாளர் தலைமையதிபதி வெளியக கணக்காய்வாளராக இருக்கின்றார். |
| | ஊ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப, கணக்காய்வுக்கு முன்னர் குழுவானது கணக்காய்வின் தன்மை மற்றும் விடய எல்லைகள் தொடர்பில் வெளியக கணக்காய்வாளருடன் கலந்தாராய்ந்து அவற்றை உறுதி செய்துள்ளமை பரீட்சிக்கப்பட்டது. | | | ஏ/இ | அஈமுவயின் சட்டத்திற்கு அமைவாக நிதி அமைச்சரினால் வெளியக கணக்காய்வாளர் நியமிக்கப்படுவார்கள். அத்தகைய ஏற்பாடுகளுக்கு அமைவாக, கணக்காய்வாளர் தலைமையதிபதி வெளியக கணக்காய்வாளராக இருக்கின்றார். |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | ஈ) வங்கியின் நிதிசார் கூற்றுக்களின் நம்பகத்தன்மை, அதன் வருடாந்த அறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் போன்றவற்றை கண்காணிக்கும் நோக்கில் வங்கியின் நிதிசார்ந்த விவரங்களை மீளாய்வு செய்வதற்கானதொரு செயன்முறையும் மற்றும் பின்வருவனவற்றை சீ.எப்.ஓ. விடமிருந்து பெறுமிடத்து அதற்கான செயன்முறை ஒன்றையும் குழு கொண்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டது.<br>i. தீர்மானம்சார் பிரதான பகுதிகள்<br>ii. கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளிலுள்ள ஏதேனும் மாற்றங்கள்<br>iii. கருதப்படுகின்ற ஊகம், மற்றும்<br>iv. சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்ட தேவைப்பாடுகள் என்பவற்றுடனான இணக்கப்பாடு, மற்றும்<br>v. வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்விலிருந்து எழுகின்ற குறிப்பிடத்தக்க சீராக்கல்கள். | இணங்குவிப்பு | | | வங்கி கணக்காய்வு குழு ஊடாக நிதியியல் தகவலை மீளாய்வு செய்துள்ளது..<br>சபையின் கணக்காய்வு குழு பத்திரங்கள் சரிபார்க்கப்பட்டன.<br>1. சகசு–22/08/2012<br>2. சகசு–13/02/2012<br>3. சகசு-02/02/2012<br>4. சகசு-27/11/2012 |
| | உ) கணக்காய்வின் போது எழுகின்ற ஏதேனும் பிரச்சினைகள் தொடர்பில் நிறைவேற்று முகாமைத்துவத்தின் உதவி கிடைக்காதவிடத்து, அதற்காக வெளியக கணக்காய்வாளர்களை குழு சந்தித்துள்ளமை பரீட்சிக்கப்பட்டது | | | ஏ/இ | தரப்பட்ட விளக்கங்களுக்கு அமைவாக ஆண்டின்போது, அத்தகைய விடயங்கள் எவையும் இல்லாததினால், வெளியக கணக்காய்வாளரை சபையின் கணக்காய்வு குழு சந்திக்கவில்லை. |
| | ஊ) வெளியக கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதம் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் பதிலளிப்புகள் போன்றவற்றை குழு மீளாய்வு செய்துள்ளமை பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | கணக்காய்வு தொடர்பான விடயங்களையும், வியாபாரங்களையும் சபையின் கணக்காய்வு குழு கலந்துரையாடியது. சகசு - 20/08/2012 |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | எ) வங்கியின் உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடுகள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகளை குழு மேற்கொள்ள வேண்டுமென பரீட்சிக்கப்பட்டது: | | | | |
| | I. உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் விடய எல்லை, தொழிற்பாடு மற்றும் வளங்கள் என்பவற்றில் அதன் நிறைவுத் தன்மை தொடர்பில் ஆராய்ந்து, திணைக்களமானது தனது பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான அதிகாரங்களை அது கொண்டமைவதற்கு வழிவகுத்தல். | இணங்குவிப்பு | | | இது தொடர்பாக, குறிப்புகளுக்கான விதிமுறைகள் அல்லது உள்ளக கணக்காய்வு பட்டயம் என்பவை சரிபார்க்கப்பட்டன. ச/ப 12/04/06 |
| | II. உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு செயன்முறைகளின் விளைவுகளை மீளாய்வு செய்தல், மற்றும் தேவையானவிடத்து, உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் பரிந்துரைகளின் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல். | இணங்குவிப்பு | | | சகசு 13/02/2012 இனால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தை நாங்கள் கவனித்ததுடன், உள்ளக கணக்காய்வு செயன்முறைகளின் பெறுபேறுகளும் கலந்துரையாடப்பட்டன. |
| | III. உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை தொடர்பில் ஏதேனும் கணிப்பீட்டை அல்லது மதிப்பீட்டை பரிசீலனை செய்தல் | | இணங்குவிப்பு இன்மை | | சபையின் கணக்காய்வு குழுவினால் அது மேற்கொள்ளப்படவில்லை. |
| | IV. உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடு களுக்குத் தேவையான ஏதேனும் நியமனம் தொடர்பில் அல்லது அதன் தலைவர், சிரேஷ்ட உத்தியோகத்தர் மற்றும் வெளியக சேவை வழங்குனர்கள் போன்றோரின் சேவை நிறுத்தம் தொடர்பில் பரிந்துரைகளை மேற்கொள்ளல் | | | ஏ/இ | 2012 ஆம் ஆண்டின்போது அத்தகைய நிலைமைகள் எவற்றையும் நாங்கள் அவதானிக்கவில்லை. |
| | V. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஏனைய வெளியக சேவை வழங்குனர்கள் உள்ளடங்கலாக திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் இராஜினாம தொடர்பிலும் மற்றும் இராஜினாமச் செய்கின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், வெளியக சேவை வழங்குனர்கள் ஆகியோர் தமது பதவியை இராஜினாமா செய்வதற்கான காரணத்தைச் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவது தொடர்பிலும் குழு மதிப்பிடப்பட்டமை பரீட்சிக்கப்பட்டது | | | ஏ/இ | |
| | VI. உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடானது சுயாதீனமான செயற்பாடு என்பது பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட டிஓஆர் (TOR) இற்கு அமைவாக, உள்ளக கணக்காய்வு நடிவடிக்கைகள் சுதந்திரமானதாக இருந்ததுடன், உள்ளக கணக்காய்வு பட்டயத்தின் 02 ஆம் பக்கத்தின் பிரிவு 03 உம் கவனிக்கப்பட்டது. |
| | ஏ) உள்ளக விசாரணைகள் தொடர்பிலான பிரதான பண்புகள் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் பதிலளிப்புகள் போன்ற வற்றை குழு பரிசீலித்துள்ளதா என்பதை அறியும் நோக்கில் கூட்ட அறிக்கைகள் பரீட்சிக்கப்பட்டன. | இணங்குவிப்பு | | | சபையின் கணக்காய்வு குழு பத்திரங்கள் சரிபார்க்கப்பட்டன.<br>1. சகசு–22/08/2012<br>2. சகசு–13/02/2012<br>3. சகசு-02/02/2012<br>4. சகசு-27/11/2012 |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | ஐ) குழுவானது நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் சமூகமளிப்பு இன்றிய குறைந்தது இரண்டு கூட்டங்களையாவது வெளியக கணக்காய்வாளர்களுடன் மேற்கொண்டுள்ளதா என்பது பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | திரு. பி.டப்.டி. லசந்த - கணக்காய்வு அத்தியட்சகர், 3 வது மற்றும் 4 வது கணக்காய்வு குழு கூட்டங்களில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சார்பாக வருகை தந்தார் |
| | ஒ) பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்தும் நோக்கில் குழுவின் ஆய்வெல்லை பரீட்சிக்கப்பட்டது,<br><br>i) அதன் ஆய்வெல்லையினுள் எந்தவொரு விடயத்தையும் விசாரிப்பதற்கான வெளிப்படையான அதிகாரம்<br>ii) அதற்குத்தேவையான வளங்கள்<br>iii) தகவல்களைப் பெறுவதற்கு முழு அளவிலான அணுகல்கள் மற்றும்<br>iv) வெளியக தொழில்சார் ஆலோசனையைப் பெறுவதற்கான தத்துவம் மற்றும் தேவையேற்படின், பொருத்தமான அனுபவம் கொண்டோரை வெளியிலிருந்து அழைப்பதற்கான தத்துவம். | இணங்குவிப்பு | | | கணக்காய்வு குழுவிற்கான விதிகள் சரிபார்க்கப்பட்டன. |
| | ஓ) குழுவானது 4 தடவைகள் கூட்டங்களை நடாத்தியிருப்பதும் மற்றும் கூட்ட அறிக்கைகள் பேணப்பட்டிருப்பதும் பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | 2012 காலப்பகுதியில் குழு 4 முறைகள் கூடியது.<br><br>கணக்காய்வு குழுவின் வருகை பதிவேடும், கூட்ட அறிக்கைகளும் சரிபார்க்கப்பட்டன. |
| | ஔ) வருடாந்த அறிக்கையில் சபையானது வெளியிட்டுக் காட்டியுள்ளமை பரீட்சிக்கப்பட்டது,<br><br>i) கணக்காய்வுக் குழுவின் செயற்பாட்டு விபரங்கள்<br>ii) இவ்வாண்டில் இடம்பெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும்<br>iii) அத்தகைய கூட்டங்களில் பங்குபற்றிய ஒவ்வொரு பணிப்பாளரினதும் சமூகமளிப்பு பற்றிய விபரங்கள். | இணங்குவிப்பு | | | 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை இணங்குவிப்பிற்காக சரிபார்க்கப்பட்டது. |
| | ஃ) குழுவின் செயலாளரானவர், நிறுவனத்தின் செயலாளர் அல்லது உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாட்டுத் தலைவர் என்பது பரீட்சிக்கப் பட்டது. | இணங்குவிப்பு | | | திரு. கே.எல்.என.ஏ. பெரேரா - தலைமை உள்ளக கணக்காய்வாளர், சபையின் கணக்காய்வு குழு செயலாளராக இருக்கின்றார். |
| | க) பின்வரும் விடயங்களுடன் கையாள்வது தொடர்பிலான செயன்முறையினை "ஊழலை வெளிப்படுத்தல்" கொள்கையானது உள்ளடக்கு வது பரீட்சிக்கப்பட்டது.<br><br>i) நிதிசார் அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடு அல்லது ஏனைய விடயங்களிலுள்ள முறையற்ற நிலைமைகள்.<br><br>ii) 1.மேலே (i) தொடர்பிலான அத்தகைய விடயங்களில், நியாயமான, சுயாதீன முடைய விசாரணைக்கான பொருத்தமான ஏற்பாடுகள் இடம்பெறுவதை குழு உறுதிப்படுத்த வேண்டும், மற்றும்<br><br>iii) 2.பொருத்தமான பின்தொடர் நடவடிக்கை. | | இணங்குவிப்பு இன்மை | | வெளிப்படுத்தும் (Whistle Blower) கொள்கை இருக்கவில்லை. |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(6) (iii) | பின்வரும் விதிமுறைகள் மனித வளங்கள் மற்றும் ஊதிய குழு என்பன தொடர்பில் பிரயோகிக்கப்படுகின்றனவா என்பது பரீட்சிக்கப் பட்டது.<br><br>அ) "ஆய்வெல்லை" மற்றும் கூட்ட அறிக்கைகளை பரிசீலனை செய்வதன் மூலம் வங்கியின் பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் பிரதான முகாமைத்துவ அலுவலர்கள் ஆகியோர்கள் தொடர்பிலான ஊதியத்தினைத் (சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய பணக் கொடுப்பனவுகள்) தீர்மானிக்கும் நோக்கிலானதொரு கொள்கையினை குழு அமுல்படுத்தியிருப்பது பரீட்சிக்கப்பட்டது. | | | ஏ/இ | நிதி அமைச்சரின் சுற்றறிக்கைகளின் அடிப்படையிலானது |
| | ஆ) பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் பிரதான முகாமைத்துவ அலுவலர்கள் ஆகியோர்களுக்குப் பொறுப்பான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் ஆவணமாகத் தயாரிக்கப்படுவது பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | ஆண்டிற்கான நடவடிக்கைத் திட்டம் இலக்குகளுடன் தயாரிக்கப்பட்டது. முகாமைத்துவ குழு கூட்டங்களுடாக இயங்கிக் கொண்டிருக்கும் மதிப்பீடுகள் செய்யப்பட்டன. |
| | இ) நிறுவப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கு எதிராக, பிரதான நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் பிரதான முகாமைத்துவ அலுவலர்கள் ஆகியோரின் செயலாற்றுகைகள் தொடர்பிலான மதிப்பீடுகளை அவ்வப்போது பரிசீலித்துள்ளமையும், ஊதியம், பயனடைவுகள் மற்றும் செயலாற்றுகை அடிப்படையிலான ஏனைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் போன்றவற்றை திருத்தியமைப்பதற்கான அடிப்படையை நிர்ணயிப்பதும் பரீட்சிக்கப்பட்டது. | | இணங்குவிப்பு இன்மை | | பிநிஅ மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு எதிராக நிர்ணயிக்கப் பட்டுள்ள குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளின் செயலாற்றல்களை மனித மூல வளங்களும் ஊதியங்களும் குழு காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்யவில்லை. |
| | ஈ) கூட்ட அறிக்கைகளை பரிசீலனை செய்வதன் மூலமான பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றிய கலந்தாராய்வின் போதான குழுக் கூட்டங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரியானவர் மூகமளிப்பதில்லை எனும் கருத்தை குழுவின் "ஆய்வெல்லை" கொண்டிருப்பது பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | மனித மூலவளங்களும் ஊதியங்களும் குழுவின் விதிகளுக்கான குறிப்புகளில், பிநிஅ யுடன் தொடர்புடைய விடயங்கள் கலந்துரையாடப்படும் போது அவர் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. |
| 3(6) (iv) | பின்வரும் விதிமுறைகள் பெயர் நியமனக் குழு தொடர்பில் ஏற்புடையதாயிருக்கும்:<br><br>அ) குழுவானது புதிய பணிப்பாளர்களை, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர்களை தெரிவுசெய்வதற்கு/நியமிப்பதற்கானதொரு நடைமுறையினை அமுல்படுத்தியுள்ளமை பரீட்சிக்கப்பட்டது. | | | ஏ/இ | அஈமுவ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிதி அமைச்சரினால் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர் |
| | ஆ) தற்போதைய பணிப்பாளர்களை மீளத் தெரிவுசெய்தல் தொடர்பில் குழுவானது பரிசீலனை செய்து பரிந்துரை செய்துள்ளது (அல்லது பரிந்துரை செய்யவில்லை) என்பது பரீட்சிக்கப்பட்டது. | | | ஏ/இ | நிதி அமைச்சரினால் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர் |
| | இ) தொழில் விபரத்தை பரிசீலித்து, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர் பதவிக்கான நியமனம் அல்லது பதவியுயர்வு தொடர்பில் கருதப்படத்தகு தகுதியுடைமைக்குத் தேவையான தகைமைகள், அனுபவங்கள் மற்றும் பிரதான பண்புகள் போன்றவற்றுக்கான தகுதிறன்களை குழு உருவாக்கியுள்ளமை பரீட்சிக்கப்பட்டது. | | இணங்குவிப்பு இன்மை | | இது தொடர்பாக சரியானதொரு நடைமுறை இல்லை. |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | ஈ) வழிப்படுத்தல் 3(3) இல் கொடுக்கப்பட்டுள்ள மற்றும் சட்டவிதிகளில் அமைக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கமைய அலுவல்களை பேணுவதற்கு தாங்கள் உறுதியுடனும் பொருத்தமான நபராகவும் இருப்பதாக; பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர் ஆகியோரிடமிருந்து அவர்களின் ஒப்பமிடப்பட்ட பிரகடனங்களை குழு பெற்றுள்ளமை பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | பணிப்பாளர்கள் ஒவ்வொருவரினதும் ஒத்த கோவைகள் சரிபார்க்கப்பட்டதுடன், இமவயின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக பிரகடணங்கள் கையொப்பமிடப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது. |
| | உ) பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர் தொடர்பில் ஓய்வுபெறச் செய்வதற்கான முறைசார் தொடர் திட்டங்களை குழு பரிசீலித்துள்ளமை பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | சபைத் பத்திரம் இல. 12/02/12 இன் கீழ் சபைக்கு முறைமையான பின் அமர்வாளர் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், சபையினால் மீளாய்வும் செய்யப்பட்டது. |
| | ஊ) குழுவானது சுயாதீன தன்மை கொண்ட பணிப்பாளர் ஒருவரால் தலைமை வகிக்கப்படல் வேண்டும் என்பதும் பெரும்பாண்மை சுயாதீன பணிப்பாளர்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்கவேண்டும் என்பதும் பரீட்சிக்கப்பட்டது. பிரதம நிறைவேற்று அதிகாரி கூட்டங்களுக்கான அழைப்பின் பேரில் அவற்றுக்கு சமுகமளிக்கலாம். | இணங்குவிப்பு | | | பணிப்பாளர்கள் அனைவரும் சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற நிதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள். பிநிஅ/பொமு அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு வருகை தருவார். |
| 3(6) (v) | பின்வரும் ஒழுங்குவிதிகள், ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (IRMC) தொடர்பில் ஏற்புடையதா என பரீட்சிக்கப்பட்டது:<br>அ) குழுவானது குறைந்தது 3 நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருக்க வெண்டுமென்பதோடு, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ நபர் ஆகியோர் கடன், சந்தை, பணமாக்கல், இயக்க மற்றும் உபாய முறை இடர்கள் மற்றும் அதிகார வரைச்சட்டகத்தில் அடங்குகின்ற பணிகள் மற்றும் குழுவிற்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகள் போன்ற பரந்த இடர் வகைகளை கண்காணிப்பர். | இணங்குவிப்பு | | | ஒருங்கிணைந்த இடர் முதுகாமைத்துவ குழுவில் நிறைவேற்று அதிகாரமற்ற மூன்று பணிப்பாளர்கள் உள்ளனர். பிநிஅ/பொமு உம் ஏனைய முக்கிய முகாமைத்துவ ஆளணியினரும் அழைப்பின் பேரில் வருகை தருவார்கள்.<br><br>சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு ச/ப இல. 12/09/12 யை நாங்கள் அவதானித்தோம். |
| | ஆ) வங்கி தொடர்பான கடன், சந்தை, பணமாக்கல், இயக்க மற்றும் உபாய முறை இடர்கள் போன்ற சகல இடர்களையும் பொருத்தமான இடர்ச் சுட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்கள் மூலம் மாதாந்த அடிப்படையில் மதிப்பிடுவதற்கான ஒரு செயன்முறையினை குழு கொண்டிருந்தமை பரீட்சிக்கப்பட்டது. துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்கள் தொடர்பில் இடர் முகாமைத்துவமானது வங்கி அடிப்படையிலும் கூட்டாகவும் என இருவாறாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | பகுதி இணங்குவிப்பு | | | முகாமைத்துவ குழு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இது விடயமாக கிடைத்த ஆவணம் சரிபார்க்கப்பட்டது. குழுவின் பொறுப்புகள் மற்றும் அதிகாரம் என்பவற்றை உள்ளடக்கியுள்ள இடர் முகாமைத்துவ குழுவின் கொள்கைகளில் இது உட்சேர்க்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த செயன்முறைகள் மாதாந்த அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படாமை அவதானிக்கப்பட்டது. |
| | இ) கடன் குழு, சொத்து-பொறுப்புக் குழுக்கள் போன்ற சகல முகாமைத்துவ மட்டக் குழுக்களுக்குமான அளவு சார்ந்த மற்றும் பண்பு சார்ந்த குறிப்பிட்ட இடர் எல்லைகளை குழு மீளாய்வு செய்துள்ளமை மற்றும் அவ்வப்போதான ஏதேனும் இடர் சுட்டிகள் தொடர்பில் அறிவித்தமை பரீட்சிக்கப்பட்டது. | பகுதி இணங்குவிப்பு | | | சொத்து மற்றும் பொறுப்புகளின் இடர் குழுவின் கொள்கை சரிபார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், இது தொடர்பாக ஒரே ஒரு சபை கூட்ட அறிக்கை மட்டுமே இருந்தது கவனிக்கப்பட்டது ச/ப இல. 12/05/19 |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | ஈ) குறிப்பிட்ட அளவு சார் மற்றும் பண்பு சார் இடர் மட்டங்களுக்கு அப்பால் சென்றுள்ள சகல இடர் சுட்டிகளையும் குழு பரிசீலித்துள்ளமை பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் கூட்ட அறிக்கை சரிபார்க்கப்பட்டது.<br>ச/ப 12/03/18<br>ச/ப 12/03/17<br>ச/ப 12/07/11<br>ச/ப 12/07/12<br><br>சஒஇமுகு கூட்ட அறிக்கை 18/12/2012<br>சஒஇமுகு கூட்ட அறிக்கை 18/12/2012<br>சஒஇமுகு கூட்ட அறிக்கை 23/10/2012 |
| | உ) குழுவானது குறைந்தது காலாண்டு காலத்திலாவது எத்தனை தடவைகள் கூட்டம் நடாத்தியுள்ளது என்பது பரீட்சிக்கப்பட்டது. | | இணங்குவிப்பு இன்மை | | குறைந்தது காலாண்டு அடிப்படையிலாகிலும், குழு கூடவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் ஆண்டின்போது மூன்றுமுறை குழு கூடியுள்ளது. திகதிகள் பின்வருமாறு:<br>06/09/2012<br>23/10/2012<br>18/12/2012<br><br>மேலதிக உறுதிப்படுத்தலுக்காக சஒஇமுகு வின் வரவு புத்தகத்தை நாங்கள் கவனித்தோம். |
| | ஊ) குறிப்பிட்ட இடர்களை அடையாளப்படுத்தத் தவறிய அதிகாரிகள் தொடர்பில் ஆவணப்படுத்தப்பட்ட முறைசார் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான நடைமுறையொன்றை குழு மீளாய்வு செய்து ஏற்றுக் கொண்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டது. | | இணங்குவிப்பு இன்மை | | ஒழுக்காற்று விதிகளுக்கு அமைவாக குழு செயற்படுகின்ற தென்பதற்கான சான்றுகள் இல்லை. |
| | எ) சபையின் கருத்துகள், ஒத்திசைவு மற்றும்.'. அல்லது குறிப்பிட்ட வழிகாட்டல்கள் போன்றவற்றைப் பரிமாறும் நோக்கிலான சபையின் ஒவ்வொரு கூட்டம் இடம்பெறுகின்ற வாரத்தினுள்ளும் இடர் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை குழு சமர்ப்பிப்பதானது பரீட்சிக்கப்பட்டது. | | இணங்குவிப்பு இன்மை | | ஒவ்வொரு கூட்டத்தினதும் ஒரு வாரத்திற்குள் இடர் மதிப்பீட்டு அறிக்கையை குழு சமர்ப்பிக்கவில்லை. |
| | ஏ) வங்கியின் இணக்கப்பாட்டினை சகல வியாபார தொழிற்பாட்டுப் பரப்பு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள், விதிமுறைகள், கட்டுப்பாட்டு வழிமுறைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு மதிப்பிடுவதற்கான இணக்கச் செயற்பாடு ஒன்றை குழு நிறுவியுள்ளமையும், இணக்கப்பாட்டு செயற்பாடுகளை மேற்கொண்டு அது தொடர்பில் அவ்வப்போது குழுவிற்கு அறிக்கை செய்யும் நோக்கில் பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர்களிலிருந்து ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு இணக்கப்பாட்டு அதிகாரியாக செயற்படுவதும் பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | இணங்குவிப்பு நடவடிக்கைகளுக்கென புறம்பான தொரு இணங்குவிப்பு அதிகாரி இருக்கின்றார். திருமதி. கீகானகே சபைக்கும் இமவக்கும், இணங்குவிப்பின் விதிமுறைகளையும் ஒழுங் குறுத்துகைகளையும் அறிவிப்பார்<br>சஒஇமுகு 2012/பிஆர்/01/07 |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(7)<br>3(7)(i) | சம்பந்தப்பட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள்<br><br>எந்தவொரு நபரினாலும் வங்கி நடவடிக்கையில் வட்டி தொடர்பில் எழக்கூடிய முரண்பாடுகளைத் தவிர்க்கும் நோக்கில் சபையினால் நிறுவப்பட்டு ஆவணப்படுத்தப்பட்ட செயன்முறை ஒன்று காணப்படுவது பரீட்சிக்கப்பட்டது. மேலும் இது "சம்பந்தப்பட்ட தரப்பினர்" எனக் குறிப்பாக கருதப்படுகின்ற பின்வரும் வகையிலடங்கும் நபர்கள் தொடர்பிலானதாகும்:<br>அ) வங்கியின் யாதேனும் துணை நிறுவனம்<br>ஆ) வங்கியின் யாதேனும் கூட்டு நிறுவனம்<br>இ) வங்கியின் யாரேனும் பணிப்பாளர்கள்<br>ஈ) வங்கியின் யாரேனும் பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர்<br>உ) வங்கிப் பணிப்பாளரின் அல்லது பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தரின் நெருங்கிய உறவினர்<br>ஊ) வங்கியில் கூடியளவு வட்டிக்குச் சொந்தமாக விருக்கும் ஒரு பங்குதாரர்.<br>எ) யாரேனும் வங்கியின் பணிப்பாளர் அல்லது அவரின் நெருங்கிய உறவினர் அல்லது அதன் பிரதான பங்குதாரர் கணிசமானளவு வட்டியினைக் கொண்டிருத்தல் தொடர்பிலான கரிசனை. | | இணங்குவிப்பு இன்மை | | தொடர்புடையவர்களை அடையாளம் காணுவதற்கு தாபிக்கப்பட்ட செயன் முறைகள் எவையும் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. |
| 3(7)(ii) | சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்புடையதாக பின்வரும் வகையிலடங்கும் நடவடிக்கைகளை அடையாளங்கண்டு அதனை அறிக்கை செய்வதற்கான செயன்முறையொன்று காணப்படுவது பரீட்சிக்கப்பட்டது.<br><br>அ) கடன் வசதிக்கான அதிகபட்ச தொகை தொடர்பில் நாணய சபையினால் வரையறுக்கப்பட்டவாறான எவ்வகையானதொரு கடன் வசதியளிப்பு.<br>ஆ) வங்கியின் யாதேனும் பொறுப்புகளை வைப்புகள், கடன் பெறுகைகள் மற்றும் முதலீடுகள் ஆகிய வடிவங்களில் ஏற்படுத்தல்.<br>இ) வங்கிக்கு செலுத்தப்படுகின்ற அல்லது வங்கியிடமிருந்து பெறுகின்ற நிதிசார் அல்லது நிதிசாரா தன்மையுடைய ஏதேனும் சேவைகள் தொடர்பான ஏற்பாடுகள்.<br>ஈ) சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பயனுள்ள வகையிலான இரகசிய அல்லது முக்கிய தகவல்களை தெரிவிக்கும்படியான தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றம் தொடர்பான செயற்பாட்டினை வங்கிக்கும் அத்தகைய ஏதேனும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் இடையில் உருவாக்குதல் அல்லது பேணுதல். | | இணங்குவிப்பு இன்மை | | தொடர்புடையவர்களின் கொடுக்கல்வாங்கல் களை அடையாளம் காணுவதற்கு எந்தவொரு செயன்முறைகளும் இருக்கவில்லை. |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(7) (iii) | மேலே பணிப்புரை 3(7)(i) இல் விபரிக்கப்பட்ட வாறான சம்பந்தப்பட்ட தரப்பினருடன் வங்கியானது தொடர்பினைப் பேணவில்லை என்பதை உறுதிப் படுத்துவதற்கானதொரு செயன்முறையை சபை கொண்டுள்ளதா என்பது பரீட்சிக்கப்பட்டது.<br><br>அ) வங்கியின் தொழிற்பாட்டு மூலதன சதவீதத்தை விஞ்சுகின்ற தொடர்புடைய வகுதியினர்களுக்கு முழு மொத்த கவனம் வழங்குதல் பரீட்ச்சிக்கப்படுவது பணிப்பாளர் சபையினால் நடைபெறுவதுடன் அது இங்கு உப கட்டளையின் ஊடாக தீர்மானிக்கப்படும்.<br><br>I) “கவனம் எடுத்தல்“ என்பதன் ஊடாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் அறிவுறுத்தல்களில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் உச்ச அளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.<br><br>II) “மொத்த மொத்த ஆர்வம்“ கணக்கெடுக்கப் படுவது மொத்த ஆர்வத்தில், அது போன்ற தொடர்புடைய பகுதியினரால் வங்கியின் கொடுக்கல் வாங்கல் மூலதனம் மற்றும் 5 வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான கடன் அளவான தொகைக்கு சமமான அளவான மூதலீட்டை குறைப்பதன் ஊடாகவாகும்.<br><br>ஆ) வங்கியின் சிறந்த கடனுக்கான வீதத்தைவிட குறைந்த வட்டி வீதம் ஒன்றை அறவிடல் அல்லது சம்பந்தமில்லாத ஒப்பிடத்தகு வாடிக்கையாளருடனான ஒப்பிடத்தகு நடடிக்கை ஒன்றுக்காக வங்கியின் வைப்பீட்டுக்கான வீதத்தைவிட அதிகம் செலுத்துதல்.<br><br>இ) சாதகமான தவணைக்காலம், வியாபார இழப்புகளை மீட்கும் வகையில் மற்றும்.˙.அல்லது சம்பந்தமற்ற தரப்பினரால் மேற்கொள்ப்படும் சாதாரண வர்த்தக நடவடிக்கைகளில் வழங்கப்பட்ட பிரமாணங்களுக்கு அப்பால் விரிவாக்குகின்ற கட்டணங்கள்.˙. தரகுப்பணங்களை விலக்களிப்புச் செய்தல் போன்ற விரும்பத்தகு நடவடிக்கைகளை வழங்கல்<br><br>ஈ) மதிப்பீட்டு நடைமுறை எதுவுமின்றி ஒரு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சேவைகளை வழங்கல் அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினரிட மிருந்து சேவைகளைப் பெறுதல்<br><br>ந) சட்டப்படியான கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான போது தவிர உரிய வகுதியினருடன் முக்கியமான தகவல்கள் அலலது உரிமைகள் வெளிப்படுத்தப்படுகின்ற வித்தில் தகவல் பரிமாற்றம் மற்றும் அறியப்டுத்தல் செயன்முறைகள் பேணப்பட்டுள்ளன. | | இணங்குவிப்பு இன்மை | | இது தொடர்பான சரியானதொரு செயன்முறை இல்லை. |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(7) (iv) | வங்கி அதன் எவராவது பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கு கடனுதவியை வழங்குவதற்கான செயன்முறை யொன்றை கொண்டிருக்கின்றது என்பது பரீட்சிக்கப்பட்டது. அத்தகைய கடனுதவியானது சம்பந்தப்பட்ட பணிப்பாளர் தவிர்ந்த பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்கு குறையாத அதன் அதன் பணிப்பாளர்களின் சபை கூட்டமொன்றில் அத்தகைய கடனுதவிக்கு சார்பாக வாக்களிப்பது தடைசெய்யப்படுவதோடு இந்த கடனுதவி வசதியானது நிதிச் சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய பாதுகாப்பினால் பாதுகாக்கப்படல் வேண்டும். | | | ஏ/இ | அத்தகைய நிகழ்வு அறிவிக்கப்படவில்லை |
| 3(7) (v) | அ) கணிசமான நலனை கொண்டுள்ள நபரொருவருக்கு அல்லது நபரொருவரின் நெருங்கிய உறவினர் அல்லது சம்பந்தப்பட்ட நபரொருவருக்காக வங்கியினால் வழங்கப்பட்டிருக்கின்ற ஏதாவது கடனுதவியொன்றுக்கு வங்கி செயன்முறையொன்றை கொண்டுள்ளது என்பத பரீட்சித்து அத்தகைய நபர் பின்னர் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்பட்டும் போது பணிப்பாளர் ஒருவராக அந்நபரின் நியமன திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் நிதிச் சபையினால் அந்த நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்படக் கூடியதான தேவையான பாதுகாப்பை பெற்றுக்கொள்ள வங்கியினால் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | | | ஏ/இ | அத்தகைய நிகழ்வு அறிவிக்கப்படவில்லை |
| | ஆ) மேலே 3(7)(V) (அ) பணிப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அக்காலத்தில் அத்தகைய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பது பரீட்சிக்கப்பட்டு அத்தகைய பணிப்பாளரின் நியமனத்திகதியிலிருந்து பதினெட்டு மாத காலங்கள் காலாவதித் திகதியில் அல்லது கடனுதவி வசதி வழங்கப்பட்ட காலத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் எது முன்னையதோ அக்காலப்பிரிவினுள் ஏதாவது கடனுதவி வசதி கணக்கின் மீதான ஏதாவது செலுத்தப்பட வேண்டிய தொகை வட்டியுடன் மீட்பதற்கு நடவடிக்கைகளை வங்கி எடுத்திருக்கின்றதா. | | | ஏ/இ | அத்தகைய நிகழ்வு அறிவிக்கப்படவில்லை |
| | இ) பணிப்பாளர் பதவியில் விலகிச்சென்றுவிட்டார் என கருதப்படக்கூடிய மேற்குறிப்பிட்ட உப பணிப்புரைகளுடன் இயைந்துசெல்ல தவறுகின்ற எந்தவொரு பணிப்பாளரையும் அடையாளங்காண்பதற்கான செயன்முறை யொன்று பரீட்சிக்கப்பட்டிருக்கின்ற தோடு அந்த விடயத்தை வங்கி பொதுமக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளதா | | | ஏ/இ | அத்தகைய நிகழ்வு அறிவிக்கப்படவில்லை |
| | ஈ) வங்கியில் ஊழியர் ஒருவராக கடனுதவி வசதி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்த எந்தவொரு பணிப்பாளருக்கும் பிரயோகிக்கப்பட முடியாத 3(7) (V) (அ) உறுப்புரையை உறுதிப்படுத்துவதற்கான பரீட்சிக்கப்பட்டதோடு அத்தகைய வங்கியின் அனைத்து ஊழியர்களுக்கும் பிரயோகிக்ககூடிய திட்ட மொன்றின் கீழ் கடனுதவி வழங்கப்பட்டது. | | | ஏ/இ | அத்தகைய நிகழ்வு அறிவிக்கப்படவில்லை |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(7) (vi) | ஏதாவதொரு ஊழியருக்கு அல்லது அத்தகைய ஊழியரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது அத்தகைய வங்கியின் ஊழியர்களுக்கு பிரயோகிக்ககூடிய திட்டமொன்றின் அடிப்படை தவிர்ந்த கணிசமான வட்டியை கொண்ட ஊழியர் அல்லது நெருங்கிய உறவுடன் தொடர்புடைய தரப்புக்கு அல்லது மேலே 3(7) (v) இன் பணிப்பின் பிரகாரம் வழங்கப்பட்ட கடனுதவி தொடர்பில் நிதிச் சபையினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான பாதுகாப்பினால் பாதுகாக்கப்பட்டவருக்கு கட்டணங்கள் அல்லது தரகுகள் விலக்களிப் பெற்றவர் தொடர்பிலான ஏதாவது கடனுதவி அல்லது 'மிகவும் சார்புடைய நடவடிக்கை' ஐ வங்கி வழங்குகின்ற போது அடையாளங் காண்பதற்கான செயன்முறையொன்று இருப்பது பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | வங்கி இச்செயன்முறைக்காக கடன் கையேட்டை பிரயோகிக்கின்றது. |
| 3(7) (vii) | மேலே பணிப்புரை 3(7)(v) மற்றும் 3(7)(vi) என்பவற்றின் கீழ் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு கடனுதவி வசதிக்காக நிதிச் சபையின் முன்அங்கீகாரத்தை பெறுவதற்கான செயன்முறையொன்று பரீட்சிக்கப்பட்டதா நிதிச் சபையின் முன்அங்கீகாரமின்றி அத்தகைய கடனுதவி வசதியின் ஏதாவது ஒரு பகுதியோ அதன் பேரிலான ஏதாவது வட்டி அனுப்பப்பட்டிருக்கின்றதா அத்துடன் அத்தகைய அங்கீகாரமின்றி எந்தவொரு பண அனுப்புகையும் செல்லுபடியற்றதும் பயனற்றதுமாகும். | | இணங்குவிப்பு இன்மை | | இது தொடர்பாக சரியானதொரு செயன்முறை இல்லை. |
| 3(8) 3(8)(i) | வெளிப்படுத்தல்கள்<br>சபை வெளிப்படுத்தியவை சரிபார்க்கப்பட்டது: | | | | |
| | அ) கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்துகை அதிகாரங்கள் மற்றும் பொருத்தமான கணக்கீட்டு தராதரங்களினால் குறித்துரைக்கப் பட்ட அமைப்புகளுடன் இயைந்த வகையில் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் தயரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருப்ப தோடு அத்தகைய கூற்றுக்கள் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகைகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. | இணங்குவிப்பு | | | 2011 ஆண்டறிக்கை அவதானிக்கப்பட்டது. மேலும், அக்கூற்றுகள் பின்வரும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன.<br>1. த ஐலண்ட்<br>2. திவயின<br>3. தினக்குரல் |
| | ஆ) காலாண்டு நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகைகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. | இணங்குவிப்பு | | | இமவயின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, காலாண்டு நிதியில் கூற்றுகளும் பிரசுரிக்கப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது. |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3(8)(ii) | வருடாந்த அறிக்கையில் சபை பின்வரும் ஆகக்குறைந்த வெளிப்படுத்தல்களை மேற்கொண்டிருப்பது பரீட்சிக்கப்பட்டது: | | | | |
| | அ) கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிசார் கூற்றுக்களுடன் தொடர்புடைய கூற்றானது குறிப்பான வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட பொருத்தமான கணக்கீட்டு தராதரங்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடன் இயைந்த வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது. | இணங்குவிப்பு | | | 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை குறிப்புடன் இவை சரிபாக்கப்பட்டுள்ளன. |
| | ஆ) நம்பகமான நிதிசார் அறிக்கையிடல் தொடர்பில் நியாயமான உத்தரவாத்ததை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கின்ற நிதிசார் அறிகை யிடல் முறைமை வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறை மீதான சபையின் அறிக்கையை உறுதிப்படுத்துவதோடு வெளியக நோக்கங்களுக்கான நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பானது பொருத்தமான கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடன் இயைந்து செல்லும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது | இணங்குவிப்பு | | | 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை குறிப்புடன் இவை சரிபாக்கப்பட்டுள்ளன. |
| | இ) மேலே 3(8)(ii)(b) பணிப்புரையோடு தொடர்பு டைய உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையின் பயனுறுதி மீதான வெளியக கணக்காய்வாளரின் அறிக்கை பெற்றுக் கொள்ளப்படடிருப்பதை சபை பரீட்சித்தது | இணங்குவிப்பு | | | 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை குறிப்புடன் இவை சரிபாக்கப்பட்டுள்ளன. |
| | ஈ) பெயர்கள், தகைமைகள், வயது வழிகாட்டல் பொருத்தப்பாடு மற்றும் தேவைப்பாடுகளை நிறைவேற்றுகினற அனுபவம் வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் வங்கியினால் செலுத்தக்கப்பட்ட மொத்த கட்டணம்/ஊதியம் உள்ளிட்ட பணிப்பாளர்களுடன் தொடர்புடைய விபரங்கள் | இணங்குவிப்பு | | | 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை குறிப்புடன் இவை சரிபாக்கப்பட்டுள்ளன. |
| | உ) தொடர்புடைய ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட 3(7) (iii) இல் குறித்துரைக்கப்பட்ட மொத்த நிகர கடனுதவி. தொடர்புடைய ஒவ்வாரு வகுதிக்கும் வழங்கப்பட்ட நிகர கடனுதவி வங்கியின் ஒழுங்குறுத்துகை மூலதனத்தின் வீதமொன்றாக வெளிப்படுத்தப்படும். | | | ஏ/இ | 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை குறிப்புடன் இவை சரிபாக்கப்பட்டுள்ளன. |
| | ஊ) செலுத்தப்பட்ட ஊதியங்கள் வழங்கப்பட்ட கடனுதவி வங்கியிலுள்ள முதலீடுகள் போன்ற சபை வகுதியினால் குறிப்பிடப்பட்ட வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியிருக்கும் அதனால் வழங்கப்பட்ட ஊதியங்களின் மொத்த பெறுமதி மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் கொடுக்கல் வாங்கல்களின் மொத்த பெறுமதி | | | ஏ/இ | சபை செயலாளரின் விளக்கத்திற்கமைவாக, தொடர்புடையவர்களுக்கு சலுகை வழங்கப்படவில்லை. |
| | எ) கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைகளுடன் இயைந்ததாக சபை வெளிவாரி கணக்காய் வாளரின் அறிக்கையை பெற்றிருந்தமை பரீட்சிக்கப்பட்டது. | இணங்குவிப்பு | | | 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை குறிப்புடன் இவை சரிபாக்கப்பட்டுள்ளன. |
| | ஏ) சாதுரியமான தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடன் இயைந்து செல்லக்கூடிய விபரங்களின் அறிக்கையொன்றை தயாரித்திருப்பதோடு இயைந்து செல்லாத ஏதாவது விடயத்தை சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது | இணங்குவிப்பு | | | 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை குறிப்புடன் இவை சரிபாக்கப்பட்டுள்ளன. |

## நிருவன ஆளுமை தொடர்ச்சி

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட நடைமுறை | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | ஐ) வங்கியின் இடர் முகாமைத்துவம், அல்லது வங்கியின் மேற்பார்வை பணிப்பாளரினால் குறிப்பிடப்பட்ட இப் பணிப்புரைகளுடன் இணங்கி செயற்படாமை போன்ற ஒழுங்கமைப்பு கூற்றுகள் என்பனவற்றுடன் மேற்பார்வை அக்கறைகளில் ஏற்படக்கூடிய குறைபாடுகள் இருப்பின், அவை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் எனும் நாணயச் சபையின் பணிப்புரைகளுடன் சேர்த்து, அத்தகைய அக்கறைகள் குறித்து வங்கியினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளும். | இணங்குவிப்பு | | | 2011 ஆண்டறிக்கையின் 62 ஆம் பக்கத்திற்கு அமைவாக, கூட்டங்களின் ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகளுடனான இணங்குவிப்பு விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. |
| 3.9 | இடை மாற்றப்படுவதும், ஏனைய பொது ஏற்பாடுகளும் | | | | |
| 3 (9) (i) | 01 ஜனவரி 2008 இலிருந்து, இப்பணிப்புரைகள் மீதான இணங்குவிப்பு ஆரம்பமாகும். இப்பணிப்புரைக்கு விசேடமாக வழங்கப்பட்டுள்ள இணங்குவிப்பு திகதிகள் நீடிக்கப்பட்டிருந்தால் அன்றி, 1 ஜனவரி 2009 அன்று அல்லது அதற்கு முன்னர் வர்த்தக வங்கிகள் அனைத்தும் இந்த பணிப்புரைகளின் ஏற்பாடுகளுடன் இணங்கி செயற்பட வேண்டும். | இணங்குவிப்பு | | | அஈமுவ சட்டம் & இமவ யின் பணிப்புரை என்பவற்றில் இது தொடர்பாக தரப்பட்டுள்ள பணிப்புரைகளை வங்கி பிரயோகிக்கின்றது. |
| 3 (9) (ii) | குறித்தொதுக்கப்பட்ட நியமத்தினால் இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்ட வங்கி தொடர்பாக, சம்பந்தப்படட நியமத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தொடர்ந்து செயற்படுவதற்கு அத்தகைய நியமங்களை சபை தெளிவாக விளக்கியுள்ளது. இந்த பணிப்புரைகளின் ஏற்பாடுகள் அனைத்துடனும் இணங்கி செய்படுவதற்கு நடிவடிக்கை எடுப்போம் எனும் பட்சத்தில் சம்மபந்தப்பட்ட நியமத்தின் ஏற்பாடுகளுடன் நிலையான உறுதியாக செயற்படுவோம். | இணங்குவிப்பு | | | அஈமுவ சட்டம் & இமவ யின் பணிப்புரை என்பவற்றில் இது தொடர்பாக தரப்பட்டுள்ள பணிப்புரைகளை வங்கி பிரயோகிக்கின்றது. |
| 3 (9) (iii) | அத்தகைய வங்கி செயற்படும் நாட்டின் நிதிகள் மற்றும் கூட்டங்களுக்கு பொறுத்தமானதாக உறுதியுடன் இருக்குமாயின். இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு வங்கிக் கிளைகளுக்கும் இந்த பணிப்புரை ஏற்புடையதாகும். வெளிநாட்டு வங்கி கிளை, தனது தாயாக வங்கியின் வருடாந்த நிறுவன ஆளுமை அறிக்கையுடன் சேர்த்து இலங்கையில் அதன் கிளையின் செயற்பாட்டின் ஆண்டறிக்கையையும், கணக்குகளையும் வெளியிடு கின்றது. | | | ஏ/இ | அஈமுவ சட்டம் & இமவ யின் பணிப்புரை என்பவற்றில் இது தொடர்பாக தரப்பட்டுள்ள பணிப்புரைகளை வங்கி பிரயோகிக்கின்றது. |
| 3 (9) (iv) | இந்த பணிப்புரையின் எந்தவொரு ஏற்பாடுகளினதும், இந்த பணிப்புரைகளின் ஏற்பாடுகள் தொடர்பாக எந்தவொரு வங்கியிலும் உள்ள யாப்ப விதிகளுக்கும் (அல்லது உள்ளக விதிமுறைகள்) இடையில் முரண்பாடுகள் நிலுவுமாயின், இந்த பணிப்புரைகளின் ஏற்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படும். எவ்வாறாயினும், தனிப்பட்ட வங்கியொன்றின் யாப்ப விதிகள், இந்த பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவையிலும் அதிக கண்டிப்புடையவையாக இருப்பின் யாப்பு விதிகளில் உள்ள அத்தகைய ஏற்பாடுகள் பின்பற்றப்படலாம். | | | ஏ/இ | அஈமுவ சட்டம் & இமவ யின் பணிப்புரை என்பவற்றில் இது தொடர்பாக தரப்பட்டுள்ள பணிப்புரைகளை வங்கி பிரயோகிக்கின்றது. |
| 3 (9) (v) | எந்தவொரு நபரும் சுகவீனம் காரணமாக அல்லது வங்கிச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளவாறு ஏதாகிலும் தகுதியின்மையுடையவராகும்போது 3 (2) (ii) B, 3 (ii) A பணிப்புரையில் குறப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகை நாணயச் சபை கருத்திற் கொள்ளும். நாணயச் சபையினால் அத்தகைய நிலைமை சம்மபந்தப்பட்டவருக்கு தெரிவிக்கபப்படுவதுடன், விசாரணைக்கு பின்னர், நாணயச் சபை விதிவிலக்கு காலத்தை மட்டுப்படுத்தவும் முடியும். | | | ஏ/இ | |

# வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பில் பணிப்பாளரின் அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 3 (8) 11 (ஆ) பிரிவிற்கு இணைவாகவும், இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரமும், இலங்கை அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாக பணிப்பாளர் சபை இந்த அறிக்கையை சமர்ப்பிக்கின்றது.

வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் அதன் வினைத்திறனும் செயற்பாட்டிற்கும் பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

சொத்துக்கள் உரிய முறையில் பாதுகாக்கப்படுகின்றமை. உரிய முறையில் கணக்கீடுகள் பேணப்படுகின்றமை மற்றும் வங்கியின் நிதிசார் அறிக்கையிடல் முறைமையின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு உள்ளக் கட்டுப்பாட்டு முறைமையானது உரிய விதத்தில் வடிவமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என பணிப்பாளர் சபை உணர்ந்துள்ளது. எவ்வாறாயினும், தவிர்க்க முடியாத இடர்களின் காரணமாக சாத்தியமான தவறுகள் ஒழுங்கீனங்கள் மற்றும் மோசடிகளின் ஒழிப்பு தொடர்பாக முழு அளவிலான உத்தரவாதத்தினை இந்த முறைமை வழங்குவதில்லை.

வங்கியினுள் வினைத்திறன்மிக்க உள்ளளக் கட்டுப்பாட்டு முறைமையை வழங்குவதற்கு ஒரு முறைமையினை பணிப்பாளர் சபை உருவாக்கி உள்ளது. இக் குறிப்பிட்ட முறைமை உள்ளக கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை உள்ளடக்குகின்றது.

- வங்கியினுள் உள்ளக் கட்டுப்பாட்டு முறைமையின் போதுமை மற்றும் ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பல்வேறுபட்ட உபகுழுக்களை சபை நிறுவி உள்ளதுடன், நிறுவன முகாமைத்துவமும், சிரேஷ்ட முகாமைத்துவமும், வங்கியின் முகாமையாளர்களுக்கு சபையின் அதிகாரத்தை சட்டப்படியாக பகிர்ந்தளித்துள்ளதனூடாக, வங்கி முகங்கொடுக்கும் இடர்களை வங்கியின் முகாமையாளர்கள் மதிப்பிடுவதற்கும் முகாமைத்தும் செய்வதற்கும் சபைக்கு உதவக் கூடியதாக உள்ளது.
- சுயாதீனமான, நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு உள்ளடக்குகின்றது. குழு வங்கியின் இடர் விபரத்திரட்டை மீளாய்வு செய்வதற்கு பொறுப்பாகவுள்ளது. வங்கி சந்திக்கும் பிரதான இடரை அடையாளம் காண வேண்டியுள்ளதுடன், வங்கியின் இடர் முகாமைத்துவத்தின் அடிப்படையில் கொள்கைகளை தயாரிப்பதிலும் ஈடுபடுகின்றது.
- வங்கியின் உள்ளக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளுக்கு உடன்பட்டு வங்கியின் நிதி மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான மாதிரி அடிப்படையொன்றாக வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவு பரீட்சிப்பு செய்கின்றது. கணக்காய்வானது சகல பிரிவுகளிலும் கிளைகளிலும் மேற்கொள்ளப்படும். அதன் ஊடாக வங்கியின் உற்பத்திகள் மற்றும் தொழிற்பாட்டு அலகுகளுடன் தொடர்புபடுகின்ற இடர் மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு அடிக்கடி அவை தீர்மானிக்கப்படும். வங்கியின் முறைகேடுகள், பிழையான அறிக்கையிடல், நிதித் தொழிற்பாட்டு நடைமுறைகளின் மோசடிகள் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பற்றி பணிப்பாளர் சபைத் தலைவருக்கு சுதந்திரமான நோக்க அறிக்கையினை சமர்ப்பித்தல் உள்ளகக் கணக்காய்வு தலைமையின் பொறுப்பாக உள்ளது.
- பொதுவாக, உரிய வகையில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் முழு மொத்த வினைத்திறனை கணக்காய்வு குழு ஆய்வு செய்கின்றது. அதனோடு, உள்ளக கட்டுப்பாட்டு தொடர்பான பலவீனங்கள் தொடர்பாக குறிப்பான அவதானிப்புகள் பற்றி வழமையாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகின்றது. இதற்கேற்ப குழு முறைமைகளில் கணக்காய்வாளர் அறிக்கை, உள்ளகக் கட்டுப்பாட்டு அறிக்கைகள், ஒழுங்கு விதி சார்ந்த அறிக்கைகள், வருடாந்த / மாதாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் உள்ளடங்குகின்றன.
- இல்ங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அறிக்கையிடல் தேவைப்பாடுகள் தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் ஆகியவற்றுக்கு இணைவாக வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறைகளை வங்கியின் பணிப்பாளர் சபை மீளாய்வு செய்கின்றது.
- இருந்த போதும், நிதி அறிக்கையிடல் தொடர்பான வடிவமைப்பு மற்றும் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் தொடர்பான கட்டமைப்பான மீளாய்வானது மேற்கொள்ளபடவில்லை, உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான வினைத்திறன் மீளாய்விற்கு வழிவகை செய்யக் கூடிய உள்ளக் கட்டப்பாட்டு முறைமையின் ஆவணப்படுத்தல் மிக முக்கியமான பணி என பணிப்பாளர் சபை ஏற்கனவே உணர்ந்துள்ளது.
- வங்கியின் அதி உன்னத வினைத்திறனான உள்ளக் கட்டுப்பாட்டு முறைமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிதி அறிக்கையிடல் முறைமைகளில் மேலதிக கட்டுப்பாட்டு ஒழுங்கு முறைகள் வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும் என பணிப்பாளர் சபை உணர்ந்துள்ளது. மேலதிக

## வங்கியின் உள்ளக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பில் பணிப்பாளரின் அறிக்கை

வலுப்படுத்தல் செயன்முறைகள் தொடர்பாக கடந்த வருடத்தில் பின்வரும் படிமுறைகள் அடையாளம் காணப்பட்டதுடன் அவை இன்னும் செயற்பாட்டில் உள்ளன.

I. நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடைய முக்கியமான செயன்முறைகளின் ஆவணப் படுத்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், சிறந்த செயற்பாடுகளுடன் இணங்கும் வகையில் ஆவணப்படுத்தல் நியமங்களும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

II. குறிப்பிட்ட கட்டுப்பாடுகளின் அமுல்படுத்தலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கட்டமைப் புடைய கட்டுப்பாட்டு பரிட்சிப்புக்களை ஆண்டு பூராகவும் மேற்கொள்வதுடன் சபைக் கூட்டத்தின் போது முக்கியமான குறைபாடுகள் கலந்தரையாடப்பட வேண்டும். உள்ளக் கணக்காய்வாளர்கள் கணக்காய்வுக் குழு அடையாளம் கண்ட பலவீனங்கள்/ மேலதிக இடர்கள் காணப்படுமாயின், போதியளவான விளக்கங்களுடன் தொடர் ஆய்வு செயன்முறைகளுடன் மேலதிக விபரங்கள் வழங்கப்பட வேண்டும். இடர் முகாமைத்துவ வேலைச் சட்டகம் மேலும் கட்டமைக்கப்பட்டு வலுப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதும் பணிப்பாளர் சபையின் கருத்தாகும். நிதியாண்டின் பிற்பகுதியின் போது இவ் விடயம் தொடர்பான முன்னெடுப்புக்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

செயன் முறைகளின் மேலதிக வலுப்படுத்தல் தொடர்பாக, மேற்படி விடயப் பரப்புகளுக்கு இணங்க அவை காணப்பட்டுள்ளதுடன், பிரயோகிக்கத் தக்க கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்க செய்யப்பட்டுள்ள வெளியக நோக்கங்களுக்கான நிதி அறிக்கையிடல் மற்றும் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பின் நியாயத் தன்மை தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்கும் பொருட்டு சிறப்பான உள்ளக் கட்டுப்பாட்டு முறை தயார் செய்யப்பட்டுள்ளமை குறித்து தமது அறிவுக்கு எட்டியவரை பணிப்பாளர் சபை சரியென உறுதிப்படுத்துகின்றது.

2012 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் வருடாந்த அறிக்கையில் உள்ளக் கட்டுப்பாட்டு தொடர்பில் பணிபாளர்களின் வெளியக கூற்றானது மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன், வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வில் வங்கியினால் பயன்படுத்தப்பட்டுள்ள செயன்முறை தொடர்பில் அவர்களுடைய புரிந்துணர்வுடன் நிதிக் கூற்றுக்கள் நிலையாக உள்ளது என்று நம்பும் வகையில் தங்களது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் எந்தவிதமான முறைகேடுகளும் கவனத்திற்கு வரவில்லை என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலும், வங்கியின் இடர் முகாமைத்துவ நோக்கங்கள் மற்றும் சபையினால் பின்பற்றப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் பற்றியும் வெளியக கணக்காய்வாளர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

.................................................
கணக்காய்வுக் குழுவின் தலைவர்

.....................................
பணிப்பாளர்

.....................................
பணிப்பாளர்

# வங்கியின் உள்ளக கட்டுப்பாடு மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. எவ்பி/ஈ/எஸ்எம்ஜபி/எவ்ஏ/2012

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date 21 செத்தெம்பர் 2013

**அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று பற்றி கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் பணிப்பாளர் சபைக்கு அளிக்கப்பட்ட சான்றிதழ் அறிக்கை**

**அறிமுகம்**

2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, அரச ஈட்டு முதலீட்டு வங்கியின், உள்ளக கட்டுப்பாடு (கூற்று) மீதான பணிப்பாளர்களின் கூற்று பற்றிய சான்றிதழை இவ் அறிக்கை அளிக்கின்றது. இந்த சான்றிதழ் பணியை மேற்கொள்ளுவதற்கு, பொதுத் துறையில் ஈடுபடும் பட்டயக் கணக்காய்வாளரிகளின் நிருவனம் ஒன்றினால் எனக்கு உதவி செய்யப்பட்டது.

**முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிருவனத்தினால், 2007, இன் 12 ஆம் இல. வங்கிச் சட்ட வழிகாட்டல்களின் 3 (8) (ii) (b) பிரிவுடன் இணங்கி செயற்படுவதற்கு வழங்கப்பட்ட உள்ளக கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று குறித்த வங்கிகளின் பணியாளர்களின் வழிகாட்டலுக்கு அமைவாக இக்கூற்றை தயாரிப்பதற்கும் வெளியிடுவதற்கும் முகாமைத்துவம் பொறுப்பேற்கும்.

**எனது பொறுப்பும் மற்றும் SLSAE 3050 உடன்படலும்**

செயற்படுத்தப்பட்டுள்ள பணிகளின் அடிப்படையிலான கூற்றுகள் மீது, பணிப்பாளர் சபைக்கு, அறிக்கையொன்றை வழங்குவது எனது பொறுப்பாகும். இலங்கை பட்டயக் கணக்காளர் நிருவனத்தினால் வெளியிடப்பட்ட உள்ளக கட்டுப்பாடு பற்றிய பணிபாளர்களின் கூற்று மீதான சான்றிதழ் அறிக்கை - SLSAE 3050 சான்றிதழ் செயற்பாடு மீதான இலங்கை நியமங்களுக்கு அமைவாக, நான் எனது பணிகளை நடத்தியுள்ளேன.

**செயற்படுத்தப்பட்ட பணி சுருக்கம்**

பணிப்பாளர்களினால், அல்லது அவர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களினால் உறுதிப்படுத்தப்பட்டவையாக இக்கூற்றுகள் உள்ளனவா என்பதை மதிப்பீடு செய்வதற்காக இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

செயற்படுத்தப்பட்ட நடைமுறைகள் வங்கி ஆளணியினரின் விசாரணைகளுக்கே முக்கியமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன், கிடைக்கக் கூடியதாக இருந்த ஆவணங்களும் பணிப்பாளர் சபையினால் கைக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு ஏற்ற மாதிரியான அடிப்படையிலும் இருந்தன.

இக்கூற்றுகள், அனைத்து இடர்களையும், கட்டுப்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளதா அல்லது, வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் விளைவுகள் மீது அபிப்பிராயம் ஒன்றை ஏற்படுத்துமா என கருத வேண்டிய தேவையை SLSAC 3050 எனக்கு ஏற்படுத்தவில்லை. ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு முக்கியமான பிரச்சினைகளையும், உண்மையில் பிரச்சினைகளை சரிப்படுத்துவதற்குரிய பொருண்மையான உள்ளக கட்டுப்பாட்டு விடயங்கள் குறித்து விபரிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் பற்றி கருத வேண்டிய தேவையையும் SLSAE 3050 என்க்கு ஏற்படுத்தவில்லை.

**எனது முடிவு**

செயற்படுத்தப்பட்ட நடைமுறைகளன் அடிப்படையில், வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் பயன்பாடு என்பவற்றின் மீளாய்வில் பணிப்பாளர் சபையினால் கைக்கொள்ளப்பட்ட செயன் முறைகள் குறித்து, வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கூற்றுகள் எமது அறிவுக்குட்பட்டவரை முரண்பாடாகவுள்ளன என நான் நம்புவதற்கு ஏதுவான எவையும் எனது கவனத்திற்கு வரவில்லை.

எனது கருத்தின் வரம்பிற்குள், நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்களின் கூற்றிற்கு தங்களின் கவனத்தை ஈர்க்கின்றேன். நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் பயன்பாடு என்பவற்றை மீளாய்வு செய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட நடைமுறைகளையே பணிப்பாளர் சபை பின்பற்றியுள்ளதுடன், செயன்முறைகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையம் எடுத்தள்ளது.

**எச்.ஏ.எஸ். சமரவீர**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

# பின்னிணைப்பு 1

1. தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் மீளாய்வு செய்யப்பட்டன அல்லது, பணிப்பாளர்கள் செய்வதற்கு எதிர்பார்க்கும் அவர்களின் கூற்றுக்களுக்கு ஆதரவளிக்கப்பட்டது.

2. பணிப்பாளர் சபையின் கூட்ட அறிக்கைகளையும் தொடர்புடைய சபை குழுக்களின் கூட்ட அறிக்கைகளையும் மீளாய்வு செய்தது.

3. மீளாய்வின் கீழ்வரும் ஆண்டை முழுவதும் உள்ளடக்கியதாக, உள்ளக கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர்களின் கூற்றுகள் இருக்கின்றதா என்பதையும் எந்தவொரு முக்கியமான விடயங்களும் உருவாவதை அடையாளம் காணுவதற்கு போதுமான செயன்முறைகள் இருப்பதையும் கருத்திற்கொண்டது.

4. ஏனைய போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றிதழ்களை நியாயமான அளவில் எதிர்பார்க்க முடியாது போகும் போது உள்ளக கட்டுப்பாட்டு மீதான கூற்றுகளின் விடயங்களுக்கு பணிப்பாளர்களிடமிருந்து எழுத்துமூல பிரதிநிதித்துவப்படுத்தல் பெறப்பட்டது.

# உறுதிப்பாட்டறிக்கை

80 ஆண்டுகளுக்கும் அதிகமான பரம்பரையொன்றை தொடர்வது என்பது ஆச்சரியமான ஒரு விடயமாகும். அத்துடன் பாரிய பொறுப்புமாகும். எனவே நாங்கள் எமது பணியை மனதில் ஆழமாக பதித்திருக்கின்றோம். அவ்வாறே மேலும் விருத்தியடையும் வர்த்தக மாதிரியொன்றை உருவாக்குவதன் மூலம் மிகச்சிறப்பாக செயலாற்றுகின்றோம். இது உறுதிப்பாடு மற்றும் சமூக பொறுப்புணர்வு என்றவகையில் தனித்துவமானதாகவும் இருக்கின்றது. இத்தகமைகளே எம்மை இதுவரையிலும் முன்னணி இடத்திற்கு கொண்டு வந்துள்ளது. அவ்வாறே நாங்கள் எமது எதிர்காலம் முன் எப்போதையும் விட அதிக முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் நம்புகின்றோம்.



# நிருவன சமூக பொறுப்புணர்வு

நிருவனமொன்று முன்னோக்கி அணிவகுத்து செல்ல வேண்டுமாயின் மூன்று முக்கிய பொறுப்புகளை கருத்திற்கொள்ள வேண்டும். அதனுடைய சொந்த முன்னேற்றத்திற்கும், அதன் ஊழியர்களின் முன்னேற்றத்திற்கும் மற்றும் அது செயற்படுகின்ற சமூகம் மற்றும் பௌதீக சுற்றாடலின் முன்னேற்றத்திற்கும் அது பொறுப்பேற்க வேண்டும்.

பின்னராக குறிப்பிட்டது தொடர்பாக அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் நிருவன சமூக பொறுப்புணர்வு பிரயோகங்கள் மிகவும் பாராட்டத்தக்கது எனக் கூறுவதில் பெருமிதம் கொள்கின்றோம்.

சமுதாயத்தின் ஏனைய பிரிவினரை கவனியாது விட்டுவிட்டு, ஒரு பிரிவினர் மட்டும் முன்னோக்கி அணிவகுப்பது இயலாத ஒன்று என்று நாங்கள் நன்கு அறிந்திருக்கின்றோம். ஆகையினால்தான் அ.ஈ.மு. வங்கியின் நிருவன சமூக பொறுப்புணர்வு பிரயோகங்கள், சமுதாயத்தின் அனைத்து பிரிவினரின் தேவைகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதை விஷேடமாக வலியுறுத்தகின்றது.

இலங்கை ஒரு நாடு என்ற வகையில் 3 தசாப்த கால யுத்தத்திலிருந்து தற்பொழுது மீண்டெழுந்து வருகின்றது. இனம் அல்லது மதம் என்பவற்றிற்கு அப்பால் யுத்தம், அனேகரை மிக ஆழமான உடல் ரீதியானதும், உளரீதியானதுமான காயங்களுக்கு உட்படுத்தியுள்ளது. எமது நிருவன சமூக பொறுப்பு பிரயோகங்கள் அத்தகைய பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு முன்வந்துள்ளது. ஒரு முன்னணி அரச வங்கி என்ற வகையில் இது எமது பொறுப்பாகும். சமூகம் மற்றும் சுற்றாடலின் அபிவிருத்திக்கு நாங்கள் செய்கின்ற காரியங்கள் குறித்து உண்மையிலேயே நாங்கள் பெருமிதம் அடைகின்றோம்.

**மனிதாபிமானத்திற்கு கைகொடுத்தல்**



வாடிக்கையாளரின் குடும்பம் ஒன்றிற்கு அவர்களின் கஷ்டத்தின் போது அளிக்கப்பட்ட சலுகை



தலைமையகத்தில் இரத்ததானம்

# நிதியியல்

## தகவல்

எமது சக்திமிக்க அடையாள குறியீட்டு தூண்களில் ஒன்றாக வெளிப்படுத்தல் தொடர்ந்தும் இருக்கின்றது. இவ்வாண்டில் செயலாற்றல்கள் குறித்த எமது அர்ப்பணிப்பு எமக்கு நன்மை அளித்துள்ளது. 2012ல் எமது வாடிக்கையாளர் தளமும் வைப்புத்தளமும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காண்பித்துள்ளன. அனேக கைத்தொழில் படுகுழிகளின் மத்தியிலும் எமது வாடிக்கையாளர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை எமக்கு வழிகாட்டும் தீபமாக எப்போதும் இருந்துள்ளது. இலங்கை முழுவதற்கும் எமது மிகச்சிறந்த நன்மைகளை வழங்குவதற்காக எமது வாக்குறுதியை நாங்கள் மீண்டும் புதுப்பிக்கின்றோம்.



# பணிப்பாளர் அறிக்கை

### பணிப்பாளர் அறிக்கை

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபை 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த கணக்குகளுடன் அவர்களின் அறிக்கைகளைச் சமர்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

### பணிப்பாளர்கள்

1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அ.ஈ.மு.வங்கியின் சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்பவும் அச் சட்டத்திற்கான திருத்தங்களுக்கு ஏற்பவும் நிதி, திட்டமிடல் அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஒன்பது பொருத்தமான மற்றும் தகைமையுடையவர்களை பணிப்பாளர் சபை உள்ளடக்குகின்றது. விவசாய அமைச்சு, வீடமைப்பு அமைச்சு மற்றும் கால் நடை வளர்ப்பு கிராமிய அமைச்சு ஆகியவற்றை மூன்று அங்கத்தவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். தலைவர் உட்பட வங்கியின் பணிப்பாளர் சபையானது சமூக விஞ்ஞானம், சட்டம், நிதி மற்றும் வர்த்தகம் போன்ற துறைகளில் பரந்த அறிவைக் கொண்டிருக்கின்றனர். கூட்டம் ஒன்றை நடாத்துவதற்கான நடப்பெண் மூன்றாகும். பணிப்பார் சபைக் கூட்டமானது ஆகக் குறைந்தது மாதமொரு முறை அல்லது தலைவர் தேவையெனக் கருதும் பட்சத்தில் அடிக்கடியும் நடைபெறும். 2012 ஆம் ஆண்டின் போது 12 கூட்டங்கள் நடைபெற்றன.

### ஒப்பந்தங்கள் மற்றும் பிரேரணைகள் தொடர்பான பணிப்பாளர்களின் ஈடுபாடுகள்

2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டு தொடர்பாக வங்கியுடன் எந்தவொரு பணிப்பாளருக்கும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபாடிருக்கவில்லை. பணிப்பாளர்கள் தாங்கள் வகிக்கும் ஏனைய பணிப்பாளர் பதவிகள் மற்றும் தொடர்புகள் பற்றி சபைக் கூட்டத்தின் போது வெளிப்படுத்துவதனூடாக அவ்வாறான விடயங்கள் தொடர்பான வாக்கெடுப்புகளில் அவர்களது ஈடுபாடுகளை தவிர்த்து கொள்ள முடியும். இந்த அறிக்கையின், பொது முகாமையாளரின் மீளாய்வு மற்றும் நிதியியல் குறிகாட்டிகள் என்பவற்றில் இந்த நிதியாண்டின் போதான, வங்கியின் செயற்பாடும் அதன் பெறுபேறுகளும் பற்றிய மீளாய்வு தரப்பட்டுள்ளது.

### பிரதான செயற்பாடுகள்

வீடமைப்பு, விவசாயம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி, நிதி மற்றும் சேமிப்பு திரட்டல்கள் என்பவை வங்கியின் பிரதான செயற்பாடுகளாக உள்ளன.

வலையமைப்பை விரிவுபடுத்துவதும், மேலும் திறமையான வாடிக்கையாளர் உத்திகளை அறிமுகப்படுத்துவதும். அதே நேரத்தில் பதியதொரு அறவீட்டு கலாச்சாரத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

### செயற்பாடுகளின் மீளாய்வு

நிதியாண்டின் போது வங்கியின் செயற்பாடு தொடர்பான மீளாய்வு மற்றும் அச்செயற்பாடுகளின் பெறுபேறுகள் என்பவை பொது முகாமையாளரின் மீளாய்வு மற்றும் இவ் அறிக்கையின் நிதி செயலாற்றுகை போன்றவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| பணிப்பாளரின் பெயர் | பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| டாக்டர் ஜகத் வெள்ளவத்த | 12 |
| திரு. தம்மிக்க வீரசேகர | 12 |
| திரு. வி. முஹமட் அமீன் | 08 |
| திரு. சம்ராஸ் யஹியா | 12 |
| திரு. வி.எஸ். பண்டார | 12 |
| திருமதி. கே.டி.எல். கதனாராச்சி | 02 |
| திரு. எஸ்.எம்.ஜி. ஜயரத்ன | 05 |
| திரு. சரத் ஹேசிந்த் | 10 |
| திரு. பந்துசிறி | 05 |
| திரு. பெரேரா | 01 |

### எதிர்கால அபிவிருத்தி

நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு 2013 - 2017 ஆண்டுக்கான புதியதொரு உபாயத்திட்டம் வங்கியால் உருவாக்கப்பட்டுள்ளது. வீடமைப்பு விவசாயம் மற்றும் கைத்தொழில்துறைகளில் நுழைவதற்கான புதிய வியாபார வாய்ப்புக்களை வங்கி தேடிக்கொண்டிருக்கின்றது

### கணக்காய்வுக் குழு

சகல குழு அங்கத்தவர்களும் நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களாக இருப்பதுடன் அவர்களுடைய அறிக்கைகள் இந்த அறிக்கையின் 65 ஆம் பக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### இலாபம் மற்றும் பகிர்வுகள்

2012 ஆம் ஆண்டுக்கான வங்கியின் மொத்த வருமானம் ரூ. 3,011 மில்லியன்கள் ஆகும். தேறிய வருமான பகுப்பாய்வொன்று 91 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

| | 2012 (ரூபா.000) | 2011 (ரூபா.000) |
|---|---|---|
| மொத்த வருமானம் | 3,010,507 | 2,687,223 |
| வட்டி வருமானம் | 2,931,312 | 2,611,206 |
| வட்டிச் செலவினங்கள் | 1,725,197 | 1,213,932 |
| தேறிய வட்டி வருமானம் | 1,206,115 | 1,397,273 |
| ஏனைய வருமானம் | 79,196 | 76,019 |
| தேறிய வருமானம் | 1,285,427 | 1,473,293 |
| கழி: தொழிற்பாட்டு செலவினங்கள் | 762,988 | 621,665 |
| பெ.சே.வரி | 92,174 | 146,557 |
| வரிக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம் | 430,264 | 688,578 |
| கழி: வரி விதிப்புக்கான ஏற்பாடுகள் | 157,802 | 178,309 |
| ஆண்டுக்கான இலாபம் | 272,462 | 510,269 |
| முன்கொண்டுவரப்பட்ட பிடித்து வைத்துள்ள இலாபம் | 1,743,969 | 1,579,827 |
| பகிர்வுக்காக உள்ள இலாபம் | 2,016,431 | 2,090,096 |
| பகிர்வுகள் | - | - |
| அறுதியிட்ட பங்கிலாப வரி | 79,262 | 176,560 |
| திரட்டு நிதிக்கு கொடுப்பனவு | 25,000 | - |
| ஒதுக்க நிதி மாற்றல் | 9,791 | 27,749 |
| முதலீட்டு நிதிக்கான மாற்றல் | 83,962 | 141,818 |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 1,818,416 | 1,743,969 |

### அறுதியிட்ட பங்கிலாபங்கள் மற்றும் ஒதுக்கங்கள்

2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க இறை வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆண்டுக்கான வரி விதிப்பின் பின்னரான தேறிய இலாபத்தின் மீது 25% 2012 ஆம் ஆண்டு தொடர்பாக உறுதியிட்ட பங்கிலாப வரியாக வழங்கப்பட்டது.

# பணிப்பாளர் அறிக்கை தொடர்ச்சி

### ஒதுக்கங்கள்

2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மொத்த ஒதுக்கமானது ரூ. 2,919,93 மில் (2011 - ரூ. 2753.41 மில்) ஆகும். பங்கு மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்றின் 74 ஆம் பக்கத்தில் அசைவுகள் காட்டப்பட்டுள்ளன.

### நிருவன நன்கொடைகள்

ஆண்டின் போது நன்கொடைகள் ஏதும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### மூலதனச் செலவினம்

வங்கியின் ஆதனம், பொறி, உபகரணம் மற்றும் மோட்டார் வாகனங்கள் பற்றிய விபரங்கள் குறிப்பு 98 ஆம் பக்க இல. காட்டப்பட்டுள்ளது.

### அசையாத சொத்துக்களின் சந்தைப் பெறுமதி

2012 ஆம் ஆண்டில் உள்ளவாறு அ.ஈ.மு.வ. சார்பாக இனங்காணப்பட்ட அசையாத சொத்துக்கள் ஏதும் இருக்கவில்லை.

### பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனம்

இலங்கை அரசாங்கமானது ரூ. 889.81 பில்லியன் தொகையான மூலதனத்தை பங்களிப்புச் செய்துள்ளது.

### கருதத்தகு பங்கு உரிமையும் பங்குகள் தொடர்பான தகவல்களும்

அ.ஈ.மு.வ. வங்கியின் மூலதனம் தொடர்பான ஏக உரிமையாளராக இலங்கை அரசாங்கம் உள்ளது. மேலதிக தகவல்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு இல. 22 இல் வழங்கப்பட்டுள்ளன.

### திரண்ட நிதிக்கான கொடுப்பனவு

2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆண்டு வரையான காலப் பகுதி தொடர்பாக திரண்ட நிதிக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 25 மில்லியன்கள் ஆகும்.

### நியம கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள், அவர்களின் சிறந்த அறிவிற்கும், நம்பிக்கைக்கும் ஏற்ப, அரசாங்கத்திற்கும், பணியாட் தொகுதியனருக்கும் நாளது வரையிலான, அனைத்து நியம கொடுப்பனவுகளையும் செய்துள்ளனர் என திருப்தி அடைகின்றனர்.

### வரியிடல்கள்

வங்கியின் செயற்பாடுகளிலிருந்து உருவாகும் வரியிடக்கூடிய வருமானத்தின் 28% இல் 2012 இற்கான வருமான வரி வழங்கப்பட்டுள்ளது.

### பிரயோகிக்கக் கூடிய சட்டங்கள் விதிமுறைகள் மீதான இணங்குவிப்பு

எமது சிறந்த அறிவிற்கு உட்பட்டவரை, வங்கி அல்லது எந்தவொரு சட்டத்தினாலும், வெளிப்படுத்தப்பட வேண்டும் என கூறும்படியாக சட்டங்கள் அல்லது விதிமுறைகள் மீறப்பட அல்லது மீறப்படுவதன் வாய்ப்புகள் இருக்கவில்லை. நிதியியல் தாக்கங்கள் அல்லது வேறு மாதிரியான, முகாமைத்துவம் அல்லது ஊழியர்கள் சம்பந்தப்பட்ட முறைகேடுகள் எவையும் இருக்கவில்லை.

### வாடிக்கையாளர்களும் கடன் பெறுனர்களும்

பெற்றுக் கொள்ளக் கூடிய வீதத்தில் வீடமைப்புக் கடன்களை வழங்குவது அஈமுவயின் பிரதான நோக்கங்களில் ஒன்று. இது விடயம் தொடர்பாக கிரமமான ஆய்வுகளை மேற்கொள்வதில் அஈமுவ விசேட கவனம் எடுக்கின்றது.

### வைப்பாளர்களும் வழங்குனர்களும்

வங்கியின் முக்கிய நிதி வழங்குனர்களாக வைப்பாளர்கள் உள்ளனர். வைப்பு வீதங்கள் பிரசுரிக்கப்படுகின்றன அவை போட்டித்தன்மையானவை. முதன்மையானவைகளும் மூலதனங்களும் உரிய திகதியில் உடனடியாகக் கொடுக்கப்படுகின்றன. பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்களுக்கு கோரல்கள் செய்வது வங்கியின் கொள்கையாக இருப்பதுடன், கொடுப்பனவுகள் உடனடியாக செய்யப்படுவதையும் உறுதிப்படுத்துகின்றது.

### சுற்றாடல் பாதுகாப்பு

அஈமுவயின் வர்த்தக நடவடிக்கைகள்யாவும் ஏதோ ஒரு வகையில் சுற்றாடலை பாதிக்கின்றன. சுற்றாடலினால் ஏற்படும் மோசமான விளைவுகளை குறைந்த மட்டத்தில் வைத்திருப்பது அஈமுவ யின் கொள்கையாகவுள்ளதுடன் தொடர்புடைய அதிகாரிகளுடனும், ஒழுங்கமைப்புகளுடனும் கூட்டுறவையும் இணங்குவிப்பையும் மேம்படுத்தவும் செய்கின்றது.

நிதிக் கூற்றுகளில், வெளிப்படுத்துவதற்கு தேவையான சீராக்கல்களுக்கான நிகழ்வுகள் ஐந்தொகை திகதியின் பின்னர் ஏற்படவில்லை.

### இயங்கிக் கொண்டிருக்கும் நிருவனம்

நிதிக் கூற்றுகளை மீளாய்வு செய்தல் மற்றும் உரிமையுள்ள பங்குடமையாளர்களின் ஈடுபாடு, எதிர்வு கூறல் வரவு செலவு திட்டம் என்பவற்றை நோக்கும் போது, கடன் அளிக்கும் தேவைப்பாடுகள் முதிர்வுகள், இருக்கின்ற பொறுப்புகள் என்பவையும் கருத்திற் கொள்ளப்பட்டன. மாறுகின்ற சூழ்நிலைக்கு ஏற்றவாறு நிதியியலை ஏற்றுக்கொள்ளுதல், உற்பத்தி மற்றும் சந்தை போக்குகள், ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவ உத்திகள், மற்றும் பலங்கள். பலவீனங்கள் வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பவை குறித்த வங்கியின் செயற்பாடுகளை தடை செய்யாது அண்மைய எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகளை தொடர்ந்து நடத்தி செல்வதற்கு போதுமான மூலவளங்களை வங்கி கொண்டிருந்ததென சபை திருப்தியடைகின்றது. எனவே, நிதிக் கூற்றுகளின் தயாரிப்பில் இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனம் என்ற அடிப்படையை நாங்கள் தொடர்ந்து பின்பற்றினோம்.

### பங்குடமையாளர்கள் அனைவரையும் சமமாக நடத்துவது

எமது பங்குடமையாளர்கள் அனைவரும் எம்மிடம் வருவதை நாங்கள் கௌரவிக்கும் அதே நேரம், எமது பங்குடமையாளர்கள் அனைவரும் சமமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்தவதற்கான முயற்சிகள் அனைத்தையும் வங்கி மேற்கொண்டுள்ளது.

### கணக்காய்வாளர்கள்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் இலக்க விதப்புரையின் ஏற்பாடுகளுக்கு ஏற்பவும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு கணக்காய்வாளர் தலைமையதிபதின் பணிப்புரைகளுக்கு கீழ் மேற்கொள்ளப்பட்டதுமான 31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கீடுகள்.

சபையின் கட்டளைக்கு இணங்க



சபைக்கான செயலாளர்

# சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை

### சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் தொகுப்பு

ஆண்டிறுதியின் போது, சபையினால் நியமிக்கப்பட்ட ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு பின்வரும் அங்கத்தினர்களைக் கொண்டிருந்தது.

திரு. வி.எம். அமீன்-தலைவர்-நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
திரு. சம்ராஸ் யெகியா-நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
திரு. டப்ளியு.எம்.டி.எஸ் ஹெசிந்-நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
திரு. டப்ளியு.எம். தயாசிங்க-பிரதம நிறைவேற்று அதிகாரி
திருமதி. டப்ளியு. கீகானகே-பிரதி பொது முகாமையாளர்-இணங்குவிப்பு
திருமதி. பி.எ.சி.கே. அமரசிங்க-உதவி பொது முகாமையாளர்-சட்டம்
திரு. டி.எம்.ஜே. விக்ரமசேகர-உதவி பொது முகாமையாளர்-அறவீடு
திருமதி. ஜே.ஐ. சேனாநாயக்க-உதவி பொது முகாமையாளர்-இடர் முகாமைத்துவம் (சஒஇமுகுவின் செயலாளர்)

27.03.2012இல் இடம்பெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையினால் அங்கத்தினர்கள் அனைவரும் நியமிக்கப்பட்டனர். குழுவில் மூன்று நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பளர்களும், சிரேஷ்ட முகாமைத்துவத்திலிருந்து ஐந்து அங்கத்தினர்களும் இடம் பெறுகின்றனர்.

10 - 11 பக்கங்களில் ஒவ்வொரு அங்கத்தினர்களினதும் சுருக்கமான விபரத்திரட்டு தரப்பட்டுள்ளது.

### சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் பட்டயம்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பு வங்கி நிருவன ஆளுமை மீதான 2007 இன் 12 ஆம் இல. பணிப்புரையின் 3 (6) (வி) பிரிவிற்கு இணங்குவிப்பாக, பணிப்பாளர் சபையினால் சஒஇமுகு நிறுவப்பட்டது.

27.03.2012 இல் நடந்த சபை கூட்டத்தில் சஒஇமுகு வின் பட்டயம் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் அதன் அதிகாரம், கட்டமைப்பு மற்றும் பொறுப்புகளை குறிப்பிடுகின்றது.

பட்டயத்திற்கு அமைவாக, சஒஇமுகு வின் முக்கிய பொறுப்புகள் பின்வருமாறு

- வங்கியின் வர்த்தகத்தை செயற்படுத்துவதற்கும் வங்கியினால் கைகொள்ளப்படும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் குறித்து புரிந்து கொள்வதற்கும் போதுமைத் தன்மையை அறிந்து கொள்ளுவதற்கும் பணிப்பாளர் சபைக்கு உதவுவது.
- வங்கியின் இடர் அவாவை மீளாய்வு செய்வது.
- நிறுவப்பட்டுள்ள இடர் மட்டங்களுக்கு அமைவாக, வங்கியின் முக்கிய இடர் கொள்கைகளை மீளாய்வு செய்வதும் அங்கீகரிப்பதும், மற்றும் முக்கிய மட்டங்களுக்கு வங்கியின் இணக்கப்பாடு மீதான அறிக்கைகளைப் பெறுவதும்.
- வங்கி முகங்கொடுக்க வேண்டியுள்ள இடர் வகைப் படுத்தல்கள் தொடர்பாக முகாமைத்துவத்திடமிருந்து அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வது, மீளாய்வு செய்வது மற்றும் கருத்துகளை வழங்குவது என்பவற்றுடன், கடன். சந்தை, திரவத்தன்மை செயற்பாட்டு இடர்கள் உள்ளடங்களாக ஒவ்வொரு வகைப்படுத்தலின் கீழான வெளிப்படுத்தல், குறிப்பிடத்தக்க அவதானிப்புகள் என்பவையும், அத்தகைய இடர் வகைப்படுத்தல்கள் தொடர்பாகவும். மற்றும் அத்தகைய இடர் வெளிப்படுத்தல்களின் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் பொருத்தமானதுமான வெளிப்படுத்தல் கண்காணிப்புகளுக்கு பயன்படுத்தப்பட்ட அளவீடுகளும் முகாமைத்துவக் கருத்துகளும் அவதானிக்கப்பட்டன.
- வங்கியின், முக்கிய கொள்கைகளும் முகாமைத்துவ இடர் வெளிப்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் நடைமுறைகளும் அமைப்பு முறைகளும் உள்ளடங்களாக. வங்கியின் கடன், சந்தை, திரவத் தன்மை மற்றும் செயற்பாட்டு இடர்களை முகாமைத்துவம் செய்யும் சட்டகம் மீளாய்வு செய்யப்பட்டது. அத்துடன், இடர் முகாமைத்துவ முறைமைகளும் அழுத்த பரிசோதனைகளுக்கான அணுகுமுறைகளும் ஏற்படுத்தப்பட்டன.
- இடர் முகாமைத்துவ நடவடிக்கையின் சுதந்திரத்தையும் அதிகாரத்தையும் மீளாய்வு செய்தது.
- முக்கியமான உள்ளீடுகைகள், ஊகங்கள் உள்ளடங்களாக, வங்கியின் இடர் மூலதன சட்டகத்தை மீளாய்வு செய்தது. (கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் செயற்பாட்டு இடர்கள்)

### சஒஇமுகு கூட்டங்கள்

சஒஇமுகு காலாண்டு அடிப்படையில் கூடும். ஆண்டின்போது, இடர் முகாமைத்துவ பிரிவின் தாபித்தலின்படி, வங்கி மூன்று கூட்டங்களை நடத்தியது. வருகை தந்திருந்த அங்கதினர்கள் பின்வருமாறு:-

| பணிப்பாளரின் பெயர் | வருகை தந்திருந்த கூட்டங்கள் |
|---|---|
| திரு. சம்ராஸ் யெகியா | 03 |
| திரு. வி. மொகமட் அமீன் | 03 |
| திரு. சரத் ஹேசிந் | 03 |

ஆண்டின்போது, சஒஇமுகு, குழுவிற்கென நியமிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக வர்த்தக செயற்பாடுகளை கையாள்வது, மறறும் இடர்களை முகாமைத்துவம் செய்வது போன்ற விடயங்களில் சிரேஷ்ட முகாமைத்துவ ஆளணியினருடன் மிகவும் நெருக்கமாக பணியாற்றியது.

### அறிக்கையிடல்

சஒஇமுகு வின் பரிந்துரையுடன், அங்கீகாரத்திற்காக சஒஇமுகு கூட்டங்களில் பிரேரிக்கப்பட்டு, கலந்துரையாடப்பட்ட செயன் முறைகள் சபைக்கு அறிவிக்கப்பட்டது. மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது சஒஇமுகு வினால் செய்யபப்பட்ட பரிந்துரைகள், எவ்வித மாற்றமும் இன்றி சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. சபையின் தகவலுக்கு தேவைப்படும் விபரங்களுடன் சஒஇமுகு வின் கூட்ட அறிக்கைகள் சபைக்கு அறிவிக்கப்பட்டன.



**வி. எம். அமீன்**
தலைவர் - சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு

30 மார்ச் 2013

# சபையின் கணக்காய்வு குழு அறிக்கை

வங்கியின் நிருவன ஆளுமை பிரயோகங்களின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வது சபை கணக்காய்வு குழுவின் (சககு) நோக்கமாகவுள்ளது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சககுவின் பட்டயம் குழுவின் பொறுப்புகளையும் நடவடிக்கைகளையும் தெளிவாக வரையறை செய்கின்றதுடன், 2007 இன் 12 ஆம் இல. மத்திய வங்கியின் பணிப்புரையில் தரப்பட்டுள்ள வழிகாட்டலுடன் இணங்கியதாகவு மிருக்கின்றது.

### குழுவின் தொகுப்பு

| | அங்கத்தினர் | சககு வின் அந்தஸ்த்து | குழு அங்கத்தினர் | | 2012 இன் போது, கூட்டத்திற்கு வருகை |
|---|---|---|---|---|---|
| | | | இலிருந்து | வரை | |
| 1 | திரு. வி. எம். அமீன் | தலைவர் | 2010 ஜனவரி | 23.04.2013 | 04 |
| 2 | திரு. வி. எஸ் பண்டார | அங்கத்தினர் | 2010 ஜனவரி | இன்று வரை | 04 |
| 3 | திருமதி. கே. டி. சி. கடனச்சி (வெளிநாட்டு அமைச்சிற்கு மாற்றமடைந்ததால் பதவி விலகியவர் | அங்கத்தினர் | 2011 ஏப்பிரல் | 2012 பெப்ரவரி | 01 |
| 4 | திரு. டப்ளியு. டப்ளியு. டி. சரத் ஹேரசித் | அங்கத்தினர் | 2012 டிசம்பர் | இன்று வரை | 01 |
| 5 | திரு. எஸ் எல். ஜி பந்துசிறி | அங்கத்தினர் | 2012 டிசம்பர் | இன்று வரை | 01 |
| 6 | திரு. சம்ராஸ் யெகியா | மாற்று அங்கத்தினர் | 2012 டிசம்பர் | இன்று வரை | 01 |

குழுவின் அங்கத்தினர்கள் மாற்று அங்கத்தினர்கள் அனைவரும் சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள் என்பதுடன் அவர்கள் கல்வித் தகைமையுள்ள நிதியியல் முகாமைத்துவமும் பெற்றவர்கள். சட்டம், கணக்கீடு, கணக்காய்வு மற்றும் நிதி துறைகளில் ஒவ்வொருவரும் அனுபவம் வாய்ந்தவர்கள்.

### குழுவின் செயற்பாடுகளும் பொறுப்புகளும்

வங்கியின் நிதியியல் மற்றும் செயற்பாட்டு அலுவல்களில் பணிப்பாளர் சபைக்கு உதவுவது சபையின் கணக்காய்வு குழுவின் நோக்கமாகும். சககுவின் நோக்கெல்லையில் உள்ளடங்குபவை.

- வங்கியின் கணக்குகளையும் செயற்பாட்டு கட்டுப்பாட்டு முறைமையையும் பேணுவதும் மீளாய்வு செய்வதும்.
- இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய பிரயோகிக்கப்படும் விதிமுறைகள், ஒழுங்கமைப்புகளுடன் நிதியியல் கூற்றுகளின் இணங்குவிப்பை பரீட்சித்தல்.
- ஆண்டுதோறும், உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் இடர் அடிப்படையிலான நோக்கெல்லையையும் நேர்மையையும் மீளாய்வு செய்வதும் கண்காணிப்பதும்.
- வெளியக கணக்காய்வாளர்களுடன், அவர்களின் கணக்காய்வு நோக்கெல்லை மற்றும் அறிக்கைகள் தொடர்பாக இணைப்பினை ஏற்படுத்துவது.
- உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கான சரிப்படுத்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதும் மீளாய்வு செய்வதும்.
- பணியாளர்களின் ஒழுங்காற்று தொடர்பான விடயங்களை மீளாய்வு செய்வது, முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நோக்கத்துடன், சட்டத்திற்கு புறம்பானதும் மற்றும் ஊழல் பிரயோகங்களையும் தவிர்ப்பது.
- வங்கியின் நிதி, அறிக்கையிடல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பின் போதுமையையும் பயனாற்றலையும் உள்ளக கணக்காய்வு குழுவின் உதவியுடன் மீளாய்வு செய்வது.
- வங்கியின் முகாமைத்துவ தகவல் அமைப்பு மற்றும் ததொ ஆளுமை என்பவற்றின் நம்பகத் தன்மையையும் பயன்பாட்டையும் மீளாய்வு செய்வதும் பேணுவதும்.
- வர்த்தகத்தின் நிதி அந்தஸ்து மற்றும் அலுவல்கள் மீதான குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும் அனைத்து விடயங்கள் குறித்தும் சபை அறிந்திருப்பதை குழு உறுதிப்படுத்துவது.
- வங்கியினால் சந்திக்கப்படும், இடர்களை தவிர்ப்பதற்கு/ குறைப்பதற்கு, உள்ள உள்ளக ஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமையை மீளாய்வு செய்வது.

### கூட்டங்கள்

2012 டிசம்பரில் முடிவடைந்த நிதி ஆண்டின் போது நான்கு கூட்டங்கள் நடந்தன. கூட்டத்தில் எடுக்கப்பட்ட விடயங்களின் சுருக்கம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

## சபையின் கணக்காய்வு குழு அறிக்கை தொடர்ச்சி

**வரவு செலவுதிட்ட செயலாற்றல்கள்**

நிதி திரட்டல்கள் மீதான வரவு செலவு திட்ட இலக்குகளின் முன்னேற்றங்களையும், கடன் தொடர்பான நடவடிக்கைகளையும் குழு மீளாய்வு செய்தது.

**நிதி அறிக்கையிடல்**

பணிப்பாளர் சபையின் சார்பாக, குழு, புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும் ஏனைய ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளுக்கு ஏற்பவும் காலாண்டு/வருடாந்த நிதிக் கூற்றுகளின் தயாரிப்பையும் வெளியிடலையும் மீளாய்வு செய்ததுடன், பணிப்பாளர் சபைக்கு அறிக்கையை சமர்ப்பிக்கவும் செய்தது.

**ஒழுங்கமைப்பு இணங்குவிப்பு**

ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் அனைத்துடனும் ஒத்துப் போவதாக வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக குழு காலாண்டு மீளாய்வுகளை மேற்கொள்ளுகின்றது.

**உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்**

குழுவினால் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு பிரதியுத்தரமாக, உள்ளக கணக்காய்வு பிரிவினால் தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு கையேட்டை பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளது.

2013 ஆம் ஆண்டிற்கான இடர் அடிப்படையிலான உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தை, மீளாய்வு செய்து பரிந்துரைத்துள்ளது.

வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான உள்ளக கணக்காய்வு அறிக்கைளுக்கு முகாமைத்துவத்தின் பதில்களை குழு கண்காணித்துள்ளதுடன் மீளாய்வும் செய்துள்ளது. உள்ளக கணக்காய்வு பிரிவின் செயலாற்றல்களின் திறமையை குழு மீளாய்வு செய்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒத்ததாக, உள்ளக கணக்காய்வு பணிகளின் போதுமை இருப்பதையும் கண்காணித்துள்ளது.

**வெளியக கணக்காய்வு அறிக்கைகள்**

இறுதியாக கணக்காய்வு அறிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ள வெளியக கணக்காய்வு அவதானிப்புகளை குழு மீளாய்வு செய்துள்ளதுடன், வெளியக கணக்காய்வாளர்களின் அவதானிப்புகளுக்கு முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டுள்ள சரிப்படுத்தல் நடவடிக்கைகளின் போதுமையையும் மீளாய்வு செய்துள்ளது.

**உள்ளக கட்டுப்பாடுகளின் அமைப்பு**

உள்ளக கட்டுப்பாடுகளின் அமைப்பின் கையேட்டில் வரையறுக்கப்பட்டுள்ள உள்ளக கட்டுப்பாடுகளின் அமைப்புடன் ஒத்துப் போகத்தக்கதாக வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான தகவல் தொழில்நுட்பம் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு திறமையானதாக விருப்பதை, பணிப்பாளர் சபையின் சார்பாக, குழு மீளாய்வு செய்தது.

**வி. எம் அமீன்**
குழுவின் தலைவர்

# பணிப்பாளர்களின் பொறுப்புகளின் கூற்று

1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளினதும், அதன் 46 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினதும் பிரகாரம். தயாரிக்கப்பட்ட, வங்கியினது நிதி கூற்றகள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புகள், பின்வரும் கூற்றுகளில் தரப்பட்டுள்ளது.

1975 இன் 13 ஆம் இல. அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7 & 8 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக திருத்தப்பட்ட அலுவல்களின் பொது கண்காணிப்பு கட்டுப்பாடும் நிர்வாகமும், மற்றும் வங்கியின் வர்த்தகம் என்பவை தலைவரினால் தலைமை தாங்கப்படும் பணிப்பாளர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வங்கியின் அலுவல்களை கொண்டு செல்வதற்கு அவசியமான அதிகாரங்கள், நடவடிக்கைகள் மற்றும் காரியங்கள் அனைத்தையும் சபை கைக்கொள்ளும்.

வங்கியின் ஈடுபாடுகளை பாதுகாப்பதும் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதும் பணிப்பளர்களின் பொறுப்பு என்பதுடன், வங்கியின் வைப்பாளர்கள். கடனாளிகள், பங்குரிமையாளர்கள் மற்றும் எனைய பங்குடமையாளர்களின் ஈடுபாடுகளை உறுதி செய்வதும் பணிப்பாளரின் பொறுப்பாகும்.

அரசாங்கத்திற்கு சொந்தமான வங்கியின் பணிப்பாளர்கள், நாட்டு மக்களுக்கு பொறுப்புடையவர்களாக இருப்பதால், தமது கடமைகள், கடப்பாடுகள் பொறுப்புகள் மற்றும் தவறுதல்களினாலும், கவனக் குறைவினாலும் ஏற்படும் தாக்கங்கள் என்பவை குறித்து நன்கு அறிந்திருக்க வேண்டும்.

1988 இன் 30 ஆம் இல வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பணிப்பாளர்கள் ஒவ்வொரு நிதி ஆண்டிலும் நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் தேவைப்பாட்டைக் கொண்டுள்ளதுடன் பொதுக் கூட்டம் ஒன்றின் முன் அளிக்கவும் வேண்டும்.

வங்கியின் நிதியியல் கூற்றுகள் உண்மையும் நியாயமானதுமாக பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

1. 31 டிசம்பர் 2012 அன்றுள்ளவாறு வங்கியின் அலுவல்களை தருகின்றது.
2. அப்போது முடிவடைந்த நிதி ஆண்டிற்கான வங்கியின் இலாபம் அல்லது நட்டம்.

நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் தொடர்பாக பணிப்பாளர்கள் கீழ் வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

1. பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதை மற்றும் நிலையான விதத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ளமை பற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் விபரிக்கப்பட்டுள்ளமை.
2. நியாயமானதும் புத்திசாதுர்யமாகவும் தீர்ப்புக்கள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை.
3. பொருத்தமான சகல பிரயோகிக்கத்தக்க கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டுள்ளமை.
4. நிதியியல் அறிக்கை மீதான உள்ளக கட்டுப்பாடு திறமையாக உள்ளமை.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 1988 இன் 30 ஆம் இல. வங்கிச் சட்டமும், அதன் திருத்தங்களும் ஆகியவற்றின் தேவைப்பாடுகளுடன் ஒத்ததாக 2012 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

இந்த நிதி கூற்றுகள் வெளியிடப்படுவதற்கு முன்னர் வங்கியின் கணக்காய்வு குழு கணக்குகளை மீளாய்வு செய்வதுடன் சபைக்கு பரிந்துரைக்கும்.

வங்கியின் சொத்துகளை பாதுகாப்பதற்கு நியாயமான நடவடிக்கைகளை பணிப்பாளர்கள் சபை எடுத்துள்ளது. ஏதாகினும் மோசடிகளும் வேறு ஏதாகினும் ஒழுக்கமின்மைகளும் தடைசெய்யப்படுவதற்கும் கண்டுபிடிக்கப்படுவதற்கும் சபை நடவடிக்கை எடுக்கும். இந்த நோக்கத்திற்காக, உள்ளக கணக்காய்வு, உள்ளக சரிபார்த்தல்கள், நிதியியல் மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய, திறமையும் முழுமையுமான உள்ளக கட்டுப்பாட்டு முறை ஒன்றை பணிப்பாளர்கள் நிறுவியுள்ளனர். ஒழுங்கான ஒரு முறைமையின் கீழ் செயற்பாடுகள் சொத்துகளை பாதுகாப்பதுடன் இயலுமான வரையிலும் சரியாகவும் நம்பகத் தன்மையுடனும் பதிவேடுகளை பாதுகாக்கின்றது.

வங்கியினால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய அனைத்து வரிகள், சுங்க வரிகள், தீர்வைகள். மற்றும் வங்கியின் ஊழியர்கள் சார்பானதும், தொடர்பானதுமான வங்கியினால் கொடுப்பனவு செய்யப்படும் அனைத்து பங்களிப்புகள், தீர்வைகள், வரிகள், மற்றும் அறியப்பட்டுள்ள அனைத்து நியம கொடுப்பனவுகள், என்பவை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன அல்லது ஏற்றவாறு வழங்கப்பட்டன என, தமது சிறந்த அறிவிற்கு ஏற்ப பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

எதிர்வரும் காலத்தில். இயங்கிக் கொண்டிருக்கும் நிருவனமாக இருப்பதற்காக, செயற்பாடுகளை தொடர்வதற்கு வங்கியிடம் போதுமான மூலவளங்கள் உள்ளன.

மேலேயுள்ள கூற்றில் தரப்பட்டுள்ளவாறு தமது பொறுப்புகளை நடத்திச் சென்றுள்ளதாக பணிப்பாளர்கள் நம்புகின்றனர்

சபையின் கட்டளைப்படி

**சபையின் செயலாளர்**
கொழும்பு, இலங்கை

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல
My No. } எவ்பி/ஈ/எஸ்எம்ஜபி/எவ்ஏ/2012

ඔබේ අංකය
உமது இல
Your No. }

දිනය
திகதி
Date } 2013 செப்தெம்பர் 06

தலைவர்,
அரச ஈட்டு முதலீட்டு வங்கி

**அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

அரச ஈட்டு, முதலீட்டு வங்கியின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று. முழுமையான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசோட்டக்கூற்று என்பவற்றையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் வங்கியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2013 யூன் 12 இல் வங்கியின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்த நியாயமாகச் சமாப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல் களையும் பற்றிய கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. } 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

### 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் உள்ளவாறான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிரயாமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எல்கேஏஎஸ் 19 இன்படி, வடிவமைக்கப்பட்ட நலத்திட்டத்தின் கீழ் கடப்பாட்டை நிறைவேற்றும் நோக்கத்துடன் தொழில்கொள்வோனால் உதவுதொகை முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படி (எஸ்எல்எவ்ஆர்எஸ் மற்றும் எல்கேஏஎஸ்) நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பொதுப் பேரேட்டுக் கணக்குகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளை வெளிப்படுத்தும் விதத்தில் நாளதுவரையறுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 இல் ரூபா 3,512,268 தொகையான மூன்று முதலீடுகளிலிருந்து கழிக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தவறினை திருத்துவதுடன் தொடர்புபட்ட வருமானங்களிற்கு எதிராக சாட்டுதல் செய்வதற்குப் பதிலாக, 2012 இல் வர்த்தக தாள்களின் வட்டி வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 08 விலைப் பட்டியல்களின் மீது இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,150,000 ஆன தொகை 2009 ஆம் ஆண்டிலிருந்து தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்தது. எனினும் இது மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் ஒரு பொறுப்பாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 309,000 தொகையான இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் மூன்று விலைப்பட்டியல்கள் இரண்டு தடவை தீர்ப்பனவு செய்யப்படாமையால் ரூபா 309,000 ஆன மேலதிக கொடுப்பனவு ஏற்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்குகளின் கணக்கிணக்கம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட முறையே ரூபா 8,561,853 மற்றும் ரூபா 4,874,419 தொகையான மீதிகள் 2005 இலிருந்து கணனிமயப்படுத்தப்பட்ட முறைமையுடன் இணக்கம் செய்யப்படாமல் இருந்தன.

(ஆ) ரூபா 50,000 தொகையான இணக்கம் செய்யப்படாத வரவு மீதியொன்று இனங்காணப்படாமல் 2006 இலிருந்து 309-1-001-2-2536402 ஆம் இலக்க மக்கள் வங்கிக் கணக்கில் இருந்தது.

### 2.2.4. விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

(அ) கணக்காய்வில் பின்வரும் விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| கிளை | கணக்கு | காசுப்பாய்ச்சல் கூற்றின்படி மீதி ரூபா | நிதிக் கூற்றுக்களின் படி மீதி ரூபா | வித்தியாசம் ரூபா |
|---|---|---|---|---|
| சிலாபம் | கையிலுள்ள காசு | 634,843 | 1,254,074 | 619,230 |
| கண்டி | கையிலுள்ள காசு | 2,177,333 | 2,792,595 | 615,261 |

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்கள் தொடர்பான பதினைந்து கிளைகளில் ரூபா 10,802,272,919 கூட்டு மொத்தத் தொகையான பேரேட்டு மீதிகளிற்கும் ரூபா 10,868,618,771 கூட்டுமொத்தத் தொகையான கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை மூலம் உருவாக்கப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 66,345,852 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 3,358,355,358 கூட்டு மொத்தத் தொகையான பெறவேண்டிய மொத்தக் கணக்கு மீதிகளில், 2013 மார்ச் 31 வரை ரூபா 330,753,858 தொகை அல்லது 9.85 சதவீதம் உரிய பகுதியினரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 5,842,122,106 கூட்டு மொத்தத் தொகையான செலுத்தவேண்டிய மொத்தக் கணக்கு மீதிகளில், 2013 மார்ச் 31 வரை ரூபா 1,236,914,346 தொகை அல்லது 21.17 சதவீதம் உரிய வாடிக்கையாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பொதுத் திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 134,321,918 தொகையான அட்டுறு வட்டி நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்தது.

(ஈ) 2011 ஆம் ஆண்டிலிருந்து வங்கியின் பல்வேறு நிறுவனங்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 1,298,657 கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்கள் 2013 மே 08 வரை கூட தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களை அவை ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட சான்றுகள் இன்மை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

| விடயம் | பெறுமதி | கிடைக்கப் பெறாத சான்றுகள் |
|---|---|---|
| றோயல் கல்லூரியில் "சாகா" சங்கீத கச்சேரி | 100,000 | பற்றுச்சீட்டுக்கள் |
| நலன்புரிச் சங்கத்திற்கான சங்கீத கச்சேரிக்கான கொடுப்பனவு | 500,000 | பட்டியல்கள் |
| குவைற்றில் புதுவருட கொண்டாட்டத்திற்காக செய்யப்பட்ட அனுசரணைகள் மற்றும் செலவினம் | 566,700 | விரிவான அனுசரணை பட்டியல்கள் மற்றும் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் |

### 2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 133 ஆம் பிரிவு | உரிய திகதிகளில் வருமான பிரகடனங்களை பெற்றுக் கொள்ளாமை மற்றும் பிடித்து வைத்தல் வரியை செலுத்தாமை என்பது அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலிருந்தன. |
| (ஆ) 2006 இன் 6 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் அதிகாரச்சட்டம் | வைப்பாளர்கள் மற்றும் கிளை உத்தியோகத்தர்களின் கையொப்பங்கள் "உங்களுடைய வாடிக்கையாளரை" அறியாமல் படிவத்தில் பெறப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள், கணனி உபபாகங்கள் மற்றும் மென் பொருட்களின் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நிதிப்பிரமாணம் 395(சீ) | தலைமை அலுவலகம் தொடர்பான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் உரிய திகதிகளில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) தாபனவிதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | வியாபார வகுப்பை பயன்படுத்தி சென்ற வெளிநாட்டுப் பிரயாணத்திற்காக ரூபா 513,500 செலவழிக்கப்பட்டிருந்தது. தாபன விதிக் கோவையின்படி, விமானப் பயணம் சிக்கன வகுப்பில் மாத்திரம் அனுமதிக்கப்பட்டிருந்தது. |

### 2.2.8 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரமுடைய உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறாமல் காலிக் கிளையில் 04 சந்தர்ப்பங்களில் ரூபா 867,242. கூட்டு மொத்தத் தொகையான நிலையான வைப்பு மீதான கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) நிலையான வைப்புக் கடன்கள் பதிவேட்டில் வாடிக்கையாளரின் கையொப்பம் பெற்றுக் கொள்ளாமல் வாடிக்கையாளருக்கு ரூபா 1,039,145 கூட்டுமொத்தத் தொகையான நிலையான வைப்புக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) ரூபா 250,000 அளவிற்கு தலைவருடைய கடனட்டை பட்டியலை மீளளிக்கப்படுவதற்கு சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது ரூபா 727,962 ஆன தொகை மீளளிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. மேலும், விலைப்பட்டியல்கள் அல்லது பற்றுச்

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

சீட்டுக்கள் மூலம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் ஆதாரப்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப் பட்டது. எனவே, கடனட்டைப் பட்டியலின் தொகையின் மீளளிப்பு நோக்கங்கள் கேள்விக்குரியதாக உள்ளது.

ஈ) ரூபா 8,649,997 தொகையான ஊழியர்களின் சம்பளங்கள் மீதான உழைக்கும் போதே செலுத்தும் வரி பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் ஊழியர்களின் சார்பில் வங்கியால் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.9 இணங்காணப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 1,584,145 கூட்டு மொத்தத் தொகையான வைப்புக்கள் இனங்காணப்படாத வைப்புக்களாக காட்டப்பட்டிருந்தது.

### 2.2.10 மோசடிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோரின் கீழ் மோசடிக் கணக்கில் ரூபா 2,400,000 ஆன மீதி காட்டப்பட்டிருந்தது. நிலுவையிலிருக்கின்றவை நீதி மன்ற வழக்குகள் மற்றும் 1996 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட முறையே ரூபா 800,000 மற்றும் ரூபா 1,600,000 ஆன கடன்களை இது பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

(ஆ) 2008 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 09 விலைப் பட்டியல்களிற்காக ரூபா 945,000 உம் 03 விலைப்பட்டியல்களிற்காக ரூபா 315,000 உம் கூட்டு மொத்தத் தொகையுமான கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. வங்கியின் பொது முகாமையாளர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு 07 விலைப் பட்டியல்களிற்காக ரூபா 402,500 மாத்திரமேயான கொடுப்பனவு செய்வதற்கு எழுத்து மூல அறிவுறுத்தல்கள் வழங்கியிருந்தார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் காசோலைகள் வரையப்பட்டதுடன் வங்கியிலிருந்து காசோலையைப் பெற்ற நபர் அவற்றினை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ கணக்கு அல்லாத இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் கணக்கினைத் திறந்து வைப்புச் செய்திருந்தார். ஆகவே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் விலைப் பட்டியல்களின் கொடுப்பனவுக்கான பொறுப்பு இன்னமும் நிலுவையாக இருந்தது.

**எச்.எ.எஸ். சமரவீர**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# நிதி நிலைமையின் கூற்று

| 31 டிசம்பர் அன்றுள்ளவாறு | குறிப்பு | 2012 ரூபா | 2011 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|---|---|
| **சொத்துகள்** | | | | |
| காசும் காசுக்கு சமனானவையும் | 9 | 30,932,075 | 32,760,719 | 39,271,350 |
| வங்கிகளுடன் வைத்துள்ளவை | 10 | 3,249,719,268 | 3,859,378,141 | 2,847,295,553 |
| வாடிக்கையாளர்களுக்கு கடன்களும் கிடைக்க வேண்டியவையும் | 11 | 18,315,422,376 | 16,170,476,100 | 14,430,361,399 |
| நிதியியல் முதலீடுகள் - விற்பனைக்கு கிடைக்கக் கூடியவை | 12 | 19,644,078 | 21,324,078 | 24,699,078 |
| நிதியியல் முதலீடுகள் - முதிர்விற்கு வைத்துள்ளவை | 13 | 296,742,675 | 92,359,085 | 341,202,248 |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் | 14 | 50,755,258 | 57,989,091 | 39,122,827 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள் | 15 | 50,419,175 | 51,891,266 | 53,729,963 |
| ஏனைய சொத்துகள் | 16 | 345,199,151 | 223,113,817 | 205,090,878 |
| **மொத்த சொத்துகள்** | | **22,358,834,058** | **20,509,292,298** | **17,980,773,295** |
| **பொறுப்புகள்** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | 17 | 23,630,116 | 386,205,707 | 21,105,870 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 18 | 17,236,563,604 | 15,088,049,691 | 13,196,931,272 |
| எனைய கடன் பெறுகைகள் | 19 | 733,889,904 | 668,229,672 | 697,848,914 |
| ஊழியர் நன்மை பொறுப்புகள் | 20 | 191,126,904 | 192,952,327 | 201,393,195 |
| ஏனைய பொறுப்புகள் | 21 | 363,881,240 | 530,632,628 | 550,605,755 |
| **மொத்த பொறுப்புகள்** | | **18,549,091,767** | **16,866,070,025** | **14,667,885,005** |
| **பங்கு மூலதனம்** | | | | |
| குறிக்கப்பட்ட மூலதனம்/நியமிக்கப்பட்ட மூலதனம் | 22 | 889,812,899 | 889,812,899 | 889,812,899 |
| நியம ஒதுக்கு நிதி | 23 | 172,981,335 | 163,190,403 | 135,441,590 |
| பிடித்துவைத்துள்ள வருவாய் | 24 | 1,818,415,609 | 1,743,968,971 | 1,579,826,801 |
| ஏனைய ஒதுக்குகள் | 25 | 928,532,447 | 846,250,000 | 707,807,000 |
| **மொத்த பங்கு மூலதனம்** | | **3,809,742,291** | **3,643,222,273** | **3,312,888,290** |
| **மொத்த பங்கு மூலதனமும் பொறுப்புகளும்** | | **22,358,834,058** | **20,509,292,298** | **17,980,773,295** |
| **ஏற்படக்கூடிய பொறுப்புகளும் கடப்பாடுகளும்** | 26 | - | - | - |

சான்றிதழ்:

(அ) இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட மாதிரி மற்றும் வரைவிலக்கனங்களுக்கு இணங்கியதாக, மேலேயுள்ள கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும்

(ஆ) இக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள், வங்கியின் கணக்காய்வு பெறப்பட்டுள்ளன. இந்த நிதியியல் கூற்றுகளின் தயாரிப்பிற்கும், வெளியிடல்களுக்கும் பணிப்பாளர் சபை பொறுப்பேற்பதுடன் இந்த வரைவு நிதியியல் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளது என்றும்,

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் தலைவர், பதில் பொது முகாமையாளர், மற்றும் உதவி பொது முகாமையாளர் (நிதி) ஆகிய நாங்கள் கூட்டாக சான்றுதிப்படுத்துகின்றோம்.

**ஜகத் வெள்ளவத்த**
தலைவர்

**டபிள்யு. கீகனகே**
பதில் பொது முகாமையாளர்

**ஈ.எம்.ஆர் லலித் முனவீர**
உதவி பொது முகாமையாளர் (நிதி)

# வருமானக் கூற்று

| 31 டிசம்பர் இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | | 2,931,312,254 | 2,611,205,626 |
| வட்டி செலவினம் | | (1,725,196,745) | (1,213,932,409) |
| **தேறிய வட்டி வருமானம்** | 1 | **1,206,115,509** | **1,397,273,217** |
| கட்டணங்களும் தரகும் வருமானம் | | 72,580,010 | 64,510,890 |
| கட்டணங்களும் தரகும் செலவினம் | | - | - |
| **தேறிய கட்டணங்களும் தரகும் வருமானம்** | 2 | **72,580,010** | **64,510,890** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறிய) | 3 | 6,615,513 | 11,508,471 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | | **1,285,311,032** | **1,473,292,578** |
| கடன்களுக்கும் ஏனைய நட்டங்களுக்கும் பெறுமதி குறைப்பு | 4 | 116,716 | (16,492,209) |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | | **1,285,427,748** | **1,456,800,369** |
| ஆளணி செலவுகள் | 5 | (515,731,406) | (388,026,224) |
| ஏனைய செலவுகள் | 6 | (247,257,319) | (233,639,563) |
| **பெறுமதி சேர்ந்த வரிக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | **522,439,023** | **835,134,582** |
| நிதியியல் சேவைகள் மீது பெறுமதி சேர்த்த வரி | | (92,174,295) | (146,556,814) |
| **வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)** | | **430,264,728** | **688,577,768** |
| வரி செலவுகள் | 7 | (157,802,290) | (178,308,921) |
| **ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | **272,462,439** | **510,268,848** |

# முழுமையான வருமானத்தின் கூற்று

| 31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|---|
| **ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | 272,462,439 | 510,268,848 |
| **ஏனைய முழுமையான வருமானம், வரி தேறியது** | | | |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதியியல் சொத்துகளை மீள் அளவிடலின் மீது இலாபமும் நட்டமும் | (1,680,000) | (3,375,000) | |
| **ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம்** | | **270,782,439** | **506,893,848** |

# பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று

| 31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | பங்களிக்கப்பட்ட மூலதனம் ஆண்டிற்கானது ரூபா | நியம ஒதுக்கு மூலதனம் ரூபா | மூலதன ஒதுக்கு ரூபா | பொது ஒதுக்கு ரூபா | உரிமை நட்டோத்தர வாத நிதியம் ரூபா | முதலீட்டு நிதியம் ரூபா | பிடித்துவைத்த பெறுகைகள் ரூபா | ஏஎப்எஸ் ஒதுக்கு ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31.12.2010 அன்றுள்ளவாறு மீதி | 889,812,899 | 135,441,590 | 9,176,000 | 683,280,000 | 1,031,000 | - | 1,579,826,800 | 14,320,000 | 3,312,888,289 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | | | | | | | 510,268,984 | | 510,268,984 |
| அறுதியிட்ட பங்கிலாப வரி | | | | | | | (176,560,000) | | (176,560,000) |
| ஏனைய முழுமையான வருமானம் | | | | | | | | (3,375,000) | (3,375,000) |
| ஆண்டின் போது மாற்றம் | | 27,748,813 | | | | | (27,748,813) | | - |
| முதலீட்டு நிதியத்திற்கு மாற்றம் | | | | | | 141,818,000 | (141,818,000) | | - |
| **31.12.2011 அன்றுள்ளவாறு மீதி** | **889,812,899** | **163,190,403** | **9,176,000** | **683,280,000** | **1,031,000** | **141,818,000** | **1,743,968,971** | **10,945,000** | **3,643,222,273** |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | | | | | | | 272,462,440 | | 272,462,440 |
| அறுதியிட்ட பங்கிலாப வரி | | | | | | | (79,262,420) | | (79,262,420) |
| ஏனைய முழுமையான வருமானம் | | | | | | | | (1,680,000) | (1,680,000) |
| ஆண்டின் போது மாற்றம் | | 9,790,932 | | | | | (9,790,932) | | - |
| முதலீட்டு நிதியத்திற்கு மாற்றம் | | | | | | 83,962,447 | (83,962,447) | | - |
| திரட்டு நிதியத்திற்கு மாற்றம் | | | | | | | (25,000,000) | | (25,000,000) |
| **31.12.2012 அன்றுள்ளவாறு மீதி** | **889,812,899** | **172,981,335** | **9,176,000** | **683,280,000** | **1,031,000** | **225,780,447** | **1,818,415,611** | **9,265,000** | **3,809,742,292** |

# காசுபாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2012 ரூபா | 2011 ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| கிடைத்த வட்டி | | 2,393,616,140 | 2,313,826,339 |
| வட்டி கொடுப்பனவுகள் | | (1,725,196,745) | (1,213,932,409) |
| பணியாளர்களுக்கும் வழங்குனர்களுக்கும் காசு கொடுப்பனவு | | (428,322,435) | (383,654,000) |
| ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பற்றுச் சீட்டுகள் | | 76,975,251 | 74,092,861 |
| ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளின் மீது கொடுப்பனவுகள் | | (228,403,448) | (220,941,575) |
| **செயற்பாட்டு சொத்துகளின் மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | | **88,668,763** | **569,391,216** |
| **செயற்பாட்டு சொத்துகளின் (அதிகரிப்பு)/குறைவு** | | | |
| வாடிக்கையாளர்களுக்கு முற்பணமாக கொடுத்த நிதியம் | | **(2,189,754,654)** | **(1,772,178,155)** |
| ஏனைய குறுங்கால பிணையங்கள் | | 745,356,070 | (1,001,865,819) |
| | | (1,444,398,584) | (2,774,043,974) |
| **செயற்பாட்டு பொறுப்புகளின் அதிகரிப்பு /(குறைவு)** | | | |
| வாடிக்கையாளரிடமிருந்து வைப்புகள் | | 1,805,460,389 | 1,884,464,319 |
| ஏனையவைகள் | | 16,735,755 | 45,457,839 |
| | | **1,822,196,144** | **1,929,922,158** |
| **வருமான வரிக்கு முந்திய செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு** | | **466,466,322** | **(274,730,600)** |
| வருமானவரியும், செலுத்தப்பட்ட அறுதியிட்ட பங்கிலாப வரியும் | | (429,038,000) | (581,747,000) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு** | | **37,428,322** | **(856,477,600)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| பெறப்பட்ட பங்கிலாபங்கள் | | 2,370,750 | 1,926,500 |
| ஆதணங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | | 248,000 | - |
| ஆதணங்கள் மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்து வருவாய் | | (9,212,000) | (31,564,000) |
| ஏனைய வங்கிகளுடன் வைப்புகளிலிருந்து கிடைத்த வட்டி | | 442,846,343 | 269,184,403 |
| அரசாங்க பிணையங்களிலிருந்து கிடைத்த வட்டி | | 30,051,668 | 27,125,709 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு | | **466,304,761** | **266,672,612** |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| தொகுதிக் கடன்களின் மீள் கொடுப்பனவு | | - | - |
| கடன்களின் மீள் கொடுப்பனவு | | (16,334,822) | (29,619,000) |
| கடன்பெறுகைகளிலிருந்து வருவாய்கள் | | 81,995,053 | - |
| திரட்டு நிதியத்திற்கான கொடுப்பனவுகள் | | (25,000,000) | - |
| நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு | | **40,660,231** | **(29,619,000)** |
| காசும் காசிற்கு சமனானவற்றிலும் தேறிய அதிகரிப்பு | | 544,393,314 | (619,423,988) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமனானவையும் | | (261,827,988) | 357,596,000 |
| ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமனானவையும் | | **282,565,326** | **(261,827,988)** |
| **காசும் காசுக்கு சமனானவற்றினதும் கணக்கிணக்கம்** | | | |
| காசும் குறுங்கால நிதியமும் | | 30,932,075 | 32,760,719 |
| இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்கள் | | 275,263,367 | 91,617,000 |
| வங்கிகளிடமிருந்து கடன் பெறுகைகள் | | (23,630,116) | (386,205,707) |
| | | **282,565,326** | **(261,827,988)** |

# கணக்கீட்டு கொள்கைகள்

## 1. நிறுவனத் தகவல்

### 1.1 பொது

06 டிசம்பர் 1931 இல், இலங்கை அரச ஈட்டு வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கியாக ஒன்றிணைக்கப்பட்டது. 1975 இன் 13 ஆம் இல. அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் சட்டத்தினால், வங்கி நிறுவப்பட்டது. இலங்கை அரச ஈட்டு வங்கி மற்றும் விவசாயமும் கைத்தொழிலும், கடன் கூட்டுத்தாபனம் என்பவற்றை ஒன்றிணைத்ததாக இது 1943 இல் தாபிக்கப்பட்டது.

### 1.2 முக்கிய நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் முக்கிய செயற்பாடு வீடமைப்பு நிதி வழங்களாக இருப்பினும் உருவாகிவரும் போட்டிகளுக்கு முகங்கொடுப்பதற்காக அண்மைக் காலத்தில் வாகனக் கடன்கள் மற்றும் சுயதேவைக் கடன்கள் போன்ற ஏனைய கடன் வசதிகளையும் பன்முகப்படுத்தி வருகின்றது.

### 1.3 பணிப்பாளர்களின் பொறுப்பேற்றல் கூற்று

2007 இன் 07 ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும். இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத் (SLFRS) திற்கும் அமைவாக, இந்த நிதிக் கூற்றுகளின் தயாரிப்பிற்கும், வெளியிடலுக்கும் பணிப்பாளர் சபை பொறுப்பேற்கின்றது.

### 1.5 அதிகாரமளிக்கப்பட்ட திகதி

31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் நிதியியல் கூற்றுகள் 28.02.2013 அன்று பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக, வெளியிடப்படுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டது.

31 டிசம்பர் 2012 அன்றுள்ளவாறு, வங்கியின் பதவியினரின் வலு 323 ஆகும். (31 டிசம்பர் 2011 இல் 302).

## 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1. தயாரித்தலுக்கான அடிப்படை

இது வரையான காலங்கள் அனைத்திற்கும் 31 டிசம்பர் 2011 இல் முடிவடைந்த ஆண்டு உள்ளடங்களாக, வங்கி அதன் நிதி கூற்றுகளை 31 டிசம்பர் 2011 அன்றுள்ளவாறு பிரயோகிக்க கூடியதாக இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தயாரித்துள்ளது. 31 டிசம்பர் 2012 இன் ஆண்டிறுதிக்கான இந்த இநிகநி 1 ஜனவரி 2012 இலிருந்து நடைமுறைக்கு வருவதுடன், (2011 உம் 2012 உம்) இதன் ஒப்பீடுகள் மீள் அளவீடும் செய்யப்படுகின்றன. எனவே இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கு மாற்றப்பட்ட திகதி 01 ஜனவரி 2012 ஆகும்.

உண்மை பெறுமதியில் அளக்கப்படும், விற்பனைக்கான முதலீடுகளுக்கு கிடைக்கக் கூடியவை தவிர்ந்த, வரலாற்று ரீதியான கிரய அடிப்படையில், இலங்கை ரூபாய்களில் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் (அஈமுவ) நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளன. வீக்க நிலமைகளுக்காக சீராக்கல்கள் எவையும் செய்யப்படவில்லை.

#### 2.1.1. இணங்குவிப்பு கூற்று

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக வங்கியின் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.2. நிதிக் கூற்றுகளை வெளியிடுவது

வங்கி அதன் நிதியியல் நிலைமை கூற்றுகளை அதிகமாக திரவ அடிப்படையில் அளிக்கின்றது. குறிப்பு 28இல் வங்கியின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் ஒப்பந்த முதிர்வுகள் வெளியிடப்பட்டுள்ளன.

நிதியியல் சொத்துகளும், நிதியியல் பொறுப்புகளும் ஈடுசெய்யப்படுகின்றதுடன், அடையாளம் காணப்பட்ட தொகைகள் ஈடுசெய்வதற்கான உரித்து சட்டரீதியாக நிறைவேற்றப்பட்டிருந்தால் மட்டுமே நிதியியல் நிலைமை கூற்றில் தேறிய தொகை அறிவிக்கப்படும் என்பதுடன், தேறிய அடிப்படையில் கொடுத்துத் தீர்ப்பதற்கான உத்தேசம் அல்லது ஒரே நேரத்தில் சொத்துகளை அறிவதும் பொறுப்புகளை கொடுத்துத் தீர்ப்பதுமாகும். தேவை ஏற்படின் அல்லது ஏதாகிலும் கணக்கீட்டு தரப்படுதல் அனுமதிக்குமாயின் அல்லது விளக்கமளிப்பதற்கும், வங்கியின் கணக்கீட்டுக் கொள்கைகளில் முக்கியமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் அன்றி வருமானக் கூற்றில் வருமானமும் செலவும் ஈடுசெய்யப்படுவதில்லை.

### 2.2. முக்கியமான கணக்கீட்டு தீர்வுகளும், மதிப்பீடுகளும், ஊகங்களும்

வங்கியின் கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிக்கும் செயன்முறையின் போது, நிதிக் கூற்றுகளில் இனங்காணப்பட்ட தொகைகளை தீர்மானிப்பதற்கு. முகாமைத்துவம் தீர்ப்புகளையும், மதிப்பீடுகளையும் பயன்படுத்தியுள்ளது. நிச்சயமின்மைகளுடன் தொடர்புடைய முக்கியமான குறிப்பிடத்தக்க கணக்கீட்டுத் தீர்ப்புகளும், மதிப்பீடுகளும், ஊகங்களும் கீழே கலந்துரையாடப்பட்டுள்ளன. அதேநேரம் தொடர்புடைய குறிப்புகளில் அத்தகைய சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் தொடர்புடைய கொண்டு செல் பெறுமதிகளும் தரப்பட்டுள்ளன.

#### 2.2.1. தீர்ப்புகள்

**வரி விதிப்புகள்**

நிதி சேவை மீதான பெறுமதியிடப்பட்ட வரி உள்ளடங்களாக வருமான வரி மற்றும் ஏனைய வரிகளுக்கு வங்கி உள்ளாக்கப்படுகின்றது. நிதி கூற்றுகளின் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தை கை கொள்வதற்காக வரி வழிகாட்டிகளாக, நடப்பு, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளின் மொத்த ஏற்பாடுகளை தீர்மானிப்பதற்கு குறிப்பிடத்தக்க தீர்ப்புகளும் வரிகளை விதிப்பதற்கான நோக்கத்திற்கு வரியிடக்கூடிய இலாபமும் தேவைப்பட்டன. இத்தகைய நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் நேரத்தில் வரிச் சட்டங்களை பிரயோகிப்பதை விளக்குவது தொடர்பாக நிச்சயமின்மைகளும் ஏற்படுகின்றன.

உத்தேச மதிப்பீடுகளின் அடிப்படையில் மேலதிக வரிகளுக்கான தேவை உள்ளதா என்பதை நடப்பு, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகளை வங்கி இனங்கண்டுள்ளது. ஆரம்ப பதிவுகளின் தொகைகளிலிருந்து வேறுபடுவதாக, இறுதியான வரிகள் இருப்பது இதில் கவனிக்கத் தக்கதாகும். தீர்வுகள் எடுக்கப்படும் காலத்தில் வருமானம் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரி தொகைகளில் இத்தகைய வேறுபாடுகள் தாக்கத்தை ஏற்படுத்தும்.

#### 2.2.2. உத்தேச மதிப்பீடுகளும் ஊகங்களும்

**இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனம்**

வங்கியின் முகாமைத்துவம் வங்கியின் தொடர்ந்து இயங்கும் தன்மையை அளவீடு செய்து, வங்கி எதிர்பார்க்கக்கூடிய காலத்துக்கு இயங்கும் தன்மை உள்ளது என்று திருப்திபடுகின்றது. மேலும் தொடர்ந்து இயங்கும் தன்மையைச் சந்தேகிக்கக்கூடிய கணக்கெடுக்கக்கூடிய ஐயங்கள் எதுவும் முகாமைத்துவத்திற்கு அறியக்கிடைக்கவில்லை. எனவே நிதியில் கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற முறையிலேயே தயார் செய்யப்படுகின்றது.

## கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

**நிதியியல் பத்திரங்களின் உண்மை பெறுமதி**

நடைமுறைச் சந்தையில் பெறுமதியை பெற்றுக்கொள்ள முடியாதவிடத்து உண்மை பெறுமதி பதிவு செய்யப்பட்டுள்ளது. இவை கணித முறைகள் உள்ளிட்ட தொழில்நுட்ப முறையில் பெறுமதியிடப்பட்டுள்ளன. இவற்றிற்கான உள்ளீடுகள் கண்டு கொள்ளக்கூடிய சந்தைத் தரவுகளாலும் கண்டு கொள்ளக்கூடிய தரவுகள் இல்லாதவிடத்து மதிப்புகள் தீர்ப்புகளினாலும் தீர்மானிக்கப்பட்டவையாகும்.

**கடன்களும் முற்பணங்களும் மீதான பெறுமதி குறைப்பு நட்டங்கள்**

**தனிப்பட்ட ரீதியில் மதிப்பிடப்பட்ட கடன்களும் முற்பணங்களும்**

கடன்தீர் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துகளுக்கு (வாடிக்கையாளர்களுக்காக கடன்களும் முற்பணங்களும் மற்றும் முதிர்ச்சி முதலீட்டிற்கான பிடித்துவைத்துள்ளவையும் போன்றவை) தனிப்பட்ட ரீதியில் முக்கியம் பெறும் நிதிச் சொத்துகள் அல்லது தனிப்பட்ட வகையில் முக்கியம் பெறாத கூட்டாக செயற்படும் நிதிச் சொத்துகள் என்பவற்றிற்கு பெறுமதி குறைப்பிற்கான வாய்ப்புள்ள சான்றுகள் உள்ளதா என வங்கி முதலில் மதிப்பீடு செய்யும்.

**கிடைக்கக்கூடிய விற்பனை முதலீடுகளுக்கு, பெறுமதி குறைப்பு**

கிடைக்கக் கூடிய விற்பனை முதலீடுகள் என வகைப்படுத்தப்பட்ட அதன் முதலீடுகளை, அவை பெறுமதி குறைப்பிற்கு ஆளாகியுள்ளனவா என்பதை மதிப்பீடு செய்வதற்காக ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியும் வங்கி அவற்றை மீளாய்வு செய்யும். கடன்களும் முற்பணங்களும் தனிப்பட்ட மதிப்பீட்டு முறைகளுக்கு பிரயோகிக்கப்பட்ட அதே மாதிரியிலான தீர்ப்புகள் இவற்றிற்கும் தேவைப்படும்.

கிடைக்கக்கூடிய விற்பனை பங்குகளின் கிரயம், உண்மை பெறுமதியை விட குறைவானதாக குறிப்பிட்ட ஒரு காலத்தில் அல்லது நீண்ட காலத்தில் வீழ்ச்சிப் போக்கை காண்பிக்கும் போது வங்கி பெறுமதி குறைப்பு விதிப்பனவுகளுக்கு பதிவு செய்யும். இந்த குறிப்பிட்ட காலம் அல்லது நீண்ட காலம் என்பவற்றிற்கு தீர்ப்புகள் தேவைப்படும். வங்கி ஏனைய காரணிகளுடன், வரலாற்று ரீதியான பங்கு விலை அசைவுகள், மூலதனமொன்றின் உண்மை பெறுமதி, அதன் கிரயத்தை விட குறைவாக இருப்பது என்பவற்றையும் மதிப்பிடும்.

**ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள்**

ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள் வரி நட்டங்கள் தொடர்பாக இனங்காணப்படுகின்றன. எதிர்காலத்தில் வரியிடக் கூடிய இலாபங்கள் கிடைக்கும் என்ற கருதுகோலுடன் நட்டங்களுக்கு எதிராக இவற்றை பயன்படுத்திக் கொள்ள முடியும் என ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துகள் உருவாக்கப்பட்டுள்ளன. இனங்காணப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகளின் தொகையை தீர்மானிப்பதற்கு, காலம் மற்றும் எதிர்கால வரியிடல் இலாபங்களின் மட்டங்கள் என்பவற்றுடன் எதிர்கால வரியிடல் திட்ட உபாயங்களுக்கும் தீர்ப்புகள் தேவைப்படுகின்றன.

**ஊழியர் நன்மை பொறுப்புகள் - பணிக் கொடை**

கணிப்பீட்டு மதிப்பீடு ஒன்றை பயன்படுத்தி பணிக்கொடை அதாவது அறுதியிட்ட நன்மைத் திட்டத்தின் கிரயம் தீர்மானிக்கப்படுகின்றது. கழிவு வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள் எஞ்சியுள்ள பணியாளர்களின் பணியாற்றும் காலம், மற்றும் இறப்பு வீதங்கள் என்பவை கணிப்பீட்டு மதிப்பீட்டின் ஊகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த கடப்பாடுகளின் நீண்ட கால கடப்பாடுகளினால் இத்தகைய உத்தேச மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமின்மைகளுக்கு உள்ளாகலாம். பயன்படுத்தப்பட்ட ஊகங்கள் பின்வருமாறு.

| | 2012 | 2011 |
|---|---|---|
| வட்டி வீதம் | 13.00% | 11.00% |
| சம்பள அதிகரிப்பு வீதம் | 8.50% | 8.50% |
| ஓய்வு பெறும் வயது | 55-60 வயது | 55-60 வயது |

பணிக்கொடை ஏற்பாட்டின் ஊழியர் நன்மை கடப்பாடு குறிப்பு 20இல் தரப்பட்டுள்ளது.

**ஊழியர் நன்மை பொறுப்பு - மருத்துவ நன்மை**

கணிப்பீட்டு மதிப்பீடு ஒன்றை பயன்படுத்தி பணிக்கொடை அதாவது அறுதியிட்ட நன்மைத் திட்டத்தின் கிரயம் தீர்மானிக்கப்படுகின்றது. கழிவு வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள் எஞ்சியுள்ள பணியாளர்களின் பணியாற்றும் காலம், மற்றும் இறப்பு வீதங்கள் என்பவை கணிப்பீட்டு மதிப்பீட்டின் ஊகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த கடப்பாடுகளின் நீண்ட கால கடப்பாடுகளினால் இத்தகைய உத்தேச மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமின்மைகளுக்கு உள்ளாகலாம். பயன்படுத்தப்பட்ட ஊகங்கள் பின்வருமாறு.

| | 2012 | 2011 |
|---|---|---|
| கழிவு வீதம் | 13.00% | 11.00% |
| மருத்துவதுறை வீக்க நிலைமைகள் | 10.00% | 10.00% |
| பங்கேற்பாளர் தரவு (செயற்படுவது) அன்றுள்ள வாறு குடிமதிப்பீட்டு தகவல் | 31.12.2012 | 31.12.2011 |

குறிப்பு 20 இல் ஊழியர் நன்மை விபரங்கள் தரப்பட்டுள்ளது.

### 2.3. முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

#### 2.3.1. நிதியியல் பத்திரங்கள் - ஆரம்ப இனங்காணல்களும் பின்னைய அளவீடுகளும்

**அ. இனங்காணப்பட்ட திகதி**

கொடுத்ததுத் தீர்க்கும் கணக்கீட்டுத் திகதியைப் பயன்படுத்தி, பொதுவாக நிதியியல் சொத்துகளின் கொள்வனவுகள் இனங்காணப்படுகின்றன. நிறுவனமொன்றிற்கு சொத்தொன்று அளிக்கப்படும் திகதி கொடுத்துத் தீர்க்கும் திகதியியாகவிருக்கும். நிறுவனத்தினால் சொத்து ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்ட நாள் கொடுத்துத் தீர்க்கும் கணக்கீட்டு திகதியை குறிப்பிடுவதாக இருக்கும். சுவீகரிக்கப்பட்ட சொத்துக்கு கணக்கீடுகளை செய்வதை போலவே வணிக திகதிக்கும் கொடுத்தத் தீர்க்கும் திகதிக்கும் இடையிலான காலத்தில் சொத்துகளின் உண்மை பெறுமதியில் ஏற்படக்கூடிய எந்தவொரு மாற்றத்திற்கும் நிறுவனக் கணக்குகளில் கொடுத்து தீர்த்தல் கணக்கீடுகள் பிரயோகிக்கப்படும்.

இனங்காணப்பட்ட திகதி நிதியியல் பத்திரங்கள் அனைத்தும் ஆரம்ப வணிக திகதியில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அதாவது பத்திரத்தின் ஒப்பந்த ஏற்பாட்டில் வங்கி ஒரு பங்கேற்பாளராக இணைந்த திகதி.

பொதுவாக சந்தையில் ஒழுங்கமைப்பு அல்லது மாநாடு ஒன்றில் தாபிக்கப்பட்ட நேர சட்டத்திற்குள் சொத்தொன்று அளிக்கப்படுவதற்கான தேவைக்கு அமைவாக, ஒரு ஒப்பந்தத்தின் கீழ் நிதியியல் சொத்தொன்று கொள்வனவு செய்யப்படுவது வழமையான நடைமுறையாகும்.

**ஆ. நிதியியல் பத்திரங்களின் ஆரம்ப அளவீடுகள்**

நிதியியல் பத்திரங்களின் ஆரம்ப அளவீடுகள் நிதியியல் பத்திரங்களை ஆரம்ப ஏற்புடமையில் வகைப்படுத்தல்,

## கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

ஏற்றுக்கொள்ளும் காரணத்திலும், முகாமைத்துவத்தின் கையேற்கும் நோக்கத்திலும் பத்திரத்தின் தன்மையிலும் தங்கி உள்ளது. சகல நிதியியல் பத்திரங்களும் ஆரம்பத்தில் அவற்றின் உண்மை பெறுமதியிலும் கொடுக்கல் வாங்கல் செலவிலும் அளவிடப்படுகின்றன. இலாப நட்ட கணக்கின்ஊடாக உண்மை பெறமதியில் பதிவு செய்யப்படும் நிதியியல் பொறுப்புகளும் நிதியியல் சொத்துக்களும் இதில் விலக்களிக்கப்படும்.

எந்தக் கடனையோ, வரவேண்டியவையையோ விற்பனைக்கு உள்ளவை என வங்கி வகுக்கவில்லை. ஆரம்ப மதிப்பீட்டின் பின் விற்பனைக்குள்ள நிதியில் பத்திரங்கள் நல்லெண்ண மதிப்பில் கணக்கிடப்பட்டன.

**இ. விற்பனைக்கு கிடைக்க கூடிய நிதியியல் பத்திரங்கள்**

விற்பனைக்கு கிடைக்க கூடிய நிதியியல் பத்திரங்களில் யுனிட் டிரஸ்ட் உள்ளடங்கும். இவை வகைப்படுத்தப்பட்டவை, வணிகத்திற்காக பிடித்து வைத்துள்ளவையோ அல்லது இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக உண்மைப் பெறுமதியில் குறித்தொதுக்கப்பட்டவையோ அல்ல.

வங்கி எத்தகைய கடன்களையும் அல்லது கிடைக்கக் கூடியவற்றையும், விற்பனைக்குக் கிடைக்கக் கூடியவை என குறித்தொதுக்கவில்லை. விற்பனைக்குக் கிடைக்கக் கூடியவை நிதி முதலீடுகளின் ஆரம்ப அளவீடுகளின் பின்னர் தொடர்ந்து உண்மை பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன.

பணமாக்கப்படாத வருவாய்களும் நட்டங்களும். விற்பனைகளாக கிடைக்கக் கூடிய ஒதுக்கின் பங்கு மூலதனத்தில் நேரடியாக இனங்காணப்படுகின்றன. (ஏனைய முழுமையான வருமானம்) முதலீடு அகற்றப்பட்ட பின்னர், முன்னதாக பங்கு மூலதனத்தில் இனங்காணப்பட்ட ஒட்டு மொத்த வருவாய் அல்லது நட்டம் வருமானக் கூற்றில் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் காட்டப்படும். கொடுப்பனவு அதிகாரம் நிரூபிக்கப்பட்டதும், வருமானக் கூற்றில் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில், விற்பனைக்கு கிடைக்கக் கூடிய நிதியியல் முதலீடுகளில் வைத்துள்ள பங்கிலாபங்களில் ஈட்டப்பட்டவையாக இணங்காணப்படும். அத்தகைய முதலீடுகளின் பெறுமதி குறைப்பிலிருந்து உருவாகும் நட்டங்கள், வருமானக் கூற்றில், நிதி முதலீடுகளின் மீதான பெறுமதி குறைப்பு நட்டங்களில் இணங்காணப்பட்டு, விற்பனைக்கு கிடைக்கக்கூடிய ஒதுக்கிலிருந்து அகற்றப்படும்.

**ஈ. முதிர்ச்சிக்கென வைத்துள்ள நிதியியல் முதலீடுகள்**

முதிர்ச்சிக்கெனக் கொண்டுள்ள நிதியியல் முதலீடுகள் நிர்ணயிக்க வேண்டியவை அல்லாதவையான நிதியியல் சொத்துக்கள், அவை தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளையும் தீர்மானிக்கக்கூடிய முதிர்ச்சியையும் உடையவை. வங்கி இவற்றை முதிர்ச்சி வரை கொண்டிருக்கும் எண்ணமும் தகைமையும் உடையது. ஆரம்ப கணக்கீட்டின் பின் முதிர்ச்சிக்கென கொண்டுள்ள நிதியியல் முதலீடுகள் பின்னர் கொடுக்கப்பட்ட செலவின் அடிப்படையில் வி.வ.வீ ஐ உபயோகித்து ஊறு நீக்கலாக கணக்கிடப்படும். கையேற்கும் போது கிடைக்கும் விலைக்கழிவு. விலை உயர்வு என்பவற்றை ஒரு உள்ளடக்கமாகக் கொண்டு வி.வ.வீ கணக்கிடப்படுகின்றது. மீள் கொடுப்பனவுகள் வருவாய்க்கூற்றில் "வட்டியும் அது போன்ற வருமானங்களும்" எனப்பதியப்படும். ஊறுகளால் ஏற்படும் நட்டங்கள் வருவாய்க்கூற்றில் பெறுமதி குறைப்பு செலவினமாகக் காட்டப்படும்.

குறிப்பிடக்கூடியதல்லாத அளவிற்கு மேம்பட்ட முதிர்ச்சி வரை கொண்டுள்ள முதலீடுகளை வங்கி விற்க வேண்டுமாயின் (சில விசேட நடைமுறைகள் தவிர்ந்த) முழுப்பகுதியுமே விற்பனைக்கு உள்ள முதலீடுகளாக பகுப்பு மாற்றம் செய்யப்பட வேண்டும். மேலும் அடுத்த இரு வருடங்களுக்கு வங்கி முதிர்ச்சி வரை கொண்டுள்ள பகுப்பில் எந்த நிதியியல் சொத்தையும் வைத்திருக்க தடை செய்யப்படும்.

**உ. ஏனைய நிதியியல் பொறுப்புகள்**

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக. உண்மை பெறுமதியில் தரப்படாத வங்கியினால் வழங்கப்பட்ட நிதியியல் பத்திரங்கள் ஏனைய நிதியியல் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படும். ஒப்பந்த ஒழுங்கின் விளைவாக வங்கிக்கு ஏற்கக்கூடிய கடப்பாடு ஒன்றினால், காசு அளிக்க வேண்டிய அல்லது வைப்பாளருக்கு வேறொரு நிதி சொத்தினை அளிக்க அல்லது நிலையான பணத்தொகை ஒன்றை அல்லது வேறொரு நிதி சொத்தைப் பரிமாறிக் கொள்வதனூடாக கடப்பாட்டை திருப்தி செய்வதாக இருக்கும்.

வாடிக்கையாளரிடமிருந்து வைப்புகள், வங்கிகளிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை, வங்கிகளிலிருந்தும் ஏனையவர்களிடமிருந்தும் கடன் பெறுகைகள், மற்றும் தொகுதிக் கடன்கள் என்பவை ஏனைய நிதியியல் பொறுப்புகளில் உள்ளடங்கும். ஆரம்ப அளவீட்டின் பின்னர். அடுத்துவரும் அளவீடுகள் வி.வ.வீ யை பயன்படுத்தி கடன்தீர் கிரயத்தில் ஏனைய நிதியியல் பொறுப்புகள் அளவிடப்படும். வி.வ.வீ இன் ஒன்றிணைந்த பகுதியான விடயங்கள் மற்றும் கிரயங்கள் மீது எந்தவொரு கழிவுகள் அல்லது ஊதியங்கள் என்பவை கணக்கிலெடுக்கப்பட்டு கடன்தீர் கிரயத்தில் கணக்கிடப்படும்.

**ஊ. கடன்களும் முற்பணங்களும் என வகைப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்துகள்**

கடன்களும் கிடைக்க வேண்டியவையும் என வகைப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்துகளில் சந்தையில் முன்னிலைப்படுத்தப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கப்பட்ட சொத்துகளும். உள்ளடங்கும்.

- உடனடியாக அல்லது நெருங்கிய காலத்திற்குள் விற்கவேண்டும் என வங்கி உத்தேசித்துள்ளவையும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக உண்மை பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டவையும்
- விற்பனைக்கு கிடைக்கக் கூடியதாக ஆரம்பத்திலேயே வங்கியினால் இனங்காணப்பட்டவை.
- கடன் தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காக, வங்கி அதன் ஆரம்ப முதலீடுகள் அனைத்தையும் முடிந்தளவு அறவிட முடியாத போது உருவானது

  ஆரம்ப அளவீட்டின் பின்னர், பெறுமதி குறைப்பு அலவன்சுகளை கழிவு செய்து விவவீயை பயன்படுத்தி கடன்தீர் கிரயத்தில் வங்கிகளிலிருந்து கிடைக்க வேண்டியவையும் வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் என்பவையும் அளக்கப்படுகின்றன. சுவீகரிக்கப்பட்டதன் மீதான எவ்வித கழிவு அல்லது ஊதியத்தையும் மற்றும் விவவீன் ஒன்றிணைந்த பகுதியான கட்டணங்களையும், கிரயம் கணக்கிலிருந்து கடன்தீர் கிரயம் கணக்கிடப்படுகின்றது. வருமானக் கூற்றில் வட்டியும் மற்றும் அதுபோன்ற வருமானங்களும் மற்றும் விவவீன் ஒன்றிணைந்த பகுதியான கட்டணங்களையும், கிரயமும் காண்பிக்கப்படுகின்றது. வருமானக் கூற்றின் பெறுமதிக் குறைப்பு செலவில், பெறுமதி குறைப்பிலிருந்து உருவாகும் நட்டங்கள் இணங்காணப்பட்டுள்ளன.

**எ. பதவியினரின் கடனுக்குள்ள முதலாவது நாள் வித்தியாசம்**

சந்தை வட்டி வீதங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள பதவியினரின் கடன்கள் யாவும் உண்மை பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளன. உண்மை பெறுமதிக்கும், பகிரப்பட்ட தொகைக்கும். இடையிலான வேறுபாடு, முதலாவது நாள் வித்தியாசமாக கருதப்படுகின்றதுடன், விளைவு வீதத்தை பயன்படுத்தி கடன் காலத்தின் போதான பதவியினரின் கிரயமாகின்றது. பதவியினரின் கடன்கள் அதனைத் தொடர்ந்து கடன்தீர் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

## கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

**ஓ. நிதிச் சொத்துகளின் மீள் வகைப்படுத்தல்**

மீள் வகைப்படுத்தல் திகதியின் உண்மை பெறுமதியில் மீள் வகைப்படுத்தல்கள் பதிவு செய்யப்படுகின்றன. இது புதிய கடன்தீர் கிரயமாகின்றது.

விற்பனைக்கு கிடைக்கக் கூடியவை வகைப்படுத்தலின் கீழ், மீள் வகைப்படுத்தப்பட்ட சொத்து ஒன்றிற்கு வி.வ.வீ யை பயன்படுத்தி முதலீட்டின் எஞ்சிய காலப்பகுதி மீது இலாபம் அல்லது நட்டத்திற்கு பங்குகளில் இனங்காணப்பட்ட அந்த சொத்தின் எந்தவொரு முன்னைய இலாபம் அல்லது நட்டம் புதிய கடன் தீர் நிதி கிரயத்திற்கும், எதிர்பார்க்கப்பட்ட காசுபாய்ச்சலுக்கும் இடையிலான எந்தவொரு வேறுபாடும் வி.வ.வீ ஐ பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய காலத்தின் மீதான, கடன்தீர் நிதியாக்கப்படும். அதனைத் தொடர்ந்து, சொத்து பெறுமதி குறைக்கப்பட்டுள்ளது தீர்மானிக்கப்படும் போது, பங்குகளில் பதிவு செய்யப்பட்ட தொகை, வருமானக் கூற்றிற்கு மீள் சுழற்சி செய்யப்படும்.

மூலத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியாத வணிகச் சொத்தை வங்கி மீள்வகைப்படுத்துவதனூடாக வணிகத்திற்காக பிடித்துவைத்தவை வகைப்படுத்தலிலிருந்து வெளியேற்றி, கடன்களும் கிடைக்க வேண்டியவையும் வகைப்படுத்தலின் வரைவிலக்கனத்திற்குள் செயற்படும் கடன்களும், கிடைக்க வேண்டியவையும் வகைப்படுத்தலுக்குள் கொண்டு வருவதுடன், தென்படக்கூடிய எதிர்காலம் அல்லது முதிர்ச்சிக் காலம் வரை நிதியியல் சொத்தொன்றை பிடித்து வைக்கவும், வங்கிக்கு உத்தேசமும் தகைமையும் இருக்க வேண்டும்.

நிதியியல் சொத்தொன்று மீள்வகைப்படுத்தப்பட்டு, அதனால் ஏற்படும் காசு அறவீட்டு அதிகரிப்பின் விளைவாக, எதிர்கால காசு வரவுகளின் உத்தேச மதிப்பீடுகளில் வங்கி அதன் தொடர்ச்சியாக அதிகரிப்பை ஏற்படுத்துமாயின், உத்தேச மதிப்பீட்டில் மாற்றம் ஏற்பட்ட திகதியிலிருந்து விவவீதத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டதாக இவ் அதிகரிப்பின் தாக்கம் இணங்காணப்படும்.

முகாமைத்துவத்தின் தேர்தலில் மீள் வகைப்படுத்தல் இடம் பெறுகின்றதுடன் ஒவ்வொரு பத்திரத்தின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகின்றது. ஆரம்ப இனங்காணலுக்கு பின்னர், இலாப நட்ட வகைப்படுத்தலின் ஊடாக உண்மை பெறுமதியில், நிதி பத்திரங்கள் எவற்றையம் வங்கி மீள் வகைப்படுத்தவில்லை. குறிப்பு 08 இல் நிதியியல் சொத்துகளின் மீள் வகைப்படுத்தலின் பகுப்பாய்வு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

### 2.3.2. நிதியில் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகளை இனங்காணலின்மை

**அ) நிதியியல் சொத்துகள்**

நிதியியல் சொத்தொன்று (அல்லது பிரயோகிகக் கூடிய நிதியில் சொத்துகளின் பகுதி ஒன்று அல்லது அதே மாதிரியான நிதியில் சொத்துகளின் தொகுதியின் பகுதி ஒன்று) பின்வரும் நிலமைகளில் இனங்காண முடியாமற் போகும்

- சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்களை பெறும் உரித்துகள் காலாவதியாகும் போது.
- சொத்துகளிலிருந்து காசுக்பாய்ச்சல்களை பெறும் உரித்துகளை மாற்றுவதற்கான வங்கியின் உரித்து அல்லது, உள்நுழையும் ஒழுங்கொன்றின் கீழ் மூன்றாந் தரப்பின் ஒருவருக்கு தாமதமின்றி, பெறப்பட்ட காசுப்பாய்ச்சல் தொகையை முழுமையாக கொடுத்து தீர்க்கும் கடப்பாட்டை ஏற்றுக் கொள்வது.
- சொத்தின் இடர்களை மற்றும் வெகுமதிகள் அனைத்தையும் கணிசமான அளவு வங்கி மாற்றியுள்ளது.
- சொத்தின் இடர்கள் மற்றும் வெகுமதிகள் அனைத்தையும் கணிசமான அளவு மாற்றுவதற்கு அல்லது தக்கவைத்துக் கொள்வதற்கு வங்கி ஈடுபடவில்லை. ஆயினும் சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றியுள்ளது.

சொத்து ஒன்றிலிருந்து காசுப்பாய்ச்சல்களை பெற்றுக் கொள்வதற்கு வங்கி அதன் உரித்துகளை மாற்றும் போது அல்லது உள்நுழையும் ஒழுங்கொன்றில் ஈடுபடும் போதும், வங்கியின் சொத்தின் இடர்கள் மற்றும் வெகுமதிகள் அனைத்தையம் கணிசமான அளவு மாற்றும் அல்லது தக்கவைத்துக் கொள்ளும் போது அல்லது சொத்தின் கட்டுப்பாடுகளை மாற்றும் போது சொத்தின் மீதான வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாடாக சொத்து இணங்காணப்படுகின்றது.

அத்தகைய சந்தர்ப்பத்தில், சம்பந்தப்பட்ட பொறுப்பையும் வங்கி இனங்காணுகின்றது. வங்கி பிடித்து வைத்துள்ள உரித்துகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கும் அடிப்படையில், மாற்றப்பட்ட சொத்துகளும் சம்பந்தப்பட்ட பொறுப்புகளும் அளவிடப்படுகின்றன. சொத்தின் ஆரம்ப கொண்டு செல் தொகையின் குறைவாக அளக்கப்படும் மாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதமாகி, ஈடுபாட்டின் தொடர்ச்சி இருக்கின்றதுடன், வங்கியினால் மீள் கொடுப்பனவு செய்யக்கூடிய உச்ச தொகையாகவும் இருக்கின்றது.

**ஆ) நிதியியல் பொறுப்புகள்**

பொறுப்பின் கீழான கடப்பாடு நிறைவேற்றப்படும் அல்லது நீக்கப்படும் அல்லது காலாவதியாகும் போது நிதியியல் பொறுப்பு மீள இனங்காணப்படுகின்றது.

கணிசமான அளவிற்கும வேறுபட்ட விதிகளில் அதே கடன் கொடுப்பவருக்கு மற்றுமொரு வகையான செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிதி பொறுப்பு ஒன்றினை பதிலாக பெறும் போது, அல்லது செயற்பட்டுக் கொண்டிருக்கும் பொறுப்பு கணிசமான அளவு திருத்தப்படும் போது, அத்தகைய பரிமாற்றம் அல்லது திருத்தம், ஆரம்ப பொறுப்பின் இனங்காணலின்மையாக கருதப்படுவதுடன் புதிய பொறுப்பாகவும் இனங்காணப்படும். ஆரம்ப நிதியியல் பொறுப்புடன் கொண்டு செல் பொறுப்பிற்கும், கொடுக்கப்பட்ட அவதானிப்பிற்கும் இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

### 2.3.3. மீள் கொடுப்பனவு மாற்று மீள் கொள்வனவு திருப்புதல்களின் ஒப்பந்தங்கள்

குறிப்பிடக்கூடிய வகையில் எல்லா இடர்களையும் வெகுமதிகளையும் வங்கி கொண்டிருப்பதால், மீள் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் விற்கப்பட்ட பொறுப்புகள் நிதியில் நிலமைக்கூற்றில் இருந்து அகற்றப்படுவதில்லை. இது தொடர்பாகப் பெறப்பட்ட காசுத் தொகை கடன் கொடுத்த பணப்பொறுப்புகளும் திரும்பப்பெறும் ஒப்பந்தங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒருங்கு சேர் வட்டி ஒரு பொறுப்பாகவும் ஒருங்கிணைந்த நிதியியல் நிலைக்கூற்றில் திரும்ப வேண்டிய சொத்தாகவும் காட்டப்படும். இது வங்கிக்கு கிடைத்த கடன் போன்று காட்டப்படும். விற்பனை விலைக்கும் திரும்பப் பெற்ற விலைக்கும் இடையேயான வித்திசாசம் வட்டி செலவினமாக ஒப்பந்த காலம் வரை வி.வ.வீ முறையின் கீழ் ஒருங்கு சேர் வட்டிச் செலவினமாகும்.

மாறாக குறிப்பிட்ட கால முடிவில் விற்பனை செய்வதற்காக வாங்கப்பட்ட பொறுப்புகள் நிதியியல் நிலைமைக்கூற்றில் உள்ளாக்கப்படுவதில்லை. ஒருங்கு சேர் வட்டி உட்பட கொடுக்கப்பட்ட விலை மதிப்பு நிதியியல் நிலைமைக்கூற்றில் திரும்ப வாங்கும் ஒப்பந்தத்தின் கீழ் கடனாகப்பெற்ற பொறுப்புகளின் பணத்தொகையாக இக்கொடுக்கல் வாங்கல் வங்கி கொடுத்த கடனாகக் காட்டப்படும். வாங்கிய விற்ற விலைகளுக்கிடையேயான தொகை வி.வ.வீ முறைப்படி "நிகர வட்டி வருமானமாக' ஒப்பந்தகாலம் வரை ஒன்று சேரும்.

### 2.3.4. உண்மை பெறுமதியை தீர்மானித்தல்

கொடுக்கல் வாங்கல் கிரயங்களுக்காக எந்தவொரு கழிவும் செய்யப்படாது. நிதியியல் பத்திரங்களில் குறிக்கப்பட்ட சந்தை விலையின் அடிப்படையில் அறிக்கையிடும் திகதியில் சந்தைகளில் வணிகத்திற்கு இடப்பட்ட நிதியியல் பத்திரங்களின் உண்மை பெறுமதி.

## கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

சந்தையில் வணிகத்திற்கென விடப்படாத ஏனைய அனைத்து நிதியியல் பத்திரங்களுக்கும், பொருத்தமான மதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு உண்மை பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது. கழிவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் முறை, சந்தை அவதானிப்புகளின் விலைகள் உள்ள அது போன்ற பத்திரங்களின் ஒப்பீடு, மற்றும் ஏனைய தொடர்புடையவை மதிப்பீட்டு நுட்பத்தில் உள்ளடங்கும்.

நடப்பு சந்தை கொடுக்கல் வாங்கல்கள் அல்லது அவதானிக்கக் கூடிய சந்தை தரவுகள் கிடைக்காத போது மதிப்பீட்டு நுட்பங்களை பயன்படுத்தி உண்மை பெறுமதியில், சில நிதியியல் பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

விலைகள் அல்லது, உண்மையான சந்தை கொடுக்கல் வாங்கல்களுக்கு எதிராக, பரீட்சிக்கப்பட்ட மதிப்பீட்டு மாதிரி ஒன்றை பயன்படுத்தி அவற்றின் உண்மை பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றதுடன், வங்கியின் மிகவும் பொருத்தமான மாதிரி ஊகங்களின் சிறந்த உத்தேச மதிப்பீடுகளும் பயன்படுத்தப்படுகின்றது.

நிதியியல் பத்திரங்களின் உண்மை பெறுமதியின் பகுப்பாய்வும், அவை எவ்வாறு அளவிடப்பட்டு வழங்கப்படுகின்றன என்பது குறித்த மேலதிக விளக்கங்களும் குறிப்பு 28இல் தரப்பட்டுள்ளது.

### 2.3.5. நிதியியல் சொத்துகளின் பெறுமதி குறைப்பு

அ) கடன்களும் முற்பணங்களும்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் எந்தவொரு நிதியியற் சொத்துக்களுக்கு அல்லது ஒரு தொகுதி சொத்துகளுக்கு கணக்கெடுக்கக்கூடிய ஊறு விளைந்துள்ளதா என வங்கி மதிப்பீடு செய்யும். ஆரம்ப மதிப்பீட்டின் பின் ஒரு நிதியியற் சொத்துக்கு, அல்லது ஒரு தொகுதி சொத்துக்களுக்கு கணக்கெடுக்கக்கூடிய வகையில் ஊறு ஏற்பட்டு (ஒரு செலவின் நட்ட இடர் நிகழ்வு) அதனால் எதிர்கால சொத்தின் காசு பாய்சலுக்கு, தொகுதி சொத்துக்களின் காசு பாய்ச்சலுக்கு மதிப்பிடக்கூடிய தாக்கம் ஏற்பட்டால் மட்டும் (அந்த பெறுமதி குறைப்பு நடைமுறை/முறைகள்) அது நிதியியல் பெறுமதி குறைப்பு என கொள்ளப்படும்.

ஒரு கடனாளி அல்லது ஒரு தொகுதி கடனாளிகள் குறிப்பிடக்கூடிய நிதி நெருக்கடியில் உள்ளார்கள் என்றோ, அதனால் அவர்கள் கடன் மீள முடியாதவர்கள் ஆகவோ, பிற நிதியியல் மீள் ஒழுங்கு அமைத்தோ, வட்டி, முதல் என்பவற்றை திருப்பிச்செலுத்த முடியாதவராய். எதிர்கால காசு ஒழுங்கில் குறிப்பிடக்கூடிய குறைவுக்கான தரவுகள் தெரிந்தாலோ, கொடுக்க வேண்டிய தொகை காலங்கடந்து செலத்த முடியாத நிலை தோன்றினாலோ அது பெறுமதி குறைப்பிற்கான சாட்சியாகும்.

அவ்வாறான சான்றுகள் உள்ளன என்பதை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் அலகுகள்

- கடன் பெறுனரினால் அனுபவிக்கப்படும் காசுப்பாய்ச்சலில் அறியப்பட்ட சிரமங்கள்
- மூலதனம் அல்லது வட்டியின் ஒப்பந்த கொடுப்பனவில் நிலுவைகள்
- கடன் ஒப்பந்தம் அல்லது நிபந்தனைகளை மீறுவது
- வங்குரோத்து நிலைமை அல்லது ஏனைய நிதியியல் நிலைமைக்குள் கடன் பெறுனர் நுழையக்கூடிய சாத்தியம்

  காணக்கூடியதான ஒரு பெறுமதி குறைப்பு உண்டாயின் அந்த நட்டம் கொண்டுள்ள தொகைக்கும் அந்த சொத்தால் ஏற்படும் எதிர்கால காசு பாச்சலுக்கும் (ஏற்படும் என எதிர்பார்க்கும் இதுவரை கணக்கிடாத நட்டம் நீக்கலாக) இடையேயான வித்தியாசம் நட்டம் எனக் கொள்ளப்படும். சொத்து கொண்டுள்ள தொகை ஒரு விருப்பு கணக்கு மூலம் குறைக்கப்பட்டு நட்டத்தொகை வருமான கூற்றில் காட்டப்படும்.

தேவைப்படும் சந்தர்ப்பங்களின் போது, முக்கியமான தனிப்பட்ட கணக்குகளின் மீது பெறுமதி குறைப்பு அலவன்சுகள் மேலும் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன. பிடித்து வைத்துள்ள ஏதாகிலும் இணைப் பிணையங்களை செயற்படுத்தல், மற்றும் நேரம் மற்றும் உண்மைத் தொகையும். எதிர்பார்க்கப்பட்ட வரவுகளும் என்பவற்றை இது வழமையாக உள்ளடக்குகின்றது. உத்தேச நட்டங்களின் குறைப்பிற்கு நியாயமான சான்றுகள் இருக்கும் போது மட்டுமே தனிப்பட்ட பெறுமதி குறைப்பு அலவன்சுகளின் மதிப்பீடுகள் வெளியிடப்படும்.

#### கூட்டாக மதிப்பிடப்பட்ட கடன்களும் முற்பணங்களும்

இரண்டு சந்தர்ப்பங்களில், கூட்டு அடிப்படையில் பெறுமதி குறைப்பு மதிப்பிடப்படுகின்றது.

- உள்ளாக்கப்பட்ட நட்டங்களை ஈடுசெய்வது, ஆனால் தனிப்பட்ட மதிப்பீடுகளுக்கு உள்ளாக்கப்படும் கடன்கள் மீது இன்னமும் அடையாளம் காணப்படாதவை.
- தனிப்பட்டவகையில் முக்கியமானவை என கருதப்படாத ஒரே இயல்பிலான குழுக்களின் கடன்கள்.

  **உள்ளாக்கப்பட்ட ஆனால் இன்னமும் அடையாளம் காணப்படாத பெறுமதி குறைப்பு**

கூட்டு நட்டமொன்றின் உத்தேச மதிப்பீட்டை கணக்கிடும் நோக்கத்துடன், அவற்றின் கடன் இடர் தன்மைகளுக்கு அமைவாக, ஒன்றாக தொகுதியாக்கப்பட்டதும் குறிப்பாக தனிப்பட்டவை என்ற அடிப்படையில், நட்டங்களுக்கான சான்றுகள் அற்றதுமான தனிப்பட்ட வகையில் மதிப்பீடு செய்யப்பட்ட கடன்கள் வங்கியினால் தனிப்பட்ட ரீதியில் அடையாளம் காணமுடியாத கடன்களாக ஐந்தொகை திகதிக்கு முன்னர் ஏற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக, வங்கி உள்ளான பெறுமதி குறைப்பு நட்டங்களை இது பிரதிபலிக்கின்றதுடன் அவை நம்பகத்தன்மை கொண்ட உத்தேச மதிப்பீடுகளாகவும் உள்ளன. எதிர்காலத்தில் இந்த நட்டங்கள், தனிப்பட்டவையாக மட்டுமே அடையாளம் காணப்படும். தொகுதிக்குள் இருக்கும் தனிப்பட்ட கடன்களின் நட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் போது, குழுவிலிருந்து அத்தகைய கடன்கள் அகற்றப்பட்டு, பெறுமதி குறைப்பை கணக்கிடுவதற்காக தனிப்பட்டவை என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

பின்வருவனவற்றை கணக்கிலெடுத்துக் கொண்டதின் பின்னர் கூட்டு பெறுமதி குறைப்பு அலவன்சுகள் தீர்மானிக்கப்படும்.

- அதேமாதிரியான கடன் இடர் விபரத்திரட்டல்களின் வரலாற்று ரீதியான நட்ட அனுபவங்கள்.
- வரலாற்று ரீதியான அனுபவத்தால் தெரிவிக்கப்பட்டதிலும் அதிகமாக அல்லது குறைவாக, ஐந்தொகை திகதியில் நிலவிய நடப்பு பொருளாதாரம் மற்றும் உண்மையான கடன் நிலைகளின் மட்டங்கள் குறித்த முகாமைத்துவத்தின் அனுபவமிக்க தீர்ப்புகள்.

#### ஒரே இயல்பிலான கடன்கள் மற்றும் முற்பணங்களின் தொகுதி

ஒரே இயல்பான தொகுதியிலமைந்த கடன்களுக்கு சேகரிப்பு அடிப்படையில் பெறுமதி குறைப்பு நட்டங்களை தீர்மானிப்பதற்கு புள்ளிவிபர முறைகள் பயன்படுத்தப்படுகின்றது. தனிப்பட்ட கடன்கள், பதிவழிக்கப்படும் போது, இவ்வாறான கடன் தொகுதிகளின் நட்டங்கள் தனிப்பட்டவை என்ற அடிப்படையில் பதிவு செய்யப்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் குழுவிலிருந்து அவை அகற்றப்படுகின்றன.

சேகரிப்பு அடிப்படையில் வரலாற்று ரீதியான நட்ட அனுபவங்களை கணக்கிடுவதற்கு பின்வரும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன:

குழு கடன்கள் நீண்டகால தன்மையுடையவையாக இருக்கும் போது, "கடன் தவறுதல்களுக்கான சாத்தியம்" முறை (இடர் பெயர்வு) பயன்படுத்துகின்றது.

## கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

இந்த முறைமையின் கீழ், கடன்களின் தொகைகளை உத்தேச மதிப்பீடுகள் செய்ய பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் அசைவுகள், அறவிட முடியாத வகைப்படுத்தலின் கீழ் மதிப்பீட்டைக் கொண்டதாகவும் தனிப்பட்ட கடன் அடிப்படையிலும், வங்கியினால் அடையாளம் காண முடியாததாக ஐந்தொகை திகதிக்கு முன்னர் நிகழும் நிகழ்வாக இது இருக்கும்.

இந்த முறைமையின் கீழ், நிலுவையாகவுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப. கடன்கள் குழுக்களாக பிரிக்கப்படுவதுடன் பலவகையான கட்டணங்களுடாக ஒவ்வொரு கடனின் முன்னேற்றமும் உத்தேச மதிப்பீடு செய்யப்படுவதற்கு புள்ளிவிபர பகுப்பாய்வும் செய்யப்பட்டு இறுதியாக அறவிட முடியாதவை என நிரூபிக்கப்படுகின்றன.

நடப்பு பொருளாதார நிலமைகளும் துறைசார்ந்த இடர் முகாமைத்துவக் காரணிகளும் நட்டத்தை தவிர்ப்பதற்கு தேவைப்படும் பொருத்தமான அலவன்சுகளின் மட்டத்தை கணக்கிடும் போது மதிப்பீடு செய்யப்பட்டன.

இந்த மேலதிக பேரண்ட மற்றும் துறைசார்ந்த இடர் காரணிகளில் உள்ளடங்குபவை:

- அண்மை காலத்தின் கடன்துறை வளர்ச்சியும் உற்பத்தி கலவையும்.
- வேலையின்மை வீதங்கள். மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (மொஉஉ) வீக்கம்
- வட்டி வீதங்கள்
- அரசாங்க சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளில் மாற்றங்கள்

குறிப்பு 11 இல் கடன்களும் முற்பணங்களின் பெறுமதி குறைப்பு நட்டங்களும் மேலும் விபரமாக வெளியிடப்பட்டுள்ளன.

**ஆ) கடன்தீர் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துகள்**

கடன்தீர் நிதி பின் மதிப்பில் உள்ள நிதியியல் சொத்துக்கள் சம்பந்தமாக (பிற வங்கிகளில் இருந்து வர வேண்டியவை, வாடிக்கையாளரின் கடன்களும் முற்கொடுப்பனவுகளும். மற்றும் முதிர்ச்சி வரை கொண்டுள்ள முதலீடுகள்) வங்கி முதலில் தனித்தனியாக குறிப்பிடக்கூடிய நிதியில் சொத்துக்களையும், குறிப்பிட முடியாத சொத்துக்களின் பகுதிகளையும் காணக்கூடிய ஊறுகள் உள்ளனவா என்று ஆராயும். காணக்கூடிய ஊறுகள் இல்லாதவிடத்து அது போன்ற ஆபத்துத் தன்மையுடைய சொத்துக்களை ஒன்ற சேர்த்து ஊறுகளுக்காக மதிப்பிடப்படும். தனித்தனி மதிப்பீடு செய்யப்பட்டு ஊறு உள்ளதாகக் காணப்பட்ட சொத்துக்கள் இந்த பகுப்பில் சேர்க்கப்பட மாட்டாது.

காணக்கூடிய ஊறு உண்டாயின் அந்த சொத்து கொண்டுள்ள தொகைக்கும் அந்த சொத்தால் ஏற்படும் எதிர்கால காசு ஒழுங்குக்கும் (ஏற்படும் என எதிர்பார்க்கும் இதுவரை கணக்கிடாத நட்டம் நீக்கலாக) இடையேயான வித்தியாசம் நட்டம் எனக் கொள்ளப்படும். சொத்து கொண்டுசெல் தொகை ஒரு விருப்பு கணக்கு மூலம் குறைக்கப்பட்டு நட்டத்தொகை வருமான கூற்றில் காட்டப்படும். வட்டி வருவாய் குறைக்கப்பட்டு கொண்டுசெல் தொகையில் தொடர்ந்தும் கணக்கிட்டு ஒருங்கு சேர்க்கப்படும். இதற்கு எதிர்கால காசு பாய்ச்சல் இடர் சம்பந்தமான நட்டத்திற்கு உபயோகித்த வட்டி வீதம் உபயோகிக்கப்படும்.

வட்டி வருமானம், வட்டியும் அது போன்ற வருமானங்களும் எனப்பதிவு செய்யப்படும். கடன்கள், எல்லா பொறுப்புகளும் உபயோகப்படுத்தப்பட்டு அல்லது வங்கிக்கு மாற்றப்பட்டு மீளளிப்புக்கான நிலைமை இல்லை என்ற நிலையில் கடன் சம்பந்தமான அலவன்சுகள் பதிவழிக்கப்படும். பின் ஒரு வருடத்தில் ஊறு கணக்கெடுக்கப்பட்ட பின் ஏற்படும் நிகழ்ச்சியால் தீர்மானிக்கப்பட்ட ஊறு குறைந்தாலோ கூடினாலோ முன்பு கணக்கெடுத்த ஊறு, விடுப்புக்கணக்கில் மாற்றம் செய்வதன் மூலம் கூட்டியோ, குறைக்கவோ செய்யப்படும். அழித்தொழிக்கப்பட்டது பின்னர் அறவிடப்பட்டால், அறவிடப்பட்ட தொகை “பெறுமதி குறைப்பு செலவில் கணக்கில்” வரவிலிடப்படும். நிதியியல் சொத்தின் இப்போதைய மதிப்பின் எதிர்கால காசு பாய்ச்சல் நிதியியல் சொத்தின் ஆரம்ப விவவீ முறையில் கழிவு செய்யப்படும்.

ஒரு கடனுக்கு மாற்றம் அடையும் வட்டி வீதம் இருந்தால், இடர் நட்டத்தை அளவிட தற்போதய விவவீ உபயோகிக்கப்படும். வங்கி ஒரு கடன் அல்லது முற்கொடுப்பனவின் வணிக சொத்தை மீள் பகுப்புச் செய்திருந்தால் இடர் நட்டத்தை அளவிடுவதற்கான கழிவு வீதம் மீள் பகுப்பின் போது தீர்மானிக்கப்பட்ட புதிய விவவீ ஆகும். சொத்துக்களைப் பொறுப்பாகக் கொண்டுள்ள நிதியியல் சொத்து தற்போதைய மதிப்பிற்காக எதிர்கால காசு பாய்சலில் கணக்கிடும் பொழுது, கையகப்படுத்தல் சம்பந்தமான செலவுகளாகும் கையகப்படுத்தல் எதிர்பார்க்கப்பட்டாலும் அல்லாவிடினும், கணக்கில் எடுக்கப்படும். கூட்டு முறையில் இடர் கணக்கிடப்படுவதற்கு நிதியியல் சொத்துக்கள் (கடன் ஆபத்து தன்மைகள், சொத்தின் தன்மை, ”கோள அமைப்பு, கொடுபட வேண்டிய தன்மை, ஒத்த சொத்துகளின் நிலை என்பவற்றைக் கணக்கெடுக்கும்) வங்கியின் உள்ளக கடன் பகுப்பு முறையின் படி பகுக்கப்படும். இடர் கணக்கிடுவதற்காக ஒருங்கே பகுக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களின் எதிர்கால காசு பாய்ச்சல் அதே போன்ற சொத்துக்களின் வரலாற்று நட்டங்கள் அடிப்படையில் திர்மானிக்கப்படும். வரலாற்று நட்டங்கள், தற்போதய கண்டு கொள்ளக்கூடிய திகதியில் கண்டு கொள்ளக்கூடிய, வரலாற்று அடிப்படையில் உள்ள இப்பொழுது இல்லாத காரணிகள் சம்பந்தமான மாற்றங்களுக்கு இடம் கொடுத்து நடைமுறைப்படுத்தப்படும்.

வருடா வருடம் தரவுகளில் காணக்கூடிய மாற்றங்களை (வேலை இல்லாமை வீதம், சொத்துக்கள் விலை பொருள்கள் விலை, கொடுப்பனவு நிலை, பகுதியில் நட்டங்களைக் காட்டும் மற்றைய காரணிகளும் அவற்றின் அளவும்) நேரடியாக கணக்கெடுக்கும் தீர்மானங்களைக் கொண்டு எதிர்கால காசு ஒழுங்கு நிர்ணயிக்கப்படும். நட்டங்களின் நிர்ணயத்திற்கும் உண்மை நட்டத்திற்கும் இடையேயான வித்தியாசத்தைக் குறைப்பதற்காக எதிர்கால காசு பாய்ச்சல் கணக்கிடும் முறையும் நிர்ணயங்களும் காலத்துக்காலம் மீளாய்வு செய்யப்படும்.

**இ) விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள்**

வங்கி ஒவ்வொரு நிதியியல் நிலைக்கூற்றையும் ஏதாவது காணக்கூடிய இடர் ஏற்படும் சாட்சியம் இருப்பதை மதிப்பிடுகிறது. இது விற்பனைக்குள்ள நிதியல் பத்திரங்களுக்கும் ஆகும்.

விற்பனைக்குள்ள கடன் பத்திரங்கள் விடயத்தில், தவணை முறையில் கழிவு பெறும் நிதியியல் சொத்துக்களைப் போன்றே ஏதாவது காணக்கூடிய இடர்கள் உள்ளனவா என்று வங்கி மதிப்பீடு செய்யும். எவ்வாறாயினும் தவணைக்கழிவு செய்த செலவின மதிப்பிற்கும் தற்போதய நல்லெண்ண மதிப்பிற்கும் உள்ள வித்தியாசம் மற்றும் ஏதாவது இடர் சம்பந்தமாக அந்த முதலீட்டில் முன்னைய வரவுக்கூற்றில் ஏற்படுத்திய தொகை கழிக்கப்பட்ட தொகையாகும்.

விற்பனைக்குள்ளவை எனப்பகுக்கப்பட்ட பங்கு முதலீடுகளில் குறிப்பிடக்கூடிய அல்லது நீண்டகால நல்லெண்ண மதிப்புக் குறைவு முதலீட்டிலும் குறைவாயின் அதுவும் காணக்கூடிய மதிப்பாக இருக்கும். குறிப்பிடக்கூடியது என்பது 20% மாகவும் நீண்டகாலம் என்பது ஆறு மாதத்திலும் கூடியதாகவும் வங்கி பொதுவாகக் கொள்ளும். இடர் ஒன்று இருக்கும் சாத்தியமிருக்குமிடத்து ஒருங்கு சேர் நட்டம் வாங்கிய விலைக்கும் தற்போதைய நல்லெண்ண மதிப்புக்கும் உள்ள வித்தியாசத்தில் அந்த முதலீட்டில் கண்டு கொள்ளப்பட்ட வருமானக்கூற்றில் கணக்கிடப்பட்ட பங்கு மதிப்பீட்டில் அகற்றப்படும். இடர் காரனமான பங்கு முதலீட்டின் நட்டம் வருமானக்கூற்றில் திருப்பிக் கழிக்கப்படாதவிடத்து மற்றய வருமானங்கள் கண்டு கொள்ளப்பட்ட பின் நல்லெண்ண மதிப்பை அதிகரிக்கும்.

## கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

**ஈ) மீளமைக்கப்பட்ட கடன்கள்**

வங்கி இயன்றவரை கடன் பொறுப்புக்களைக் கையேற்பதிலும் பார்க்க மீளமைக்க முயற்சிக்கின்றது. இது மீளளிப்புக் காலத்தை அதிகரித்து புதிய கடன் ஒழுங்குகளை ஏற்படுத்தும். ஒழுங்கு முறைகள் திரும்ப செய்து கொள்ளப்பட்டதும் இடர்கள் ஏற்கனவே உள்ள விவவீ முறையில் மீளமைக்கு முன் கணக்கிடப்பட்டு அந்த கடன் அதன் பின்னும் காலங்கடந்தது எனக்கொள்ளப்படுவதில்லை. மீளமைக்கப்பட்ட கடன்கள் எல்லா ஒழுங்கு முறைகளும் பின்பற்றப்படுவதையும் எதிர்கால கொடுப்பனவுகள் நடப்பதையும் உறுதி செய்யும் பொருட்டு முகாமைத்துவம் தொடர்ந்து மீளாய்வு செய்யும். கடன் தொடர்ந்தும் தனியாகவோ கூட்டாகவோ இடர்களுக்காகவோ மதிப்பீடு செய்யப்படும். இதில் பழைய விளைவு வட்டி வீதம் உபயோகிக்கப்படும்.

**உ) இணைப்பிணையங்களின் மதிப்பீடு**

நிதியியல் சொத்துகள் மீதான இடர்களை குறைப்பதற்காக இயலுமான இடங்களில் இணை பிணையங்களை வங்கி பயன்படுத்துகின்றது. காசு, பிணையங்கள், கடன்/உத்தரவாத கடிதம், அசையாச் சொத்துகள், கிடைக்க வேண்டியவை, பொருட்பட்டியல்கள், ஏனைய நிதி சொத்துகள். மற்றும் ஏனைய கடன் அபிவிருத்திகள் போன்ற பல்வேறு வகைகளில் இணைப்பிணையங்கள் வருகின்றன.

### 2.3.6. நிதியியல் பத்திரங்களை ஈடுசெய்தல்

நிதியியல் சொத்துகளும், நிதியியல் பொறுப்புகளும் ஈடு செய்யப்படும். நிதி நிலைமை கூற்றில் அறிவிக்கப்பட்ட தேறிய தொகையை. இனங்காணப்பட்ட தொகைகளை ஈடு செய்வதற்கான சட்ட உரித்தொன்று நிறைவேற்றப்பட்டிருந்தால் மட்டுமே தேறிய அடிப்படையில் கொடுத்துத் தீர்ப்பதற்கான உத்தேசம் காணப்பட்டால் அன்றி ஒரே நேரத்தில் சொத்தை பெறுவதற்கும் பொறுப்பை கொடுத்ததுத் தீர்ப்பதற்கும் முடியும். இது பொதுவாக பிரதான தேறிய ஒப்பந்தங்களில் ஏற்புடையதாகாது. எனவே, தொடர்புடைய சொத்துகளும், பொறுப்புகளும் நிதிக் கூற்றில் ஒட்டு மொத்தமாக அறிவிக்கப்படுகின்றது.

### 2.3.7. குத்தகை

ஒப்பந்தமொன்றின் சாராம்சத்தின் அடிப்படையில், ஒப்பந்தம் ஒன்று குத்தகையா அல்லது ஒரு குத்தகையை கொண்டுள்ளதா என்பது தீர்மானிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட சொத்து ஒன்றின் அல்லது சொத்துகளின் பயன்பாட்டில் ஒப்பந்தத்தின் நிறைவேற்றல் தங்கியுள்ளதா என்பதற்கும் மதிப்பீடு ஒன்று தேவைப்படுவதுடன், சொத்தை பயன்படுத்தவதற்கான உரித்தையும் ஒப்பந்தம் குறிப்பிடும்.

### 2.3.8. வருமானம் மற்றும் செலவு இனம்காணல்

வருமதி நம்பகமாக அளவிடக்கூடியதாகவும் ஏற்படக்கூடியதாகவும் ஏற்படக்கூடிய பொருளாதார நன்மை வங்கிக்குக் கிடைக்குமாயின் வருவாய் கணக்கில் எடுக்கப்படும். பின்வரும் குறிப்பிடப்பட்ட கணக்கெடுத்தல் முறை வருவாய் கணக்கில் எடுப்பதற்கு முன் நிறைவு செய்யப்பட வேண்டும்.

**அ) வட்டியும் அது போன்ற வருமானமும் செலவும்**

தவணைக்கழிவு செய்யப்பட்ட மதிப்பிடப்பட்ட நிதியியல் முதலீடுகளுக்கம், விற்பனைக்கும் உள்ளவையாகப் பகுக்கப்பட்ட வட்டி கிடைக்கும் நிதியியல் முதலீடுகளுக்கும், இலாப நட்டக் கணக்கூடாக நல்லெண்ண மதிப்பில் கொள்ளப்பட்ட நிதியியல் முதலீடுகளுக்கும், வட்டி வருவாய் அல்லது செலவு வி.வ.வீ.யை உபயோகித்து கணக்கிடப்படும் இந்த வி.வ.வீ. எதிர்பார்க்கும் காலத்திற்கு ஏற்படும் காசு கொடுப்பனவுகளையும், வருமதிகளையும் கணக்கிட உண்மையில் உபயோகிக்கப்படுகிறது. இது நிதியியல் சொத்துக்களுக்கும் பொறுப்புகளுக்கும் நிகர மதிப்பீட்டை அளப்பதற்கும் உபயோகிக்கப்படும்.

கணக்கிடுதல் நிதியியல் பத்திரத்தின் ஒப்பந்தக் காரணிகள் எல்லாவற்றையும் கணக்கில் எடுக்கும் (உதாரணமாக :- கொடுப்பனவு முறைகள்) பத்திரத்தில் நேரடி தொடர்புள்ள கட்டணங்கள், மதிப்பேற்று செலவினங்கள் போன்றவை வி.வ.வீ இன் பகுதியாக உள்ளன. ஆனால் இவை எதிர்கால வரவு நட்டங்கள் அல்ல. நிதியியல் சொத்தின் அல்லது நிதியில் பொறுப்பின் கொண்டுசெல் மதிப்பு வங்கி தனது கொடுப்பனவு வரவு நிர்ணயங்களை மீளமைக்கும் பொழுது மாற்றப்படும்.

**ஆ) கட்டணங்களும்/தரகும் வருமானம்**

வாடிக்கையாளர்களுக்கு வங்கி வழங்கும் அதன் பல்வேறு சேவைகளிலிருந்து கட்டணம் மற்றும் தரகு வருமானத்தை வங்கி ஈட்டுகின்றது. கட்டண வருமானத்தை பின்வரும் இரண்டு வகைப்படுத்தல்களினுள் பிரிக்கலாம்:-

**குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வழங்கப்படும் சேவைகளிலிருந்து ஈட்டப்படும் கட்டண வருமானம்**

காலப்பகுதி ஒன்றிற்குள் சேவை ஏற்பாடுகளிலிருந்து வருமான மீட்டும் கட்டணங்கள், தரகு வருமானமும் சொத்து முகாமைத்துவமும், பாதுகாத்தல் மற்றும் ஏனைய முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை வழங்குவதற்கான கட்டணம் என்பவை இக்கட்டணங்களில் உள்ளடங்கும். கடன் தொடர்பான கட்டணங்கள் ஒத்திவைக்கப்பட்டவையாகும். கடன் வீ.வ.வீ. சீராக்கங்களுக்கென இனங்காணப்படுபவையுமாக இருக்கும்.

**கொடுக்கல் வாங்கல் சேவைகளை வழங்குவதிலிருந்து பெறப்படும் கட்டண வருமானம்**

மூன்றாவது தரப்பு கொடுக்கல் வாங்கள் ஒன்றின் பேச்சு வார்த்தைகளிலிருந்து அல்லது பேச்சுவார்த்தையில் பங்கேற்பதிலிருந்து உருவாகும் கட்டணங்கள் பங்குகளை சுவீகரிப்பு ஒப்பந்தங்கள் அல்லது ஏனைய பிணையங்கள் அல்லது வர்தகமொன்றை கொள்வனவு அல்லது விற்பனை செய்வது போன்ற கொடுக்கல் வாங்கல்கள் பூரணமடைந்துள்ளதை இனங்காணுவது, குறிப்பிட்ட செயன்முறையுடன் தொடர்புடைய கட்டணங்கள் அல்லது கட்டணங்கள் தொடர்புடைய அலகுகளுடன் நிறைவேற்றப்பட்டிருப்பதை இனங்காணுவது.

**இ) பங்கிலாப வருமானம்**

கொடுப்பனவு நிறுவப்பட்டதும், பெற்றுக் கொள்வதற்கு வங்கிக்கு உள்ள உரித்தை இனங்காணுவதும் பங்கிலாப வருமானமாகும்.

**(ஈ) தேறிய வணிக வருமானம்**

உண்மை பெறுமதியின் மாற்றங்களிலிருந்து பெறப்படும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அனைத்தும் தொடர்புடைய வட்டி வருமானம் அல்லது நிதிச் சொத்துகளுக்கான செலவுகளும் பங்கிலாபங்களும்/மற்றும் வர்த்தகத்திற்காக பிடித்துவைத்துள்ளவையுமினது வணிக நடவடிக்கைகளிலிருந்து உருவாகும் விளைவுகள். பாதுகாப்பான கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும் எந்தவொரு திறமையின்மையையும் உள்ளடக்குகின்றது.

**உ) ஏனைய வருமானம்**

காசு அடிப்படையில், ஏனைய வருமானம் இனங்காணப்படுகின்றது.

**ஊ) ஏனைய செலவுகள்**

ஏனைய அனைத்து செலவுகளும், அவற்றின் தொடர்புடைய காலத்தில் உள்ளாக்கப்படுவதால் நிதியியல் கூற்றுகளில் இனங்காணப்படுகின்றது. வர்த்தகத்தின் செயற்பாட்டில் உள்ளாக்கப்பட்ட செலவினங்கள் யாவும், ஆண்டிற்கான இலாபத்தில் ஏற்பட்ட வருவாயாக விதிக்கப்பட்டு திறமையான மூலதன சொத்துகளாக பேணப்படுகின்றன.

## கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

**2.3.9. காசும் காசுக்கு சமனானவையும்**

கையிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள மீதிகள், வங்கிககளில் வைத்துள்ளவைகள், அழைப்பின் பேரிலும் குறுங்கால அறிவித்தலிலும் கிடைக்கும் பணம் என்பவை காசு மற்றும் குறுங்கால நிதியில் உள்ளடங்கும். நிதிக் கூற்றுகளின் குறிப்பு 9 இல் காசு மற்றும் குறுங்கால நிதி என்பவை தரப்பட்டுள்ளன.

**2.3.10. ஆதனங்களும் பொறிகளும் உபகரணங்களும்**

திரண்ட பெறுமானத் தேய்வின் கழிவிலும் பெறுமதியின் திரண்ட மதிப்புக் குறைப்பிலும் நாளாந்த சேவைகளின் கிரயம் தவிர்ந்த கிரயம் அல்லது பெறுமதியாக ஆதனங்களும் பொறிகளும் உபகரணங்களும் குறிப்பிடப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலத்தின் மாற்றங்கள், பெறுமானத் தேய்வுக் காலம் அல்லது முறை என்பதை எது பொருத்தமானதோ அதை மாற்றுவதனூடாக கணக்கிடப்படுகின்றதுடன், உத்தேச கணக்கீட்டு மாற்றங்களாக கருதப்படுகின்றது.

**அ) கிரய மாதிரி**

நாளாந்த சேவைகள், கிரயம் தவிர்ந்த பொறிகளும் உபகரணங்களும் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் மதிப்பீட்டின் திரண்ட பெறுமதிக் கழிவு என்பவை கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இனங்காணப்படும் அலகுகள் சந்திக்கப்படுமாயின் கிரயத்திற்கு உள்ளாக்கப்படும் போது பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதியை மீளளிப்பதற்கு ஏற்படும் கிரயம் இந்த கிரயத்தில் உள்ளடக்கப்படும்.

**ஆ) பின் தொடரும் கிரயம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் ஒரு பொருளின் பகுதி ஒன்று மீளளிக்கப்படுவதனால் ஏற்படும் கிரயம் பொருளின் கொண்டு செல்லும் தொகையில் இனங்காணப்படும். அப்பகுதியில் பதியப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் வங்கிக்குள் பாய்ச்சப்படும் என்பதற்கான சாத்தியம் காணப்படும் போதும் அதன் கிரயத்தை நம்பகத்தன்மையுடன் அறவிடலாம்.

**இ) புதுப்பித்தல் கிரயம்**

எதிர்கால பொருளாதார நன்மைகளை புதுப்பிப்பதற்கு அல்லது பராமரிப்பதற்கு என, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் திருத்த வேலைகள் அல்லது பராமரிப்புகளுக்கு ஏற்படும் செலவு, வருமானக் கூற்றில் உள்ளானவை என விதிக்கப்படும்.

**ஈ) மூலதன வேலைகளின் முன்னேற்றங்கள்**

கட்டிடங்கள், பாரிய பொதிகள் மற்றும் இயந்திரங்களின் நிர்மாணம், மற்றும் முறைமை அபிவிருத்திகள் என்பவற்றை மூலதனமாக்க காத்திருக்கும் நேரடியாக உள்ளாக்கப்படும் மூலதன இயல்புள்ள செலவுகளாக இவை இருக்கின்றன. இவை நிதிநிலைமை கூற்றில் கிரயத்தில் தரப்பட்டுள்ளன.

**உ) பெறுமானத் தேய்வு**

ஆதனங்கள் மற்றும் உபகரண்களின் கிரயம் அவற்றின் உத்தேச மதிப்பீட்டின் பயன்பாட்டு காலத்தில் நேர் வரிசை முறையை பயன்படுத்தி பெறுமானத் தேய்வு கணக்கிடப்படுகின்றது. உத்தேச மதிப்பீட்டு பயன்பாட்டுக் காலம் பின்வருமாறு:-

அலுவலக கட்டிடங்களில் விரிவாக்கங்களை செய்வதற்காக மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் மற்றும் திருத்த வேலைகளுக்கான கிரயம், 4 ஆண்டுகளுக்கும் அதிகமான கடன்தீர் நிதியாக அல்லது ஆரம்ப குத்தகை காலமாக அவற்றில் எது குறைவானதோ அதில் அளவிடப்படும். கணனி மென் பொருள் 4 ஆண்டுகளுக்கும் அதிகமான காலத்திற்கு கடன்தீர் நிதியாக இருக்கும்.

| சொத்தின் வகை | பெறுமானத் தேய்வு காலம் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | ஆண்டிற்கு 25.00% |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | ஆண்டிற்கு 12.50% |
| அலுவலக உபகரணங்கள் | ஆண்டிற்கு 12.50% |
| கணக்கிடும் உபகரணங்கள் | ஆண்டிற்கு 25.00% |
| கணனிகள் | ஆண்டிற்கு 25.00% |
| ஏனையவை | ஆண்டிற்கு 12.50% |

**ஊ) இணங்காணல் நிறுத்தப்பட்டவை**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அகற்றும் போது அல்லது அவற்றின் பயன்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் எவையும் கிடைக்காத போது இனங்காணல் நிறுத்தப்படுகின்றது. சொத்து இனங்காணப்படுவது நிறுத்தப்பட்ட ஆண்டின் வருமானக் கூற்றில், ஏனைய செயற்பாட்டு வருமானங்களில், சொத்தை இனங்காணுவது நிறுத்தப்பட்டதால் உருவான எந்தவொரு இலாபம் அல்லது நட்டம் குறிப்பிடப்படுகின்றது. இது தேறிய அகற்றல்களின் வருவாய்களுக்கும், சொத்தின் கொண்டு செல் தொகைக்கும் இடையிலான வேறுபாடாக கணக்கிடப்படுகின்றது.

**2.3.11. கட்புலனாகாச் சொத்துக்கள்**

கணனி மென்பொருள்கள் உட்பட வங்கியின் ஏனைய கட்புலனாகாச் சொத்துகளின் மதிப்பு நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகவும் அதில் இருந்து எதிர்காலத்தில் அது சம்பந்தமான பொருளாதார நன்மை வங்கிக்கு வந்து சேருமாயினும் கட்புலனாகாச் சொத்துகள் என கொள்ளப்படும். கட்புலனாகாச் சொத்துகள் தனியாக கையேற்கப்பட்டு அவற்றின் ஆரம்ப மதிப்புக் கணிப்பில் அளவிடப்படும்.

ஒரு வியாபாரக்கூட்டு மூலமாகக் கைகொள்ளப்படும் கட்புலனாகாச் சொத்துக்கள் அவை கையேற்கப்படும் தினத்தில் உள்ள நல்லெண்ண மதிப்பில் ஏற்கப்படும். ஆரம்ப கணிப்பின் பின், ஒருங்கு சேர் தவணைக் கழிவுகள், ஒருங்கு சேர் இடர்கள் என்பன ஆரம்ப மதிப்பீட்டில் இருந்து கழிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படும்.

